# தினச்செய்தி வாரமலர்

Registered as a Newspaper

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016




# சந்திக்கு சந்தி சண்டியர் கூட்டம்



யாழ் குடாநாட்டில் சந்திக்கு சந்தி சண்டியர் கூட்டம் கட்டுக் கடங்காமல் பெருகி வருகின்றது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, களவு, பாலியல் வன்புணர்வு மற்றும் அச்சுறுத்திக் கப்பம் கேட்பது ஆகிய குற்றச் செயல்கள் தினசரி அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இந்தச் சண்டியர் கூட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்தாலும் இன்னும் அவர்கள் கட்டுப் பாட்டுக்குள் அடங்க வில்லை. அடங்க மறுக்கின்றனர்.


பக்கம் 02 இல்



யாழ்ப்பாணக் கல்வி அன்றும் இன்றும் 05 இல்


# காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை மீள்நிர்மாணத்திற்கு நடவடிக்கை







## ஆர்வத்தைத் தெரிவிக்கும் அறிவுறுத்தல் விரைவில் கோரப்படும்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் கட்டியெழுப்பு வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. விரைவில் சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து ஆர்வத்தைத் தெரிவிக்கும் அறிவுறுத்தல் கோரப்படவுள்ளது.

சீமெந்துத் தொழிற்சாலையை மறுநிர்மாணம் செய்வதற்கு, வர்த்தக கைத் தொழில் அமைச்சின் தலைமையில், அமைச்சரவை உப குழு, அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் கட்டுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவை உப குழுவில், பொது வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் கபீர் காசிம், கேந்திர மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் வர்த்தகக் கைத் தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.


பக்கம் 22 இல்







தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் விஜயகாந்தின் நிலை ...?

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலிற்கான அறிவித்தல் வெளிவந்து விட்டது. அதையடுத்து அங்குள்ள அரசியற் கட்சிகள் கூட்டணி அமைப்பது பற்றிய பேச்சுவார்த்தையில் தற்போது ஈடுபடுகின்றன.

கருணாநிதி தலைமையில் தி.மு.க ஒருபுறம், தமிழக முதல்வர் ஜெலலிதாவின் அ.தி.மு.க மறுபுறம்.

மேலும் வேறு சிறிய கட்சிகள் மூன்றாவது அணியிலும் உள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஏற்கனவே கூட்டணி அமைத்துவிட்டது.

இந்தக் கூட்டணிகளை அடுத்து, காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தேர்தல் கூட்டணி வைத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன.

ஒரு சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடைபெற்றுவிட்டன.

'கப்டன்' விஜயகாந்தின் தே.மு.தி.கவுடன் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என பாரதீய ஜனதாக் கட்சி ஓர் சந்தர்ப்பத்தில் ஆர்வம் காட்டியது

மூன்றாவது அணியொன்றும் விஜயகாந்துடன் தேர்தல் உடன்படிக்கை செய்ய வேண்டும் என ஆர்வம் காட்டுகின்றது.

இருந்த போதும், விஜயகாந்த் "கழுவிய மீனில் நழுவிய மீன் போல" பிடி கொடாமலே இருந்து வந்தார்.

ஆனால் அண்மையில் தாங்கள் தேர்தலில் தனித்தே போட்டியிடப் போவதாக தே.மு.தி.க அறிவித்துள்ளது.

இது ஒரு புதிய திருப்பமாகும்.

சென்ற 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்சபைத் தேர்தலின் போது, விஜயகாந்தின் தே.மு.தி.கழகத்துடன் இணைந்து ஜெயலலிதா கூட்டணி வைத்துப் போட்டியிட்டார். இந்தப் போட்டியிலே அன்று அகில இலங்கை அண்ணா திராவிடக் கட்சி இருநூற்று மூன்று ஆசனங்களைப் பெற்றது.

அதில் ஜெயலலிதாவின் கட்சி மாத்திரம் நூற்று ஐம்பது ஆசனங்களுக்குமேல்கைப்பற்றி வெற்றி பெற்றது.

ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்த விஜயகாந்தின் கட்சி இருபத்து ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.

அந்தத் தேர்தலில் இருபத்து மூன்று ஆசனங்கள் தான் தி.மு.கட்சி பெற்றது.

அதையடுத்து விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அன்று விஜயகாந்த் அ.தி.மு.க.வுடன் தேர்தல் தொகுதி உடன்படிக்கை செய்து தேர்தலில் போட்டியிட்டமையால் தான் இருபத்து ஒன்பது தொகுதி கிடைத்தது எனக் கூறுபவர்களும் உண்டு.

ஆனால் அதே நிலைமையை, 2016 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமாகாது.

தே.மு.தி.கழகம் இம்முறை தனித்துப் போட்டியிடவுள்ளது.

சென்ற முறை வென்ற இருபத்து ஒன்பது தொகுதிகளையும் தக்க வைப்பார்களா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# சந்திக்கு சந்தி...

இந்தப் பகுதியில் வாழும் வாலிபர்கள் கல்வி பொதுத் தராதர உயர்தரக் கல்வியைக் கற்ற பின்னர் அவர்கள் உயர் கல்வியை மேலும் தொடர முடியாத காரணத்தினாலும், வேலை வாய்ப்பில்லாத காரணத்தினாலும் நாற்சந்திகளில் நின்று அரட்டை அடித்து, பின்னர் 'லீசிங்கில்' மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்தும், லீசிங்கில் வாங்கிய மோட்டார் சைக்கிள்களுக்கு மாதாந்த தவணைப் பணம் கட்ட முடியாமல் போக,அவர்கள் ஆரம்பத்தில் சின்னச் சின்ன வீடுகளில் கொள்ளைகளில் ஈடுபட்டு, பின்னர் பெரிய கொள்ளைக் கூட்டமாக மாறி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தென்னிலங்கையில் அட்டகாசம் புரியும் "பாதாள உலகக்" கோஷ்டியினரை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சண்டியர் கோஷ்டியினரின் அட்டகாசத்தை இதுவரை யாருமே கண்டு கொள்வதில்லை.

அண்மையில் 'தினச்செய்தி' வடமராட்சிப் பகுதியில் நடைபெறும் சண்டியர் அட்டகாசங்களைப் பற்றி ஓர் ஆய்வு செய்தது. அந்த ஆய்வின்போது இது சம்பந்தமாக முதலில் காங்கேசன் துறை பொலிஸ் பிராந்தியம் 2 இற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் ஏம்.எம். ஜெளபரைத் தினச்செய்தி சந்தித்து பேசிய போது தனது பிராந்தியத்தில் நடைபெறும் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பதாகத் தெரிவித்தார். பாலியல் வல்லுறவு, போதைப் பொருள் பாவனை போன்றவற்றை இல்லாமல் ஒழிக்க வேண்டுமாயின் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றும் வற்புறுத்திக் கூறினார். தினச்செய்தியின் ஆய்வு முடிவுப்படி:

1. அல்வாய் திடல் – முத்துமாரி அம்மன் கோவிலுக்குப் பின்னால் – இங்கு குமார் குரூப் இயங்குகிறது. இந்தக் கோஷ்டி களவு, கொள்ளை, கொலை ஆகியவற்றில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. சென்ற ஏப்ரல் 25 ஆம் திகதி தகராறு ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் கல்லால் தாக்கிக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் சகோதரர்கள் மூவர் சந்தேக நபர்களாக இனம்கண்டு தேடப்பட்டு வந்தனர். இவர்களில் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில் பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார். பிரதான சந்தேக நபர் எனக் கருதப்படும் மு. சதீஸ்குமார் அல்வாயில் உள்ள ஒரு வீட்டில் ஒழித்திருந்தார்.

   இந்தச் சந்தேக நபர் சம்பந்தமாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜௌபர தலைமையிலான பொலிஸ் குழு குறித்த சந்தேகநபரை கைது செய்யச் சென்றது. பொலிஸாரைக் கண்டதும் குறித்த சந்தேக நபர் தப்பிச் செல்ல எத்தனித்தார். ஆனால் பொலிசார் அவர் இருந்த வீட்டை சுற்றி வளைத்தனர். சந்தேக நபர் பொலிஸாரைத் தாக்கி வாளால் வெட்ட முயன்றார். அதையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் தம்மை வாளால் வெட்ட முயன்ற சதீஸ் குமாரை காலில் சுட்டுக் கைது செய்தனர்.

2. வதிரிச் சந்தி – நெல்லியடிக்கும் வதிரிச் சந்திக்கும் இடையில் உள்ளது புளியடிச் சந்தி. இது திக்கம் போவதற்கு முன் உள்ள முதல் சந்தியாகும்.


ஏம்.எம். ஜௌபர்
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

இங்கு மின்னல் குரூப் கபிலன் தலைமையில் இயங்குகின்றது. இவர்களின் முக்கியமான சேஷ்டைகளில் ஒன்று பெண் பிள்ளைகளை ஆபாசமாகப் படம் எடுப்பது. இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் முன்பு ஒருமுறை பனைமரத்தில் ஏறிநின்று கொண்டு பக்கத்து வீட்டில் குளித்துக் கொண்டு நின்ற யுவதியைப் படம் எடுத்து அதை இணையத்தில் போடுவோம் என்று வெருட்டினார்கள்.அந்த பெண்பிள்ளையை தங்கள் இஷ்டத்திற்கு இணங்குமாறு வெருட்டி உருட்டினார்கள். அந்தப் பிள்ளை பயந்து மருண்டு இறுதியில் தற்கொலை செய்து கொண்டது.

அண்மையில் வல்வெட்டித் துறையில் வசதியான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஓர் பெண்ணுக்கு கல்யாணம் பேசி திகதியையும் குறித்து விட்டார்கள். மறுநாள் காலையில் கல்யாணம். ஆனால் முதல்நாள் காலை அந்தப் பெண் பிள்ளையின் நிர்வாணப்படத்தை பிரசுரிக்கப்போகின்றோம் என்று முகநூல் மூலம் அச்சுறுத்தினார்கள். செய்வதறியாமல் பெற்றோர்கள் திகைத்தார்கள். இந்த விடயம் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியம் 2 இற்குப் பொறுப்பான ஏம்.எம். ஜௌபர் இன் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்த அச்சுறுத்தல் நோர்வேயில் உள்ள, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் ஒருவரால் விடப்பட்டது என்று தெரியவந்தது. மேலும் அந்த நிர்வாணப் படத்தில் அந்தப் பெண்ணின் முகம் தான் உண்மையானது என்றும் மிகுதி உடல் வேறு யாருடையதோ என்றும் அந்த முகத்துடன் உடலை இணைத்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து 'மார்பின்' செய்து அந்த நிர்வாண புகைப்படத்தை வெளியிட்ட இணையத் தளத்தை முடக்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார்கள்.

மேலும் போலி முகநூல் கணக்குகளால் ஏமாறுபவர்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. போலி முகநூல் கணக்குகளால் ஏமாற்றப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் இதுவரை 20இற்கு மேற்பட்டவர்கள் என்று தெரிய வருகின்றது. போலி முகநூல் கணக்கு மூலம் அறிமுகமாகிய ஒருவரால் நெல்லியடியில் பெண் ஒருவர் 57 வயது நபரிடம் ரூபா 12 இலட்சத்தை இழந்துள்ளார். இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடக்கின்றது.

அதேபோல, கரவெட்டியில் உள்ள ஒருவர் மனைவியின் தங்கையின் மீது தப்பான ஆசை கொண்டு அவரைத் திருமணம் செய்வதற்காக அந்தப் பெண்ணின் 'மார்பின்' செய்யப்பட்ட படத்தை முகநூலில் பதிய விட்டார். மேலும் இன்னொரு பெண் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் தன்னை மண முடிப்பார் என்று நம்பி அவருடன் உடலுறவு கொண்டு ஏமாந்துள்ளார்.

இவ்வாறு 'சைபர் கிரைம் (Cyber Crime)' இற்குப் பேர்போன இடமாக நோர்வே மாறி வருகின்றது. அங்குள்ள ஒருவர் இங்கு தனது சில அடியாட்களை வைத்துக்கொண்டு பெண்களை வெருட்டி, பெற்றோரை வெருட்டி காசு கறப்பதாகத் தெரியவந்துள்ளது. சைபர் கிரைம் ஒருபுறம் தலைவிரித்தாடும் அதே நேரத்தில் சண்டியர் கோஷ்டியினர் துன்னாலை, கலிகைச்சந்தி, கன்பொல்லை, வல்வெட்டித்துறை–நெடியகாடு, கொற்றாவத்தை, பருத்தித்துறை கோரியடி, நெல்லண்டை அம்மன் கோவில் வீதி, மாலுசந்தி அத்தாய் குரூப் – இவர்கள் தான் சில காலத்திற்கு முன்பு நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் விளையாடிய சுன்னாகத்தைச் சேர்ந்த அணியினரை வாளால் வெட்டிக் கலைத்தவர்களாவர்.


மேலும் திக்கம் குரூப், மூத்த விநாயகர் கோவிலடி குரூப் இந்த சண்டியர் கோஷ்டி லீசிங்கில் பெற்ற மோட்டார் சைக்கிளில் ஓடித்திரியும் அவர்கள் ஆட்களை அடித்து வெட்டப்போகும் போது இரவோ பகலோ கையில் நீளமான சபுராய் வாள்களை கொண்டு செல்கிறார்கள்.

இந்த சண்டியர் கோஷ்டியை பொலிஸார் ஏனோ தானோ என்று கண்டு கொள்கிறார்கள் இல்லை. இந்த கோஷ்டியினர் பணம் வாங்கிக்கொண்டு ஆட்களை கொலை செய்கிறார்கள். பொலிஸிற்கு சில லட்சங்கள் கைமாறியவுடன் இந்தக் கோஷ்டியின் அட்டகாசத்தை வசதியாக கண்டுகொள்ளாமல் விடுகிறார்கள்.

என்றைக்கு இந்த சண்டியர் கோஷ்டி கைகளில் சுடுகலன்கள் SMG, LNG போன்றவை வந்து சேர்கின்றனவோ அன்று இந்தக் கோஷ்டிகள் போராட்டக் குழுக்களாக மாறும் சந்தர்ப்பம் ஏற்படும். 1970ஆம் ஆண்டுகளில் அன்று இந்த சண்டியர் கோஷ்டிகள் தான் பின்பு போராட்டக் குழுக்களாக மாறின. இதேநிலை மீண்டும் தோன்றக் கூடாது.

பொலிஸார் சண்டியர் கோஷ்டியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என தங்கள் ஆதங்கத்தை தினச்செய்திக்கு மக்கள் தெரிவித்துள்ளனர்.

# நெலும் பொக்குன ஒரு கக்கூசு போச்சி



நெலும் பொக்குன தாமரைத் தடாகம் இன்றைய ராஜபக்ஸ தியேட்டர் பார்க்கின்ற பொழுது ஒரு கக்கூசு போச்சி போல தோன்றுகின்றது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா தெரிவித்தார்.

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசிய அவர் கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள நெலும் பொக்குன என்றழைக்கப்படும் ராஜபக்ஷ கலையரங்கம் பார்க்கின்ற பொழுது ஒரு கக்கூசு போச்சி போலத் தான் இருக்கின்றது என்று கூறினார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பிலுள்ள கட்டடங்களில் இது மிகவும் கேவலமாக அமைந்துள்ளது – கண் திருஷ்டி பொம்மை போல.

இந்த நெலும் பொக்குன சென்ற 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அரசாங்கத்தால் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூபா 3080 மில்லியன் செலவானது. இதில் ரூபா 2430 மில்லியனை சீன அரசாங்கம் வழங்கியது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் கணவரான காலம் சென்ற விஜய குமாரதுங்கவின் ஞாபகார்த்தமாக தேசிய கலை மன்றம் ஒன்றினைக் கட்டித் தருவதற்கு சீன அரசாங்கம் ஆர்வம் தெரிவித்தது.

அதையடுத்து 2006 ஆம் ஆண்டு இந்தக் கட்டட வேலைகள் ஆரம்பமாகியது.

இவ்வாறு விஜய குமாரதுங்கவின் ஞாபகார்த்தமாக சீன அரசாங்கத்தால் கட்ட ஆரம்பிக்கப்பட்ட கலைமன்றம் பின்னர் மகிந்த ராஜபக்ஷவினால் பெயர் சூட்டப்பட்டு திட்டமிட்ட கட்டடத்தின் அமைப்புக்கள் எல்லாம் மாற்றப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இன்று நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் கொழும்பிலுள்ள கட்டடங்கள் மத்தியில் கண் திருஷ்டியாக சோலைக் கொல்லை பொம்மை போல இருப்பதாகவும் இது கக்கூசு போச்சி போல தோற்றமளிப்பதாகவும் சந்திரிக்கா குமாரதுங்க காட்டமாகத் தெரிவித்தார்.

# கூகுள் இணையத் தளத்தில் அதிகம் தேடப்படும் விஜயகாந்த்

(சென்னை)



தமிழக சட்டசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக விஜயகாந்த் அறிவித்த பின்னர், இந்திய அளவில் தே.மு.தி.க. மற்றும் விஜயகாந்த் பெயர் கூகுள் 'ட்ரெண்டிங்கில்' அதிகரித்துள்ளது.

அது மட்டுமன்றி இந்த ட்ரெண்டில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. பின்னுக்கு தள்ளப்பட்டது. விஜயகாந்திற்குப் பின்னால்தான் கருணாநிதி, ஜெயலலிதாவும் உள்ளனர்.

சட்டசபைத் தேர்தல் களம் படு பரபரப்பாக உள்ளது.

தேர்தலில் யாருடன் விஜயகாந்த் கூட்டணி சேருவார் என்று அரசியல் கட்சிகளும், வாக்காளர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, தனித்துத்தான் போட்டியிடப்போகிறேன் என்று மகளிரணி மாநாட்டில் பேசி அரசியல் களத்தை மேலும் பரபரப்பாக்கியுள்ளார்.

# போதைப்பொருள் குற்றச்சாட்டு மறுக்கிறார் சரபோவா

(நியூயோர்க்)



பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா சரபோவா தனக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள போதைப்பொருள் உட்கொண்ட குற்றச்சாட்டை வன்மையாக மறுத்துள்ளார்.

அவரது முகநூலில் அவர் வெள்ளி இரவு குறிப்பிட்ட போது, தான் உட்கொண்ட "மெல்டோனியம்" என்ற மருந்து போதைப் பொருள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், இதுசம்பந்தமாகத் தனக்கு ஐந்து முறை மின்னஞ்சல் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்பதையும் அவர் கடுமையாக மறுத்துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த மரியா சரபோவா சென்ற ஜனவரி மாதம் "அவுஸ்ரேலிய ஓபனின்" போது போதைப்பொருள் உட்கொண்டுள்ளார் என பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டு, டென்னிஸ் விளையாட அவருக்கு நீண்டகாலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. டென்னிஸ் விளையாட்டின் முன்னாள் முதலாவது இடத்திலிருந்த வீராங்கனை சரபோவா.

அவர் தனது முகநூலில் குறிப்பிடும் போது:

தனக்கு எச்சரிக்கை செய்து மின்னஞ்சல் எதுவும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

# பதின்மூன்று தமிழ் அகதிகள் அடுத்த வாரம் இலங்கைக்கு

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் பதின்மூன்று (13) இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து எதிர்வரும் 2016 மார்ச் 15 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதர உள்ளனர்.

இவர்கள் மதுரையிலிருந்து மிஹின்லங்கா விமானத்தில் வருவுள்ளனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இலங்கை விமான சேவை நிறுவனமும் வரும் அகதிகளின் பயணப்பொதியின் அளவை 40 கிலோகிராமிலிருந்து 60 கிலோகிராமிற்கு அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 13 பேரில் 8 ஆண்களும் 5 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் அமெரிக்க டொலர்கள் எழுபத்து ஐந்தும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் அமெரிக்க டொலர்கள் பத்தொன்பதும், உணவு அல்லாத பணநன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் அமெரிக்க டொலர்கள் எழுபத்து ஐந்தும் வழங்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4,641 இலங்கைத் தமிழ் அகதிகள் (1,680 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும் இந்தியாவில் 64,000 பேர் 109 முகாம்களில் இருக்கின்றனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் அவர்கள் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தார்.

தற்பொழுது தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் விரிவான கருத்திட்ட முன்மொழிவுகளை அனுமதிப்பது தொடர்பான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ் அமைச்சானது, வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடுகளையும் வழங்குமாறு, ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது.

# நீரில் மூழ்கி இளைஞன் மரணம்

(மஸ்கெலிய நிருபர் எஸ் பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமிமலை ஸ்ரன்பி தோட்ட பெரிய சூரிய கங்கை பிரிவில் குளிக்கச் சென்ற 23 வயதுடைய சிம்ரான் என்ற பாணந்துறையைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி மரணித்துள்ளான்.

இளைஞனது சடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறந்த இளைஞன் பாணந்துறையில் இருந்து திருமண வீட்டிற்கு சாமிமலைக்கு வந்த போது நேற்றுக் காலை 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என மஸ்கெலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிரோன் தெரிவித்தார்.

# சுன்னாகம் ஐயனார் வருடாந்த மகோற்சவம்



சுன்னாகம் தாளையடி அருள்மிகு ஐயனார் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 21 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 22 ஆம் திகதி இரதோற்சவமும், 23 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். தினமும் பகல் திருவிழா காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவுபெறும். மாலைத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிக்கு நிறைவுபெறும்.

முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் மகோற்சவத்தை நடாத்தி வைப்பார்.



# அரசகேசரியின் பதில்கள்

கேள்வி: போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்டபோது பிரபாகரன் உயிருடனேயே இருந்ததாக அமைச்சர் சரத் பொன்சேகா கூறியுள்ளாரே? இதிலுள்ள மர்மம்தான் என்ன அரசகேசரியாரே?

பதில்: அமைச்சர் பொன்சேகாவுக்குத்தான் வெளிச்சம்.

**பகீரதன், முல்லைத்தீவு.**

கேள்வி: *இலங்கையில் நீண்டகாலமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போது நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளமை பற்றி யாது கூற விரும்புகிறீர்?*

பதில்: எரிக் சொல்ஹெய்ம் கூறி பிரயோசனமில்லை. இந்த நாட்டு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்கள் மற்றும் இந்த நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை இனமான சிங்களவர்களே.

**கருணாகரன், கிளிநொச்சி.**

கேள்வி: புலிகளிடம் கைப்பற்றிய தங்க நகைகளில் 40 கிலோவிற்கு என்ன நடந்தது என அநுரகுமார கேள்வியெழுப்பியுள்ளாரே?

பதில்: அதற்கான பதிலை நீங்கள் என்னிடம் கேட்கக்கூடாதே. கேட்கவேண்டியது மகிந்தவிடம் மைத்திரியிடம் ரணிலிடம்.

**பார்த்தீபன், கோண்டாவில்.**

கேள்வி: *தமிழ்மக்களை அழிக்கும் கண்மூடித்தனமான தாக்குதல்களை இராணுவம் நடத்தவில்லையென அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார். அவ்வாறெனில் வன்னியில் உயிரிழந்த பொதுமக்களை கொன்றது யார்?*

பதில்: சமரசிங்கவிற்குத்தான் வெளிச்சம்.

**விஜயமாலா, முள்ளியவளை.**

கேள்வி: *கைதிகளின் உண்ணாவிரதத்தை கூட்டமைப்பின் தலைமையும் கண்டு கொள்ளவில்லையே?*

பதில் : கண்டு கொண்டாலும் அவர்களால் என்ன செய்ய முடியும்.

**பியந்தி, குருநகர்.**




கேள்வி: *மீண்டும் தெற்கில் துப்பாக்கி கலாசாரம் தலையெடுத்துள்ளது போல் தெரிகிறதே?*

பதில்: துப்பாக்கி கலாசாரம் என்பது சர்வதேச மயப்பட்டது. இந்த கலாசாரம் தெற்கிற்கும் வடக்கிற்கும் மாத்திரம் சொந்தமல்ல. சர்வமும் வியாபித்துள்ளது.

**பாலேந்திரன், வவுனியா.**

கேள்வி- *இடைநிறுத்தப்பட்ட கொழும்பு நகர திட்டத்தை தொடர சீனாவிற்கு அனுமதியளிக்க அமைச்சரவை பச்சைக்கொடி காட்டியுள்ளதே? அவ்வாறெனில் நல்லாட்சி அரசும் சீனா பக்கம் சாய்வதாக எடுத்துக் கொள்ளலாமா?*

பதில்: அது சரி சீனா எப்போது கெட்ட ஆட்சி பக்கம் நின்றது.

**விக்டர்சோசை, மன்னார்.**

கேள்வி: *அடுத்த சில மாதங்கள் இலங்கைக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது என எதை வைத்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்?*

பதில்: நாட்டில் செய்யமுன் வருவதாக குறிப்பிடப்பட்டமாற்றங்களை முன்வைத்தே இந்தக் கருத்தினை அவர் குறிப்பிட்டுள்ளார். எங்களுடைய தலைவர்கள் பேச்சில் ஹீரோக்கள். செயலில் வீரோக்கள். இது அவருக்கு தெரியாது போலும்.

**ரஹீம், புத்தளம்.**

கேள்வி: *நல்லாட்சி அரசும் தமிழர்களை பாரபட்சத்துடன் நடாத்துவதாக சம்பந்தன் குற்றம் சாட்டியுள்ளாரே?*

பதில்: அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.

**உதயன் திருமலை.**

கேள்வி: *தமிழக தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் நளினி முருகன் உட்பட 7 பேரின் விடுதலையை கையில் எடுத்துள்ளாரே ஜெயலலிதா?*

பதில்: இது ஒரு வாக்குப் பெட்டி அரசியல்.

**தாசன், பளை.**



# யாழ்ப்பாணக் கல்வி முறை அன்றும் இன்றும்



ஒரு நாட்டின் வளர்ச்சிப் போக்கு அந்நாட்டின் கல்வித்துறை வளர்ச்சி, போசாக்கு மட்டம், சுகாதார மருத்துவ வசதி, பொழுது போக்கு அம்சம், ஆயுட்கால எதிர்பார்ப்பு, தலா வருமானம், பௌதீக வாழ்க்கைச் சுட்டெண், பண்புத்தரச் சுட்டி போன்ற பல்வேறு காரணங்கள் மூலம் அளவிடப்படுகின்றதாயினும் கல்வித்துறை முன்னேற்றம் என்பது மிக முக்கிய காரணியாக அமைகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

அந்த வகையில் இலங்கையின் சிரசு என்று வர்ணிக்கப்படுகின்ற யாழ்ப்பாணம் கல்வித்துறை வளர்ச்சியில் மிக உச்ச நிலையில் காணப்பட்டமை கல்வியியலாளர்கள் பலரும் ஏற்றுக்கொண்ட உண்மை. ஆனால் இன்று யாழ்ப்பாணக் கல்வி நிலையானது சற்று மந்த நிலையிலேயே உள்ளது என்பதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

1980 களுக்கு முற்பட்ட காலத்தில் மிகச் சிறந்த கல்வியியலாளர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்து கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் மிக உயர் பதவிகளை அலங்கரித்தவர்கள் என்பதனை நன்றியுடன் நினைவுகூர வேண்டியவர்களாக உள்ளோம்.

அவ்வகையில் இலங்கை அரசியலில் மாபெரும் தலைவர்களாக திகழ்ந்து தமிழ், சிங்கள மக்களின் மதிப்புக்குரிய தலைவர்களாகத் திகழ்ந்த சேர் பொன். இராமநாதன், இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகத் திகழ்ந்த சேர் பொன். அருணாச்சலம், கலாநிதி ஆனந்த குமாரசுவாமி போன்றோர் மிகச்சிறந்த கல்விமான்களாகவும், இலங்கை அரசியல் வரலாற்றில் தங்களுடைய அபாரமான ஆற்றலால் தங்களுக்கென தனி முத்திரையைப் பெற்றிருந்தவர்களாவர்.

அதுமட்டுமன்றி நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், இருபாலை சேனாதிராய முதலியார், இணுவில் சின்னத்தம்பிப் புலவர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர், அவர் மகன் சிவப்பிரகாச பண்டிதர், சி. வை. தாமோதரம் பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் தமிழ் அன்னைக்கு அணி செய்த அறிஞர்களாகப் போற்றப்படுகின்றார்கள்.

மறுவகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் தங்களுக்கென தனி முத்திரையை பதித்துக் கொண்டவர்கள் வரிசையில் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்த காலம் சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபித்த அப்புக்காத்து ஜி.ஜி. பொன்னம்பலம், திரு.மு. திருச்செல்வம் (அன்றைய தமிழ்த் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட ட்ரயல் அட்பார் வழக்கில் ஆஜராகி வெற்றியை தேடிக்கொடுத்தோர்) அடங்காத் தமிழர் முன்னணி என்ற அமைப்பைத் தொடங்கிய பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் போன்ற மிகப் பெரும் அரசியல்வாதிகள் இலங்கை அரசியல் வரலாற்றில் தமக்கென தனித்தடம் பதித்தவர்களாக விளங்கினார்கள் என்பதில் ஐயமில்லை.

இதனைவிட யாழ்ப்பாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய ஸ்ரீகாந்தா, அன்றைய இலங்கைப் பிரதமர் ஆர். பிரேமதாசாவின் நிரந்தர செயலாளராகக் கடமையாற்றிய ஆர். பாஸ்கரலிங்கம், போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்ந்தனர்.

இவ்வாறு உயர் நிலையில் காணப்பட்ட யாழ்ப்பாண மக்களின் கல்வி நிலையானது இன்று தாழ்ந்த நிலையில் காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்ற போதிலும், அக் காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதா இல்லையா என்பது விவாதத்திற்குரிய ஒன்றாகக் காணப்படினும் யாழ்ப்பாணக் கல்வி நிலை குறித்து சிந்தனைக்குட்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.


அந்த வகையில் 1960 காலப் பகுதிகளில் கல்வி நிலை குறித்து சற்று சிந்திப்போமாக இருந்தால் உயிர் எழுத்துக்கள் மணல் பரப்பி மணல் மீது கையால் எழுதும் முறை கையாளப்பட்டு வந்தது. ஆசிரியர் என்பவர் உபாத்தியாயர் என்ற நிலையில் ஒவ்வொரு மாணவர்களின் கல்வி மீதும் கூடிய அக்கறை எடுக்கக் கூடிய வாய்ப்புக் காணப்பட்டது.

மேலும் தமிழ் எழுத்துக்கள் மணலில் எழுதும் முறையைத் தொடர்ந்து சிலேற் பென்சில் கற்றல் முறை காணப்பட்டது. மேலும் மனனம் செய்தல், வாக்கியம் உருவாக்கல் என்ற கற்றல் ஊடாக கல்வி முன்னெடுக்கப்பட்டது. மேலும் பாடத்திட்டங்கள் மிகப் பரந்ததாகவும் ஆழமாகவும் காணப்பட்டன. மெற்றிக் குலேசன் பரீட்சை, சீனியர் மெற்றிக் குலேசன் போன்ற கற்கை நெறிகள் ஊடாக கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மேலும் திண்ணைப் பள்ளிக்கூட முறை, குருகுலக் கல்வி (ஆசிரியரிடம் சென்று மாணவர் பாடம் கற்கும் முறை) யும் ஆங்காங்கே காணப்பட்டது. இலங்கைக்கு ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து மிசநெறிக் கல்வி அமைப்புக்கள் ஊடாக, மதத்தின் ஊடாக கல்வி முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மத நிறுவனங்களூடாக கிறிஸ்தவ மதத்தை அடி ஒற்றிய பாடசாலைகள் இலங்கை பூராகவும் அமைக்கப்பட்டன.

அந்த வகையில் யாழ்ப்பாண நகரின் கரையோரப் பிரதேசங்களில் கிறிஸ்தவ பாடசாலைகள் அமைக்கப்பட்டதுடன் ஆங்கிலக் கல்வியின் ஊடாக கற்பித்தல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இதனால் பெருமளவானோர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய நிலையில் யாழ்ப்பாண கல்வியில் மேற்கு நாட்டை ஒத்த கல்வி மரபு ஏற்பட்டது.

இதனால் பலர் ஆங்கிலம் கற்று பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று தம் உயர் கல்வியை பூர்த்தி செய்து சட்டத்தரணி, கணக்காளர், நிர்வாகத்துறை சார்ந்த உயர் பதவிகளை வகித்தனர்.



பெருமளவு மக்கள் ஆங்கிலக் கல்வியின் மூலம் இலங்கை அரசாங்கத்தில் எழுதுவினைஞர்கள், கணக்காளர் போன்ற பதவிகளையும் வகித்தனர். மேலும் கல்வி கற்ற மத்திய தர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். இவ்வாறு வடபகுதி மக்கள் வர்த்தகர்களாகவும், சிந்தனை வளம் உள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

இவ்வாறு 1715 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை முழுவதும் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களால் முன்வைக்கப்பட்ட கோல்புறூக் சிபார்சு, டொனமூர் சிபார்சு, மோர்கண் குழுவாளரின் சிபார்சுகள் இலங்கையின் கல்வி நிலையில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தின.

அம் மாற்றம் யாழ்ப்பாணத்திலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் தோற்றம் பெறவும், தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்படவும் வாய்ப்பாக அமைந்தன. மறுவகையில் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அமைந்த அரசாங்கங்களின் கொள்கைகளும் கூட யாழ்ப்பாணக் கல்வி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

தொடர்ந்து தற்காலத்தில் உலக வங்கியின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும் கல்விச் செயன்முறையானது நவீனத்துவமாக மாற்றமடைந்துள்ள போதிலும் கூட புள்ளிகளை மையமாகக் கொண்ட கல்வி முறையே காணப்படுகின்றது. அவை எல்லாம் மாணவர்களின் சிந்தனை ஆற்றலை, ஆளுமை விருத்தியை எந்தவகையில் மாற்றி அமைக்கின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நவீனத்துவ கல்விச் செயற்பாடுகள், கணனிப் பயன்பாடு, வலையமைப்பு, பல் ஊடக எறிகை, தொழில்நுட்பக் கற்கை நெறிகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் 'நற்பிரஜைகளைத் தோற்றுவித்தல்' என்ற நல்நோக்கம் எந்தளவில் முன்னெடுக்கப்படுகின்றது என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது.

கல்வியின் நோக்கம் நற்பிரஜைகளை சமூகத்திற்கு வழங்குவதே ஆனால் தற்போதைய கற்றல் செல்நெறியானது தரம்-5 தொடக்கம் பல்கலைக்கழக கல்விவரை ஓட்டப் போட்டியாகவே உள்ளது. கல்வியில் போட்டி, பல்கலைக்கழக கல்வியில் போட்டி, வேலை வாய்ப்பில் போட்டி என்று மாணவர்கள் முடிவற்று ஓடிக்கொண்டே இருக்கிறார்கள்.

மேலும் ஆசிரியர் மாணவர் இடைவினைத் தொடர்பு குறைவாகவே காணப்படுகிறது. மாணவரைத் தட்டிக் கேட்க முடியாத நிலை ஆசிரியருக்கு காணப்படுகிறது. மாணவர் மத்தியில் ஒழுக்கக் கேடுகள் தலைவிரித்தாடுகிறது.


முடிவாக உயர் விழுமியங்களுக்கான நற்பிரஜைகளை உருவாக்க வேண்டியது கல்விச் சமூகத்திற்கு மற்றும் பெற்றோருக்கு உண்டு. இது விடயத்தில் இரு தரப்பினரும் ஒருமித்து செயற்படுவதன் மூலமே பயன் உறுதிமிக்க பிரஜைகளை உருவாக்க முடியும். இது விடயத்தில் சமூகப் பொறுப்பு மிக்க கல்வியாளர் யாவரும் ஒருமித்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

**நீர்வையூரான்**

# சொன்னார்கள் சொன்னார்கள்

தற்போதைய அரசாங்கமும் தமிழர்களைப் பாரபட்சத்துடன் நடாத்துவதுடன் இத்தகைய நிலை தொடர்ந்தால் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும்

காணாமற் போனவர்கள் தொடர்பான விடயம் பாரிய மனிதாபிமான பிரச்சினையாக காணப்படுகிறது. காணாமற்போனோர் பற்றிய விடயங்களுக்கு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தஅரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.



காணாமற்போனோர் பிரச்சினை இயல்பு நிலைக்கு திரும்புவதிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் சிக்கலான விடயமாகவுள்ளது. எனவே நாட்டினதும் இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களினதும் நலனுக்காகவும் இந்தப்பிரச்சினையை துரிதமாக தீர்க்க வேண்டியது அவசியம்.

கடந்த காலத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் முடிவுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

**இரா. சம்பந்தன்**

இறுதிப்போரில் எமது இராணுவம் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளவில்லை. இது எமக்கு நன்றாகவே தெரியும். பொதுமக்களை இலக்கு வைத்து எமது இராணுவம் செயற்படவில்லை. அதனால்தான் பத்தாயிரம் இராணுவத்தினரை நாம் இழக்க நேர்ந்தது.

ஒட்டுமொத்தமாக வடக்கை கட்டுப்படுத்த வேண்டும் என நினைத்திருந்தால் இரண்டு நாட்களில் போரை முடித்திருக்க முடியும். அவ்வாறு நாம் செயற்படவில்லை.

இராணுவத்துக்கு தலைமை தாங்கும் எவரேனும் தமது தனிப்பட்ட அதிகாரத்தில் தமக்கான ஒரு குழுவை அமைத்துக் கொண்டு தமிழ் மக்களை அழித்திருந்தால் அதைக் கண்டறிந்து அவர்களை தண்டிக்க வேண்டியது எமது கடமை.

ஜனநாயகத்தை பலப்படுத்துவதில் இதுவும் முக்கியமான ஒன்று. அந்த வேலைத்திட்டம் நடைபெற்று வருகிறது.



சட்டத்திற்கு முரணாக எவரேனும் செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே நல்லிணக்கத்தை ஏற்படுத்த மிகச்சரியான வழிமுறையாக இருக்கும்.

அனைத்துலக உதவிகள் தேவைப் படுவது வேறு விடயம். ஆனால் உண்மைகளை கண்டறியவேண்டியது அவசியம்

**அமைச்சர் மகிந்த சமரசிங்க**

0000000000000000000000000000000000000000000000000



காணாமற் போனவர்களில் பலர் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக்கொண்டுள்ளனர்.


இறுதிக் கட்ட யுத்தத்தில் காணாமற் போனதாக கூறப்படும் 7000 பேரில் பலர் கனடா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் இணைந்து உயிரிழந்தவர்கள் எண்ணிக்கையை போலியாக வெளிக்காட்ட முயற்சிக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுப்பதில்லை.

**தினேஸ் குணவர்தன**

0000000000000000000000000000000000000000000000000



தமிழ் அரசியல் கைதிகளின் உயிரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்குள்ளது. அத்துடன் தடுப்புக் காவலில் உள்ள கைதிகளை விடுவிக்கும் சாத்தியம் உள்ளது

தமிழ் அரசியல் கைதிகள் தங்களின் மனநிலை மற்றும் கோரிக்கையை மிகவும் வேதனையுடன் தெரிவித்தனர். அவர்களின் உணர்வை என்னால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது

சிறைச்சாலையில் உள்ளவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் சந்தேகத்தின் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் அத்துடன் சிலர் நல்லாட்சி அரசில் நாடு திரும்பியபோது கைது செய்யப்பட்டவர்கள் குற்றம் எதுவும் செய்யாமல் சிலர் சிறையில் உள்ளனர்.

**வடக்கு மாகாண ஆளுநர்**
**ரெஜினோல்ட் குரே**




## தினச்செய்தி சிறுகதைப் போட்டி

இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சுமார் எழுநூற்று ஐம்பது தொடக்கம் ஆயிரம் சொற்களுக்கு இடையில் எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

எழுதுபவரின் சொந்தக் கற்பனை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். **சமகால விடயங்களை உள்ளடக்கியதாக சிறுகதை அமைய வேண்டும்.**

இப் போட்டி **மார்ச் மாதம் 31 ஆம் திகதி** நிறைவடைகின்றது.

ஒருவர் ஒரு சிறுகதை மாத்திரமே அனுப்பலாம். ஒன்றிற்கு மேற்பட்ட சிறுகதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏ4 தாளில் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் எழுதுபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையையும் (பெயர், விலாசம் அடையாள அட்டை இலக்கம், தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம், அத்தோடு பாஸ்போட் சைஸ் புகைப்படம்) இணைத்து அனுப்ப வேண்டும்.

வெற்றி பெறும் சிறுகதைகளுக்குப் பரிசுகள் உண்டு.

| | |
|---|---|
| **முதல் பரிசு** | **ரூபா 10000** |
| **இரண்டாவது பரிசு** | **ரூபா 5000** |
| **மூன்றாவது பரிசு** | **ரூபா 2500** |

முதல் பத்து சிறுகதைகளும் வரிசைக்கிரமப்படி தினச்செய்தி வாரமலரில் பிரசுரிக்கப்படும். அதையடுத்து தினச்செய்தி சிறுகதைத் தொகுப்பு என்று பத்து சிறுகதைகளையும் சேர்த்து புத்தக வடிவில் வெளியிடப்படும். புத்தக வடிவில் வெளியிட்டு புத்தக அறிமுக விழாவின் போது புத்தகத்தில் சிறுகதை எழுதிய பத்து எழுத்தாளர்களும் விழா மேடையில் வைத்துக் கௌரவிக்கப்படுவார்கள்.

தபால் மூலம் சிறுகதை எழுதி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி

**தினச்செய்தி**
தில்லைக்கட்டி லேன்,
சுன்னாகம்.

# எட்கா உடன்பாடு

## ரணிலை வீட்டுக்கு அனுப்புமா?

**உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வர இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்பதை ஜே.ஆர். புரிந்து கொண்டார். இதனால் இந்தியாவை தனது சூழ்ச்சி வலைக்குள் வீழ்த்துவதென ஜே.ஆர். தீர்மானித்தார். இந்தியாவால் வளர்த்தெடுக்கப்பட்ட புலிகளை இந்தியாவே அழிக்க வேண்டும் என்பதற்காகவே இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.**

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னான்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**


இந்தியா – இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் இவை தொடர்பாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்பீரிஸ் போன்ற அரசியல்வாதிகளின் பார்வைகள் என்ன என்பது தொடர்பாக இப்பத்தியில் ஆராயப்படுகிறது.

இவர்களது கருத்துக்கள் உத்தியோகபூர்வ ரீதியாகவும் உத்தியோகபூர்வமற்ற வகையிலும் எவ்வாறான முரண்பாடான விடயங்களை உள்ளடக்கியுள்ளன என்பதை இங்கு நோக்க முடியும். எனவே, குறுகிய அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காகவே அரசியல்வாதிகள் உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்பது இங்கு தெளிவாகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகத்தின் ஆசிரியர் சேகர் குப்தா, 2008 இல் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்த நேர்காணலின் போது, 1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இனப்பிரச்சினைக்குச் சிறந்தொரு தீர்வு எனவும் 13 ஆவது திருத்தச் சட்டமும் சிறந்தொரு தீர்வாகக் காணப்படுவதாகவும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இவற்றை முன்னுணர்ந்து 1987 இல் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை மேற் கொண்டிருந்தமை வரவேற்கத்தக்க விடயம் எனவும் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வருகைதந்தமை தொடர்பாகவும் சேகர் குப்தாவிடம் மகிந்த ராஜபக்ஷ சுருக்கமாக விளக்கியிருந்தார்.

'இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையிலிருந்து மீண்டும் இந்தியா அழைக்க வேண்டும் என ஜனாதிபதி பிறேமதாச கோரிக்கை விடுத்தமை தவறானது. இதனால் இந்திய- இலங்கை உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்திய அமைதி காக்கும் படையினரால் ஆற்றப்பட்ட சேவைகளுக்கு இலங்கையர்கள் நன்றி செலுத்த வேண்டும். இலங்கையின் ஒருமைப்பாட்டிற்காக இந்திய அமைதி காக்கும் படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். இந்தியப் படையினர் இலங்கையில் மேலும் சிறிது காலம் பணியாற்றுவதற்கு அனுமதித்திருந்தால், நாங்கள் வெற்றியைப் பெற்றிருப்போம். ஆனால் தென்னிலங்கை வாழ் தீவிரவாதிகளின் அழுத்தம் காரணமாக பிறேமதாசா, இந்திய அமைதி காக்கும் படையினரை அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்பினார்' என மகிந்த ராஜபக்ச 2008இல் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.



இதே மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 1989 மே 26 அன்று நாடாளுமன்றில் ஆற்றிய உரையின் போது, 1987 இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை மற்றும் இந்திய அமைதி காக்கும் படை போன்றவற்றை விமர்சித்திருந்தார்.

இவர் தனது நாடாளுமன்ற உரையில் 'இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு கொண்டு வரப்பட்டதால் இந்த நாடு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. வடக்கில் வாழும் மக்களை அடக்குவதற்காகவும், தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களைக் கொல்வதற்காகவும், இவர்களது அடிப்படை உரிமைகளை மீறுவதற்காகவுமே இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு கொண்டுவரப்பட்டனர்.

யூலையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்பாட்டின் பிரகாரம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினரே தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட பாலியல் வன்புணர்வு மற்றும் ஏனைய மீறல்களுக்குப் பொறுப்பாளிகளாவர் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது' என சுட்டிக் காட்டியிருந்தார்.

மகிந்த தனது உரையின் போது, வடக்கு மற்றும் கிழக்கில் அப்பாவிப் பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்படுவதற்காகவே இந்திய அமைதிப் படையினர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இவரது இந்தக் கூற்றை மேலும் வலுப்படுத்துவதற்காக, 'இந்தியப் படையினர் அமைதி காக்கும் படையினர்கள் அல்ல. அவர்கள் பாலியல் படையினர்' என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

**மகிந்த ராஜபக்ஷ:** ஆம், இந்திய அமைதி காக்கும் படையினர் இந்தியப் பாலியல் படையாக மாறியுள்ளனர். அவர்கள் பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்குகின்றனர். எதிர்காலத்தில் வடக்கில் இந்தியர்களை உருவாக்குவதற்காகவே பெண்களைப் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்குகின்றனர். வடக்கில் மக்கள் கொல்லப்படுகின்றனர். பெண்கள் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆனால் தெற்கில் என்ன நடக்கிறது எனப் பாருங்கள். வடக்கில் இடம்பெறும் இவ்வாறான மீறல்களுக்கு எதிராக தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றுபடும் போது அவர்கள் ரயர்கள் இடப்பட்டு எரிக்கப்படுகிறார்கள்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

### இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை:

1998 இல் இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக உடன்படிக்கையானது இலங்கைக்கு பல்வேறு திறந்த முதலீட்டு வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் 2008 இல் இலங்கையின் வர்த்தக அமைச்சராக இருக்கும் போது அறிவித்திருந்தார். இதே பீரிஸ் இந்தியாவுடனான வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பாக்கு மட்டுமே இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பிரதான பொருள் எனத் தற்போது குறிப்பிடுகிறார்.

பீரிஸ் மற்றும் கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஏனையவர்கள் இந்தியாவுடனான பொருளாதார தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டையும் இரட்டைக் கருத்துக்களையும் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகும். தமது ஆட்சிக்காலத்தில் இந்த உடன்படிக்கையை ஆதரித்து தமது கைகளை உயர்த்திய இவர்கள் தற்போது இதனை எதிர்த்து நிற்கின்றனர்.

'முதலில் தேசம் அதன் பிறகே வேலைத்தளம்' என்கின்ற இரண்டு எண்ணக்கருக்களை 1987 இல் தற்போது கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டிருந்தனர். இந்த எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி இவர்கள் 1987 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவை ஆட்சியிலிருந்து நீக்கினர். தற்போது இவர்கள் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையை எதிர்ப்பதன் மூலம் ஜே.ஆரின் மருமகனான ரணிலை வீட்டிற்கு அனுப்பத் திட்டமிடுகிறார்கள். இதனை இவர்களால் செய்ய முடியுமா? இதனைத் தற்போது எதிர்வுகூற முடியாது. இதற்கு இன்னமும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

1989 இல் மகிந்தவால் எதிர்த்து விமர்சிக்கப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையை சேகர் குப்தாவுடனான நேர்காணலின் போது மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு புகழ்ந்துரைத்தார் என்பதும், இவர் ஜனாதிபதியாக பதவி வகித்த போது உயிர்நீத்த இந்தியப் படையினருக்காக யாழ்ப்பாணத்தில் நினைவாலயம் ஒன்றை அமைத்து மரியாதை செலுத்தினார் என்பதையும், விமல் வீரவன்ச போன்ற நாட்டுப் பற்றாளர்கள் எனத் தம்மைத் தாமே கூறிக் கொள்பவர்கள் இந்த நினைவாலயத்தை வணங்குகி றார்கள் போன்ற சம்பவங்கள் இலங்கை அரசியல்வாதிகள் இரட்டை முகத்தை வெளிச்சமிட்டுக் காண்பிக்கின்றது.

**'பொருளாதார மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையானது பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கைக்கு ஒத்ததாகவே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திட்டு 15 ஆண்டுகளின் பின்னர் இலங்கையின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் விதமாக பொருளாதார மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையானது வரையப்பட்டுள்ளது. இந்தியாவிற்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள் பாக்கு ஆகும்'**

**பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்**

ஆகவே, தற்போது பொருளாதார, தொழினுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையை விமர்சிப்பவர்கள் எதிர்காலத்தில் இதனைப் புகழ்ந்து பாராட்டி நினைவாலயங்களை அமைக்கலாம். ஏனெனில் சில 'நாட்டுப்பற்றாளர்கள்' இரட்டை நாக்குகளுடன் இரட்டை நிலைப்பாடுகளுடன் செயற்படுகின்றனர்.

(தொடர்ச்சி 20 இல்...)




# கறுப்பு ஜூலையும் - அதன் பின் விளைவுகளும்

திருநெல்வேலிச் சந்தியில், பிரபாகரன் பதின்மூன்று இராணுவத்தினரைச் சுட்டுக்கொன்றது, நாட்டில் பிரளயத்தையே ஏற்படுத்தியது.

தனது சகாவின் சாவிற்கு வஞ்சம் தீர்க்க வெளிக்கிட்ட பிரபாகரன், இராணுவ வீரர்களை கொலை செய்தது தமிழ் மக்களை சொல்லொணாத் துயரத்துக்குள் ஆக்கியது கண்டிக்கத் தக்கது.

நாடு பூராவும் இனக் கலவரம் வெடித்தது. ஜூலை 25, 27 ஆகிய திகதிகளில் சிறைச்சாலையிலிருந்த தமிழ்க் கைதிகள் – முதன் நாள் முப்பத்து ஐந்து பேரும், இரண்டாவது நாள் பதினெட்டுப் பேரும், சிங்களக் காடையர்களாலும், சிங்களக் கைதிகளாலும் அடித்தே கொல்லப் பட்டார்கள்.

நூற்றுக்கணக்கான தமிழர்கள், பொதுமக்கள் கலவரத்தின் போது, சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டார்கள். ஆயிரக் கணக்கானோர் காடையர்களின் தாக்குதலினால் காயம் அடைந்தார்கள்.


நூற்றுக்கணக்கான தமிழர்கள் தங்கள் வீடுகளை இழந்தார்கள். தமிழ் வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை இழந்தார்கள். இவையெல்லாம் பிரபாகரன் என்ற தனிமனிதனின் வெறியினால் ஏற்பட்ட விபரீதம் ஆகும்.

செய்ய முடியாத ஒன்றைச் செய்து முடிப்பேன் என்று கூறித், தமிழ் மக்களின் பேரிழப்பிற்குப் பிரபாகரன் காரணமானது இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி ஜெயவர்த்தனாவின் தலைமையில் அவரது அமைச்சரவை கூடியது.

அந்த அமைச்சரவைக் கூட்டத்தில், "நாட்டில் பிரிவினையைத் தூண்டும் அரசியற் கட்சிகளைத் தடை செய்வேன்" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா சூளுரைத்தார்.

அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவேன் எனவும் அறிவித்தார்.



அந்தத் திருத்தத்தின்படி, நாட்டிலுள்ள ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் ஒற்றை ஆட்சி அரசியல் சாசனத்திற்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். இந்தத் திருத்தச் சட்டவரைபை அமைச்சரவை சில சிறிய திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டது.

அதையடுத்து, ஜூலை 28 ஆம் திகதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இந்த உரை நான்கு நிமிடங்கள் ஐம்பது செக்கன்டு காலம் எடுத்துக் கொண்டது. அமைதியாகவும், மன உறுதியையும் வெளிப்படுத்தும் விதத்திலும், தனது பேச்சைப் பேசி முடித்தார். கலவரங்களிற்குப் பிற்பாடு அன்று தான் அவர் முதன் முதலில் பேசினார். அப்பொழுது சிங்களவர்களுடைய உரிமைகள், சலுகைளைத் தான் காப்பற்றுவேன் என உறுதியளித்தார்.

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த இனக்கலவரம் பற்றி அவர் எதுவுமே சொல்ல முன்வரவில்லை.

தமிழ் மக்கள் பற்றி, அவர் எந்தவிதக் கவலையும் படவில்லை. சிங்கள மக்களைத் திருப்திப் படுத்தவே ஜே.ஆர். ஜெயவர்த்தனா நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

அமைச்சரவைச் செயலாளர் ஜீ.வி.பீ. சமரசிங்கவிடமும், சட்ட வரைஞர் பீ.ஏ.கே. றொற்றிக் கோவிடமும் அதற்கான அரசியற் சட்ட வரைவைத் தயாரிக்குமாறு ஜெயவர்த்தனா பணித்தார்.

அரசகேசரி

தமிழ் மக்களுக்கு எதிரான இந்தக் கலவரத்திற்குக் காரணம், திருநெல்வேலி சந்தியில் பதின்மூன்று இலங்கை இராணுவத்தை பிரபாகரன் கொலை செய்தது தான் காரணம் என நிரூபிக்க முற்பட்டதுடன், கலவரத்தை நியாயப்படுத்தவும் முன்வந்தார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில், தமிழ் மக்கள் சார்பாகத் தனக்கு ஏதாவது பொறுப்பு இருக்கிறது என அவர் கருதவில்லை. அவரது பேச்சு, இந்நாட்டின் ஜனாதிபதி என்ற தோரணைப் பேச்சாக விளங்கவில்லை.

இந் நாட்டின் "சிங்கள மக்களின் ஜனாதிபதி" என்ற வகையில் தான் அவரது பேச்சு அமைந்திருந்தது.

சிங்கள மக்களை மாத்திரம் தான் அமைதிப்படுத்தவும், திருப்திப்படுத்தவும் முன்வந்தாரே ஒழிய, வேறு ஒன்றும் செய்யவில்லை.

நாட்டின் அமைதி, மற்றும் இயல்பு நிலையையும் மீளக் கொண்டு வாருங்கள், என உத்தரவு பிறப்பிக்க அவர் முன்வரவில்லை. அதற்குப் பதிலாக எவராவது பிரிவினையைத் தூண்டுபவர்களாக இருந்தால், புதிய சட்டத்தின் கீழ் அவர்கள் தங்களுடைய சொத்துக்களை இழக்க வேண்டிவரும். பொதுப் பரீட்சையில் பங்குபற்றத் தடை செய்யப் படுவார்கள் எனத் தெரிவித்தார்.

அவருடைய பேச்சு மீண்டும் கலவரத்தைத் தூண்டுவதாக அமைந்தது.

முன்னர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்டதை அடுத்து, பதற்றம் ஓரளவு குறைந்து காணப்பட்டது. ஆயினும் அவரின் இந்தப் பேச்சை அடுத்து, மீண்டும் கலவரம் வெடித்து தீவிரமடைந்தது.

அவரது அந்தப் பேச்சை அடுத்து, தமிழ் மக்கள் மீண்டும் தீவிரமாகத் தாக்கப்பட்டார்கள்.

ஜூலை 27 ஆம் திகதி அவசரக் கவனயீர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையான லோக் சபா கூடியது.

அந்த லோக் சபா நாடாளுமன்றக் கூட்டத்தில், அன்றைய வெளிவிவகார அமைச்சர் பீ.வீ.நரசிம்மராவ் நாடாளுமன்ற சபையில் தனது அறிக்கையை வாசித்தார்.

அவர் மிகவும் அமைதியாகவும், அதே நேரத்தில் மிகவும் அக்கறையுடனும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இக்கலவரத்தின்போது, இலங்கையிலிருந்த இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்த சில இராஜதந்திரிகளும் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்றும், ஆனால் தெய்வாதீனமாக யாருக்கும் உயிர்சசேதம் நடைபெறவில்லை என நரசிம்மராவ் கூறினார்.

மேலும் இலங்கையிலிருந்த இந்திய வங்கிகளான "இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும்", "இந்திய ஸ்ரேட்ஸ் வங்கியும்" எரிந்து நாசமாக்கப்பட்ட விடயத்தையும் தெரிவித்தார்.

இந்த வங்கி எரிப்புச் சம்பந்தமாக, மேலதிக தகவல்களைத் தான் எதிர்பார்த்திருப்பதாகக் கூறினார்.

இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரம் சம்பந்தமாக இந்தியாவின் நாலாபக்கமும் பரவலான பிரதிபலிப்புக்கள் வெளித்தோன்றின.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் ராஜ்நாராயணன், தமிழர்களைக் கொன்று குவித்ததை எதிர்த்து, இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்ப இந்தியப் பிரதமர் முன்வரவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஆந்திர முதலமைச்சரான என்.டி. ராமராவ் குறிப்பிடுகையில்,

"தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டது வெறுக்கத்தக்க செயல்" என்று கூறினார்.

அதே நேரம், கர்நாடக முதல்வர் இராமகிருஸ்ண கெஹ்டே கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்தப் பயங்கர இனக்கலவரத்திற்கு உச்சக்கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

அதே போல தமிழ்நாட்டு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன், இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதம மந்திரி குரல்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்திய மக்கள் சபை, இலங்கையில் நடைபெற்ற கலவரத்திற்கு வன்மையான கண்டனம் தெரிவித்துத், தீர்மானம் நிறைவேற்றியது. "ஆட்சியாளர்கள் கலவரக் காரர்களுடன் இணைந்து, தமிழர்களை இம்சைப் படுத்தினார்கள்" என அந்தக் கண்டனத் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டது.

(தொடர்ச்சி 20 இல்....)

# லங்கா ராணி

சூரியன் மேல் ஏறியிருந்தது. வெளிச்சம் கூடுதலாக இருந்தாலும் மேகங்கள் மூடிய வண்ணமே இருந்தன. எவ்வித கூட்டங்களிலும் பங்கு பற்றாதவர்கள் தனிமையில் நின்று கொண்டிருந்தனர். கடைகள் வீடுகள் எல்லாவற்றையும் பூட்டிவிட்டு அவற்றுள் ஏராளமான பொருட்களை விட்டு விட்டு வந்தவர்கள் அவற்றிற்கு என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தில் இருந்தனர். சிலர் ஒவ்வொரு கூட்டங்களாகச் சென்று கேட்டுத் தங்களுக்குப் பிடித்தமான கூட்டங்களில் நின்று கொண்டனர்.

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் மூன்றாம் தர குடிமக்களாக ஆக்கப்பட்டு வருகிறார்கள். இந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் போராட வேண்டும். கிழக்கு மாகாணம் சிங்களக் குடியேற்றங்களால் பறிபோய்விட்டது. 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா ஒப்பந்தம் செய்ய முன்வந்தார். அது கிழித்தெறியப்பட்டு விட்டது. 1972 ஆம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்கா அரசின் குடியரசுப் பிரகடனத்தால் தமிழர்கள் மேலும் பல இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். தமிழ் இளைஞர்களுக்கு தரப்படுத்தலால் உயர்கல்வி மறுக்கப்படுகிறது. அரசாங்க சேவையில் 1950 ஆம் ஆண்டு ஐம்பது சதவீதமாக இருந்த தமிழர்கள் 1970ஆம் ஆண்டு ஐந்து சதவீதமாக ஆகிவிட்டார்கள். 1958 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தில் பல தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம்–சட்ட மறுப்பு–தடுப்புக்காவல்–குடியரசு–தினப்பகிஷ்கரிப்பு–இளைஞர்கள் தடுப்புக் காவல் சித்திரவதைகள்–புத்தளம் துப்பாக்கிச் சூடு–பரராஜா கொலை–தனிநாடு–இப்படி சாதாரண பாணியில் போய்க்கொண்டிருந்தது ஒரு கூட்டம்.

இன்னுமொரு கூட்டம். அங்கு இரு டாக்டர்கள் மத்தியில் உயரமான தூண் ஒன்றின் மீது ஏறி நின்றுகொண்டிருந்தனர். வயதில் இளைஞர்கள். அவர்களைச் சுற்றி சில பேர் நின்றுகொண்டிருந்தனர். அவர்களில் ஒரு சிலர் சிறிய பார்சல்களையும் பைகளையும் வைத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் கொண்டுவந்த பொருட்கள் அவ்வளவு தான் போல இருந்தது. சாப்பாட்டுக்கடை, தியேட்டர்கள் போன்றவற்றில் எடுபிடிகளாக வேலை செய்தவர்கள். இழப்பதற்கு அதிகம் வைத்துக் கொள்ளாதவர்கள் போல இருந்தது. கூட்டம் ஏதோ பாலர் வகுப்பு மாதிரி நடந்து கொண்டிருந்தது.

"எனிமேல் என்ன வந்தாலும் அங்கை திரும்பிப் போகப்படாது. என்ன? திரும்பிப் போகப்படாது. சரி. எங்கை எல்லோரும் ஒன்றாகச் சொல்லுங்கோ"

"என்ன வந்தாலும்"

"என்ன வந்தாலும்"

"திரும்பிப் போக மாட்டோம்"

"திரும்பிப் போக மாட்டோம்–டோம்–டோம்"

"எங்க எல்லோரும் ஒன்றாகச் சொல்லுங்க பார்ப்போம்"

"என்ன வந்தாலும் திரும்பிப் போகமாட்டோம்"

"குட்" ஒருவர் தலையில் கட்டோடு நின்று கொண்டிருந்தார். தொடர்ந்தது.

"உங்களுக்கு ஏன் அடி விழுந்தது? ஏன் அடி விழுந்தது?"... மயான அமைதி...

"நீங்க அங்கு போனதால் எங்க"

"நாங்கள் அங்கு போனதால... தால தால..."

"என்ன எல்லோரும் ஒவ்வொரு பக்கமாக இழுக்கிறீர்கள். ஒன்றாகச் சொல்லுங்கள் ஏன் அடி விழுந்தது?"

"நாங்கள் அங்கு போனதால"

"குட்" இவ்வாறு கூட்டம் தொடர்ந்தது.

இளைஞர்கள் தொடர்ந்து சென்று பின்தளத்திற்கு வந்தனர். மேல்தளத்திலும் பலர் நின்று கொண்டிருந்ததால் அவர்களிடமும் இளைஞர்கள் கூறவேண்டியவற்றைக் கூறிக்கொண்டு சென்றனர். வேட்டியுடன் இருந்த இளைஞனும் வெள்ளைச்சாமியும் அங்கு ஓரமாக நின்றுகொண்டும் அதே நேரத்தில் வேறு மூவர் நடத்திக்கொண்டிருந்த கூட்டத்தை தெரியாதவர்கள் போலப் பார்த்துக் கொண்டும் நின்றனர். இந்த நேரத்தில் மற்றைய யாவரும் வந்து சேர்ந்தார்கள். இந்தக் கூட்டம் கப்பலின் முன் பகுதியில் உள்ள நங்கூர மேடையைச் சுற்றி நடந்து கொண்டிருந்தது. அவருக்குக் கீழ் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலுமாக இருவர் நின்றனர்.

பாட்டாளிகளின் புரட்சி பற்றிப் பேசினார். இடையில் தமிழ்ச் சொற்கள் வராததினால் கீழே அவருக்குப் பக்கத்தில் நின்றவர்கள் அவருக்கு உதவி செய்தார்கள். உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும் ஒன்றுபட வேண்டும் என்று பலதும் கூறப்பட்டது. இவற்றையெல்லாம் வேட்டியுடன் நின்ற இளைஞன் கேட்டுக் கொண்டு நின்றான்.

"புரட்சி செய்வதற்கு முதல் கட்சி அமைக்க வேண்டும், ஆயுதம் வேண்டும், பணம்




வேண்டும். இதுக்கு உங்களிடம் இருக்கிற காசு போதுமா? இல்லை. இதற்கு அரசாங்கத்திடமிருந்து எடுக்க வேண்டும். அரசாங்கத்திடமிருந்து எப்படி எடுக்க வேண்டும். வங்கிகளைக் கொள்ளையடிக்க வேணும்? வெறுங்கையோட போய்க் கொள்ளையடிக்கலாமா? அதற்கும் ஆயுதம் வேண்டும்.துவக்கு வாங்கவேணும். அதற்காகவாவது பணம் கொடுங்கள். சரி உங்களிட்ட இருக்கிற காசுகளைக் கொடுங்க ஆயுதம் வாங்க. யாரும் ஏலுமானதைக் கொடுக்க வில்லங்கப்படத் தேவையில்லை" பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்தார்.

"யு காண்ட் வோஸ் தெம். லெற் தெம் கிவ் வட் தெவான்ட்" பலர் பணம் எடுப்பதற்கு மடியைத் தடவினர். இளைஞர்கள் கூட்டத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். இவர்களும் தங்கள் கூட்டத்தை ரசிப்பதற்கு வந்தார்கள் என நினைத்துக் கொண்டு "வீ ஆர் கலெக்டிங் மணி போர் ஆம்ஸ்" என சமாதானமாகக் கூறினார். மேடையில் பேசிக் கொண்டு நின்ற அவரிடம் சரவணன் கூறினான்.

"இறங்கும் கீழே"

"வை? வி ஓல் காவ் டெமோகிறசி"

"இறங்கு கீழே"

"யு சீ வீ ஆர் ஜெனியுன் கெறக்டர்ஸ்" பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து கேட்டார். "கவ் டு யூ ட்ரான்சிலேட் ஜெனியுன்"

"உத்தமம்" பக்கத்தில் நின்றவர் மொழி பெயர்த்தார். மேடையில் நின்றவர் கூறினார்.

"ஐ ஆம் அன் உத்தமன்"

"அவர் உத்தமர். அவருக்குப் பக்கத்தில் இரண்டு புத்திரர்கள் இறங்கடா கீழே"

"உத்தம புத்திரர்கள். அடே அப்பா இறங்கடா கீழே" தேவனும் சேர்ந்து கொண்டான்.

"டோனட்ற் இன்சல்ட் அஸ். வீ காவ் நேம்ஸ். ஹிஸ் நேம் இஸ் மிஸ்டர் ராஜ். ஐ ஆம் கந்தா. ஹி இஸ் மிஸ்டர் வில்சி. கி டிட் ஹிஸ் பி எச். டி. இன் றெவலூஷனறி பார்லிமென்டரி டெமோகிறசி அற் லண்டன் ஸ்கூல் ஒவ் எக்கனமிக்ஸ். ஐ ஆம் வொறம் ஒக்ஸ்வோட் ஹி இஸ் பொறம் வெள்ளவத்தே"

"அதெல்லாம் பிறகு பார்க்கலாம். முதலில் கீழே இறங்கு பார்ப்பம். இப்ப இறங்கப் போறீரா? அல்லது இறக்கிறதா?" கூட்டத்தில் நின்றவர்கள் மாறி மாறிப் பார்த்தார்கள். தேவன் கைகளை மடித்துவிட் டுக் கொண்டான். வலது பக்கத்தில் நின்றவர் "கேள்வி கேட்கலாம்" என்று நேரடியாக இளைஞர்களிடம் கூறாமல் அதை மேலே நின்றவரைப் பார்த்துக் கூறினார். மேலே நின்றவர் குனிந்து "ஸ்பீக் இன் இங்கிலீஸ். த மாஸஸ் டோன்ட் றெஸ்பெக்ட்" சனங்கள் மதிக்க மாட்டார்களாம். ஆங்கிலத்தில் தங்களுக்குள் பேசும்படி ஞாபகப்படுத்தினார். வலது பக்கத்தில் நின்றவர் ஆங்கிலத்தில் தொடர்ந்தார்.

"யூ சீ யூ காவ் டெமோகிறசி. யூ கான் ஆஸ்க் குவெஷ்சன்ஸ். யூ ஆஸ்க் எபவுட் ரொட்ஸ்கி. நோ லிம்பியாவோ நோ. நோ ஆஸ்க் எபவுட் காங் ஓவ் வோர்" வலது பக்கத்தில் நின்றவர் கூறினார். மேடையில் நின்றவர் கேட்டார்.

"வெல் வாட் டு யூ நோ எபவுட் காங் ஒவ் வோர்?"

சரவணன் சொன்னான், "இப்ப எங்கடை பிரச்சினை காங் ஒவ்வோர் இல்லை காங் ஒவ் த்ரீ. இறங்கு கீழை இது தான் கடைசி முறை?"

"ஓ.கே.வி கெட்டவுன். டோன்ட் கெட் எக்சயிற்றட், யூ மஸ்ட் கம் அன் சிமி. ஐ வில் பி ஸ்டேயிங் அட் மெயின் ஸ்ரீட் ஜவ்னா. வி மஸ்ற் டிஸ்கஸ்" என்றவாறு மேடையிலிருந்து இறங்கினார்கள். சரவணன் "அதெல் லாம் நல்லாயிருக்கு. இப்ப இதில் நிக்காதையுங்கோ. ஓடித்தப்புங்க கெதியா" என்றான். அவர்களும் அங்கிருந்து நழுவினார்கள். பலர் மடியில் இருந்து எடுத்த காசை திருப்பி வைத்தனர்.

அருளர்

இதற்குப் பின் வேட்டியுடன் இருந்த இளைஞன் அங்கே இருந்தவர்களிடம் போய்க்கொண்டிருந்த அந்த மூவரையும் காட்டி "இந்தப் பேர்வழிகளையிட்டு நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" அங்கே சரவணனும் அவனுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். தொடர்ந்து இளைஞன் கூறினான்.

"இவர்கள் தான் புத்தகத்தில் இருக்கும் புரட்சியை போத்தலில் அடைத்து விற்று அதில் வரும் லாபத்தில் வீடு கட்டிக் கார் வாங்கிக் கொள்பவர்கள். இந்தப் பேர்வழிகள் தான் எங்கு எல்லாம் மக்கள் தங்கள் கண்கள் திறபட்டு தங்களுடைய கைகளில் உள்ள விலங்குகளை கண்டு அவற்றை உடைத்தெறிய வேண்டுமென்று நிற்கிறார்களோ, அங்கு வந்து அவற்றை உடைத்தெறிய முடியும். என்று கூறிவிட்டு அந்த விலங்கைப் பற்றி பேசிப் பேசியே காலத்தைக் கடத்தி அவர்களுடைய கைகளில் தான் அந்த விலங்குகள் இருக்கின்றன என்பதையே மறக்க வைத்து விடுவார்கள். பேசுவார். புரட்சியைப் படித்துப் படித்து அப்படிப் படித்துத் தெரிந்து கொள்வது தான் புரட்சி என்று நினைத்து எல்லோருக்கும் அதைப் படிப்பிப்பது தான் முதல் வேலை என்று போதிப்பார்கள். படித்தவர்கள் இவர்களைப் போலவே எதுவும் இயலாதவர்களாகி சாய்வு நாற்காலியைத் தேடி ஓடுவார்கள். இந்தப் பேர்வழிகள்தான் வெறும் சரித்திரங்களைப் படித்து வைத்துக் கொண்டு அதைப் பேசுவது தான் புரட்சி என்று பிதற்றிக் கொண்டு திரிவார்கள்.

புரட்சி என்று நிற்கும் மக்கள் மத்தியில் போய் இந்தப் பேர்வழிகள் அவர்களுடைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டவர்கள் போலவும் அவற்றையெல்லாம் தீர்த்து வைப்பவர்கள் போலவும் கதைத்து நடித்து எல்லோரும் தங்களையே நம்பியிருக்க வைத்து தங்களுக்கென ஒரு நிலையை ஏற்படுத்தி உயர்த்திக் கொண்டு பின்பு அந்த நிலைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே புரட்சி, புரட்சி எனக் கத்திக்கொண்டு எதுவும் சாதிக்க இயலாமல் இயக்கமற்றுப் போய் சாக்குப் போக்குகள் சொல்லிக் காலம் கழிப்பவர்கள். ஏமாற்று வித்தைக்காரர்கள். தங்கள் பாரம் பரிய நிலைகளைக் காப்பாற்றிக் கொள்ள புரட்சியில் புகுந்துகொள்பவர்கள். கண்ட இடமெல்லாம் இவர்களுடைய கடைகள் இருக்கும். ஏன் இப்படி நூறு கடைகள் என்று கேட்டால் அதற்கு வெயில் அடிக்குது மழையில்லை என்று பொருத்தமற்ற காரணங்கள் ஆயிரம் கூறுவார்கள். சுயநலத்தையும், சுயகௌரவத்தையும் தங்களுக்குள் மோத விட்டு எல்லாவற்றையும் தூள் தூள் ஆக்குவார்கள்.

(தொடர்ச்சி 19 இல்......)

# புனர்வாழ்வு ஒன்றுதான் வழியென்றால்?

விஸ்வா

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கின்றது.

சிறைச்சாலை வைத்தியசாலை மருத்துவர்கள் கைதிகளின் உடல் நிலையை அடிக்கடி அவதானித்து வருகின்றனர். உண்ணாவிரதமிருக்கும் கைதிகள் எவரும் உயிரிழக்க நேரிட்டால் அரசாங்கத்திற்கு அது சிக்கலை ஏற்படுத்தும் என்பதாலும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

கைதிகளின் உடல் நிலை குறித்து அவர்களின் குடும்பத்தினரின் மனநிலை மோசமாகவே பாதிப்படைந்துள்ளது. புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் ஏற்பட்ட நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் தற்போது தளர்வடைந்து வருவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கைதிகளின் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட, கைதிகளிடம் வலியுறுத்துமாறு தமிழ் அரசியல்வாதிகளிடம் அரசாங்கத் தரப்பினர் கோரி வருகின்ற போதும், கடந்த தடவை அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி, அவர்களின் உண்ணாவிரதத்தை நிறுத்திய நிலையில், வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இம்முறை எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இந்தக் கைதிகள் விவகாரத்தை கையாள மூன்று வழிகள் உள்ளன. பொதுமன்னிப்பு – பிணை வழங்கி வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவது – புனர்வாழ்வளித்து விடுவிப்பது ஆகியவையே இவ்வழிகளாகும்.

கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதை சர்வதேச நடைமுறைகள் ஏற்றுக்கொள்வதில்லை என்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் ராட் அல் ஹூசைன் கூறியதன் பின்னர், அந்த வழி இப்போது மூடப்பட்டு விட்டது. பொதுமன்னிப்பின் மூலமே விடுதலை செய்யப்பட வேண்டும் என முன்னர் கைதிகளும் அவர்களின் அனுதாபிகளும் வலியுறுத்தி வந்த நிலையில், இப்போது அது குறித்த கோரிக்கை இல்லாமல் போய்விட்டது. இப்போது போராட்டம் நடத்தும் கைதிகளும் பொதுமன்னிப்பு என்ற கோரிக்கையை கைவிட்டுள்ளனர்.

அனைவரையும் பிணையில் விடுதலை செய்வதென்பதிலும் சட்டப் பிரச்சினைகள்




உள்ளதாக அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது. பிணையில் அவர்களை விடுவித்து அவர்கள் மீதான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதில் என்ன பிரச்சினை என்பது புரியவில்லை. தற்போது இவ்விவகாரத்தில் சட்ட மா அதிபரின் அறிக்கையினையே அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.



சட்ட மா அதிபரின் அறிக்கையின் பிரகாரமே அரசியல் கைதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என மீள் குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கடந்த 2ஆம் திகதி அவரைச் சந்தித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

அனைத்துக் கைதிகளும் சம்மதித்தால் புனர்வாழ்வளிப்பது குறித்து ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

புனர்வாழ்வு பெற்றுக்கொள்ள சிலர் சம்மதிக்கின்றனர், சிலர் மறுப்புத் தெரிவிக்கின்றனர் எனவும், இவ்விடயம் தமக்கு பிரச்சினையாக இருக்கின்றது எனவும் அமைச்சர் கூறியுள்ளார். அவ்வாறெனில், சம்மதிக்கின்ற கைதிகளையாவது புனர்வாழ்விற்கு உட்படுத்துவது குறித்து முடிவொன்றை எடுக்கலாம். அவ்வாறு செய்வதில் என்ன சிக்கல் இருக்கின்றது என்பதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஏதோவொரு சாதகமான முடிவை உறுதியாக முன்வைப்பதன் மூலமே கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வருவதோடு, இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினையும் காண முடியும்.

வட மாகாண அமைச்சர் டெனீஸ்வரனிடம் கைதிகள் தெரிவித்திருக்கின்ற கருத்தினையும் இங்கு குறிப்பிட வேண்டும். தாங்கள் புனர்வாழ்விற்கு தயாராக இருப்பதாக பல கைதிகள் அவரிடம் தெரிவித்ததாக உண்ணாவிரதமிருக்கும் கைதிகளை சந்தித்த டெனீஸ்வரன் கூறுகின்றார். ஒரு சில கைதிகள் மட்டும் புனர்வாழ்விற்கு செல்ல விரும்பாத நிலையில் தங்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோருகின்றனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆகவே, பொதுமன்னிப்பு, பிணை வழங்குதல் போன்றவை சட்டச் சிக்கலை ஏற்படுத்துமானால், புனர்வாழ்வளித்து அவர்களை விடுவிப்பதே தற்போது காணப்படும் ஒரே வழியாகும்.

அமைச்சர் சுவாமிநாதனும், அனைவரும் ஒப்புக் கொண்டால் புனர் வாழ்விற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்கின்றார். கைதிகளில் பலரும் புனர்வாழ்விற்கு தயார் என்று தெரிவிக்கின்றனர். இதனையே முடிவாக எடுத்து நடவடிக்கைகளில் இறங்குவதே இப்போதுள்ள சாதகமான வழியாகத் தெரிகின்றது. பல வருடங்கள் சிறைவாழ்வைக் கழித்தவர்கள் ஒரு வருடம் புனர்வாழ்வு முகாமிலிருப்பது மோசமானதாக அமையப் போவதில்லை. வேறு வழிகள் இல்லாத போது இந்த வழியை நாடுவதே சரியானது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் தற்போது 4 பெண்கள் உட்பட 168 தமிழ்க் கைதிகள் சிறைகளில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் அனைவரின் விடுதலைக்கும் புனர்வாழ்வு ஒன்றே வழி என்றால் அது தொடர்பில் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுமன்னிப்பு சாத்தியமில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்ததையடுத்து கருத்து வெளியிட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், எதிர்கட்சியினதும் தலைவரான இரா. சம்பந்தன் கைதிகளின் விடுதலைக்கு வேறு வழிகள் உள்ளன என்று தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வழிகள் குறித்து அரசாங்கத்திடம் உடனடி பேச்சுவார்த்தைகள் எதனையும் அவர் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

தற்போது புனர்வாழ்வளித்தல் என்பது சாத்தியப்படும் போல் தோன்றுவதால் அது குறித்து அரசாங்கத்திடம் பேசி உறுதியான முடிவொன்றை அவர் எடுக்க வேண்டும். புனர்வாழ்விற்கு விரும்பாத கைதிகள் சிலர் இருக்கின்ற போதும் அவர்களிடம் இவ்வழிமுறையே இறுதியானது என்பதை உணரச்செய்து, கைதிகள் விவகாரத்தில் ஒருமித்த தீர்வு ஒன்றைக்காண வேண்டும்.

# உண்மை வெளிவருகிறது

**பகுதி 3**

1978 ஏப்ரல் 25 எனத் திகதி யிடப்பட்டு

"கரிசனை உடையவர்களுக்கு" என்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கடிதத்தில் மேலும் வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

"பஸ்தியாம்பிள்ளை பொலிஸ் குழு SMG சுடுகலன், துப்பாக்கி, றிவோல்வர்கள் மற்றும் பிஸ்டல்கள் ஆகியவற்றுடன் 7 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 1978 ஆம் ஆண்டு காலை சுமார் 6 மணிக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தேடி வந்து தாக்குதல் நடத்தினார்கள்.

ஆனால் புலிகள் தமக்கு எது வித உயிரச்சேதங்களோ, காயங்களோ இல்லாமல் அவர்களைச் சுட்டு அழித்துவிட்டார்கள். அவர்கள் வந்த மோட்டார் கார் கூட அழிக்கப்பட்டது.

"இந்த மரணத்திற்கு எந்த ஒரு குழுவோ, அமைப்புக்களோ அல்லது தனிப்பட்டவர்களோ உரிமை கோரமுடியாது. இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் புலிகளைத் தவிர வேறு எவரும் உரிமை கோரினால், அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நாங்கள் எந்தவிதமான கடந்த காலக் கொள்ளைச் சம்பவங்களுக்கும் ஜவாப்தாரிகள் அல்லர்.

ஒப்பமிடப்பட்டது : செயலாளர், மத்திய குழு."

குறுகிய எழுத்துக்களின் விபரம்,

TULF – தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி

UNP – ஐக்கிய தேசியக் கட்சி

SLFP – சிறிலங்கா சுதந்திரக் கட்சி

KKS – காங்கேசன்துறை

VVT – வல்வெட்டித்துறை,

CID – குற்றப் புலனாய்வுத் திணைக்களம்,

MP – நாடாளுமன்ற உறுப்பினர்.

கொழும்பில் இருந்து பிரசுரிக்கப்படும் தமிழ் மொழித் தினசரியான "வீரகேசரி" யில் இக் கடிதம் வெளியானபோது, தமிழ்ப் பயங்கரவாத இயக்கம் பற்றி முதல் தடவையாக மக்கள் அறிய வந்தார்கள்.

அது வரை, நம்பமுடியாத தொனியில் இந்தப் பயங்கரவாத இயக்கங்கள் பற்றிக் குசுகுசுப்பாக மக்கள் பேசி வந்தார்கள்.

அதையடுத்து, வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்படத் தேடப்படும் 38 பேரின் பட்டியல் ஒன்றைப் பொலிஸார் வெளியிட்டனர்.

கொழும்பின் புறநகர்ப் பகுதியிலுள்ள இரத்மலானை விமான நிலையத்தில் 'ஏயர் சிலோனு'க்கு சொந்தமான 'அவ்றோ விமானம்' ஒன்றை 7 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் 1978 ஆம் ஆண்டு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் குண்டு வைத்துத் தகர்த்தார்கள்.

"எமது இலட்சியத்தைப் பேரம்பேசி வாங்கலாம், அல்லது சலுகைகளை கொடுத்து எமது போராட்டத்தை நசுக்கலாம் என்ற மாயையுடன் இருக்கும் சகல ஆக்கிரமிப்பாளர்களுக்கும் விமானம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் ஒரு பாடமாக அமையட்டும்", என்று தெரிவிக்கும் அறிக்கை ஒன்றைத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் லண்டன் தொடர்பாளர்கள் வெளியிட்டார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மற்றும் அதனை ஒத்த ஏனைய அமைப்புகளுக்குத் தடை.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை மோசமானதால், அரசாங்கத்துக்கு சவால் விடத் தொடங்கியுள்ள தமிழ் ஆயுதக் குழுக்களின் வாயை அடக்க, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மற்றும் அதனை ஒத்த ஏனைய அமைப்புகளைத் தடை செய்யும் சட்டமூலம் ஒன்றை அரசாங்கம் மே மாதம் 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது.

"மக்கள் முன்வந்து சாட்சியங்களைத் தரப் பயப்படும் காரணத்தால், சட்டம் மற்றும் விசாரணை முறைமைகள் பூஜ்ஜியமாகியுள்ளன. விசாரணைகள் தொடரப்பட முடியவில்லை. இவ்விதமான ஒரு நிலைமையைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளை அரசாங்கம் கொண்டிருக்கிறது," என்று நீதி அமைச்சர் விளக்கமளித்தார்.

சட்டமூலம் மே மாதம் 18 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, மே மாதம் 19 ஆம் திகதி 131 வாக்குகள் ஆதரவாகவும், 25 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தின் ஆட்சியை எதிர்த்த சகல தமிழ் ஆயுதக் குழுக்களையும், மற்றும் அமைப்புகளையும் இந்தச்சட்டம் மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஜெயவர்த்தன தடை செய்தார்.

இந்தச் சட்டவாக்கம் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வடமாகாணத்தில் புரியப்பட்ட பல வன்முறை நடவடிக்கைகளுக்காக வேண்டப்படும் நபர்களாக 38 தமிழ் இளைஞர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை, அவர்களின் புகைப்படங்களுடன் பொலிஸ் திணைக்களம் பிரசுரித்தது. புகைப்படங்களுடனான இந்த விவரங்களுக்கு முன்னணி ஆங்கிலம் மற்றும் சிங்களத் தினசரிகளில் பிரசித்தம் கொடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த நடவடிக்கை பெரிய வெற்றியை அளிக்கவில்லை என்பது தமிழ் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் குறையாது தொடர்ந்து சென்றது என்ற உண்மையிலிருந்து, தெளிவாகியது.

ஈழத்தையும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியையும் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் மத்தியில் வளர்ந்து வரும் தமிழர் விரோத உணர்வுக்கு ஏற்றவாறு அரசாங்கம் விரைவாகச் செயற்பட்டது.

பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்டு, அதனை முற்றுமுழுதாக அழித்தொழிப்பதற்கு, நாடாளுமன்றத்தில் சட்டவாக்கம் ஒன்று கொண்டு வரப்படும் என்று 3 ஆம் திகதி ஜூலை மாதம் 1979 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அரசாங்க நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடு) சட்டம்

இவற்றுக்கு ஏற்ப, பயங்கரவாதம் தடை (தற்காலிக ஏற்பாடு) சட்டத்தை ஆரம்பக் கட்டமாக அரசாங்கம் 20 ஆம் திகதி ஜூலை மாதம் 1979 ஆம் ஆண்டு நிறைவேற்றியது.

இந்தச் சட்டம் கைது செய்தல், மற்றும் தடுத்து வைத்தல் ஆகியவற்றுக்கான பாரிய அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கியது. ஜூரர்கள் இல்லாத வழக்கு விசாரணை மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வதற்கும் இது அனுமதித்தது.

இவ்வாறான பாரிய அதிகாரத்திற்கான தேவையை நியாயப்படுத்துவதற்காக, 1970 ஆம் ஆண்டு முதல் ஜூலை மாதம் 1979 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தமிழ் ஆயுதக குழுக்களால் புரியப்பட்ட 90 கொலைகள் அடக்கிய பட்டியல் ஒன்றை அரசாங்கம் வெளியிட்டது.

இந்தச் சட்டம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஜனாதிபதிப் பதவியின் கீழ் 1979 ஆம் ஆண்டு தற்காலிகச் சட்டமாக முதலில் சட்டவாக்கம் செய்யப்பட்டது. பின்னர் 1982 ஆம் ஆண்டு நிரந்தரமாக்கப்பட்டது.

ஜெயவர்த்தனா கொழும்பில் தனது அதிகாரத்தளத்தை பலப்படுத்திக்கொண்டு, தமிழ்ப் பிரதேசங்களில், விசேஷமாக யாழ்ப்பாண மாவட்டத்தில், வளர்ந்து வரும் ஆயுதக்குழுக்களை நசுக்குவதற்கு தனது நடவடிக்கையை உக்கிரப்படுத்தத் தொடங்கினார்.

ஆறுமாத காலத்திற்குள் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு, யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைகள் அத்தனைக்கும் தளபதியாக நியமிக்கப்பட்ட, அவரது மருமகனும், இலங்கைத் தரைப்படையின் பிரதானியும், படைப்பகுதித் தலைவருமான பிரிகேடியர் வீரதுங்காவுக்கு 14 ஆம் திகதி ஜூலை மாதம் 1979 ஆம் ஆண்டு ஜெயவர்த்தனா உத்தரவிட்டார்.


படைப்பகுதித் தலைவர் வீரதுங்காவின் படைத்துறைக் குறிப்பிலக்கை வரையறுக்கும் அதேவேளை, ஜனாதிபதியின் கட்டளை கூறியதாவது:

"இலங்கைத் தீவில் இருந்து, அதிவிசேஷமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து, சகல விதமான வடிவங்களிலும் இருக்கும் பயங்கரவாத அச்சுறுத்தலை, நாட்டின் சட்டங்களுக்கு ஏற்ப இல்லாது ஒழிப்பது, உமது பணியாகும். நாட்டின் சகல மூல வளங்களையும், உமது பயன்பாட்டிற்கு விட்டுவைக்கிறேன். சட்டத்தைக் கடைப்பிடிக்கும் சகல பிரசைகளும் தமது ஒத்துழைப்பை உமக்கு வழங்க வேண்டும் என்று நான் அவர்களை வினயமாகக் கோருகிறேன். இந்தப் பணி உம்மால் செயற்படுத்தப்பட்டு, 31 ஆம் திகதி டிசம்பர் மாதம் 1979 ஆண்டுக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட வேண்டும்."

நாட்டின் ஜனாதிபதியிடம் இருந்து வந்த மேற்கண்ட அறிவித்தல் விளக்குவதாவது,

1. இராணுவத்தினால் மட்டுமே முழுக்க முழுக்க நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு கடமையாகத் தமிழ் ஆயுதக் குழுக்கள் அழிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கருதினார்.

2. தமிழ் ஆயுதக் குழுக்கள் மீதான தாக்குதலுக்கான காலவரையறை வழங்கப்பட்டதானது, தமிழ் ஆயுதக் குழுக்கள் மீது அரசாங்கத்தினால் செய்யப்பட்ட யுத்தப் பிரகடனமாகும்.









## இருமுகனின் ஹைலைட்

விக்ரமுடன் நடிக்க முடியாது என சில
முன் நயன்தாரா கூறினார். ஆனால்,
எப்படியோ நடிக்க சம்மதித்து விட்டார்.
படப்பிடிப்பு வேகவேகமாக நடந்து வரு
சமீபத்தில் மலேசியாவில் படப்பிடிப்பு மு
தற்போது சென்னையில் சண்டைக்காட்
வருகின்றனர். இதில் நயன்தாராவுடனு
விக்ரம் சண்டைபோடுவது போல்
காட்சிகள் இருக்கிறதாம்.
இந்தக் காட்சிகள் தான் படத்தின்
ஹைலைட் என கூறப்படுகின்றது.





## ஜீவாவும் பேய் படத்தில்

தமிழ் சினிமாவில் பேய் படங்களுக்கு என்று தனி ரசிகர்கள் கூட்டம் உருவானதால், பேய் படங்களில் நடிக்க முன்னணி நடிகர், நடிகைகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். பேய் படங்கள் என்றாலே, நடிகைகளுக்கு முக்கியத்துவம் இருப்பதைத் தாண்டி, தற்போது நடிகர்களுக்காகவும் பேய் கதைகளை எழுத ஆரம்பித்துவிட்டார்கள் இயக்குநர்கள். அந்த வகையில், அறிமுக இயக்குநர் ஹரி என்பவர் இயக்க உள்ள பேய் படத்தில் ஜீவா, நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார். நடிகர் கமல்ஹாசனிடம் உதவி இயக்குநராக பணியாற்றியவர் தான் இந்த ஹரி. இப்படத்தில், ஜீவாவுக்கு ஜோடியாக ஸ்ரீதிவ்யா நடிக்கிறார். இவர்களுடன் சூரி, ராதிகா சரத்குமார், தம்பி ராமையா ஆகியோர் நடிக்கின்றனர். இப்படத்தின் முதல் கட்டப்படப்பிடிப்பு பழனியில் நடைபெற்று வருகிறது. இயக்குநர் அட்லி, பாக்ஸ் ஸ்டார் நிறுவனத்துடன் இணைந்து இப்படத்தை தயாரிக்கிறார். விஷால் சந்திரசேகர் இசையமைக்கிறார்.

## தமன்னா

'நான் ஜோதிகாவின் ரசிகை. சிறந்
என் லட்சியம்" என்று தமன்னா கூ
சந்தோஷப்படுகிறேன். இதுவரை நடித்
வரவேற்பைப் பெற்றுள்ளன. தொடர்ந்
மட்டுமே நடிப்பேன். சிறந்த நடிகை என்
சினிமாவுக்கு வந்த புதிதில் தமிழ், தெ
படப்பிடிப்புகளில் மிகவும் சிரமப்பட்டேன். மற்ற
இரண்டு மொழிகளையும் தீவிரமாக கற்றுக்கொ
தெலுங்கு நன்றாகத் தெரியும். நினைத்ததை
இருப்பேன். இது என்னுடைய பலம் .நடந்
வருத்தப்பட்டுக்கொண்டே இருப்பேன். இது ப
இருக்கிறது. தினமும் தவறாது உடற்பயிற்சிகள்
இருக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக பண
அழகு என்பது பார்க்கும் கண்களில் இல்லை என்
மனதுடன் வாழ்பவர்கள்தான் அழகானவர்கள்
இருக்கும் இந்த வாழ்க்கையே






## கைகொடுக்குமா மருது



ஸ்ரீதிவ்யா நடித்த முதலிரண்டு படங்கள் இன்னும் வெளியாகவில்லை. மூன்றாவதாக நடித்த, வருத்தப்படாத வாலிபர் சங்கம் வெற்றி பெற்றதால், ஸ்ரீதிவ்யா தப்பித்தார். முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டத் தெரியாத, நடிப்பு கிலோ என்னவிலை என்று கேட்கும் இவரது இப்போதைய சம்பளம் 50 லட்சங்கள். ஸ்ரீதிவ்யா நடித்த சமீபத்திய படங்கள் சரியாகப் போகவில்லை. அதேநேரம் பாவாடை தாவணியில் பாந்தமாக வந்து நின்றால், அவர் நடிக்கவே வேண்டாம் என்ற மனநிலை ரசிகர்களுக்கு. அப்படியொரு வேடம்தான் மருது படத்தில் ஸ்ரீதிவ்யாவுக்கு. மாடர்ன் பெண்ணாக நடித்த பெங்களூர் நாட்கள் தோல்வியடைய, கிராமத்துப் பெண்ணாக நடித்த மருதுவைத்தான் அதிகம் நம்பிக் கொண்டிருக்கிறார்.

பழம்பெரும் ந
வரலட்சுமி உ
படங்களில் செ
பாடல்களையு
தமிழ் சினிமா
அதிகளவு அ
டப்பிங் பேசும்
இந்த நிலை
நடிகைகளா
ஆகிய நடிகை
வருகின்றன
தான் நடிக்கு
பாடியுள்ளதா
தற்போது ந
அவர் ஒரு
உறுதி செய்
மனேஜர் கி
வருகிறார்.

யாது என சில வருடங்களுக்கு
ார். ஆனால், இருமுகன் படத்தில்
ித்து விட்டார். இதைத் தொடர்ந்து
ாக நடந்து வருகின்றது.
் படப்பிடிப்பு முடிய,
சண்டைக்காட்சி எடுத்து
ன்தாராவுடனும்
து போல்

டத்தின்
கின்றது.



# நிறைவேறுமா ஆசை?



தமிழ் சினிமாவில் அறிமுகமாகும் நடிகைகள் ஒரே ஒரு வெற்றிப்படத்தை கொடுத்துவிட்டால் அடுத்தது அவர்களுடைய கனவு விஜய் அல்லது அஜித்துடன் நடிக்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். இந்த ஆசை அனைத்து நடிகைகளுக்கும் எட்டிப்பார்ப்பதை யாராலும் தவிர்க்கவே முடியாது. லட்சுமி மேனன், கீர்த்தி சுரேஷ் ஆகிய ஒருசில நடிகைகளுக்கு இந்த வாய்ப்பு வெகு சிக்கிரமே கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்நிலையில் "பிச்சைக்காரன்" பட நாயகி சாதனா டைட்டஸ் அவர்களுக்கும் இந்த ஆசை தற்போது எழுந்துள்ளது. சமீபத்தில் அவர் அளித்த பேட்டி ஒன்றில் "உங்களுக்கு பிடித்த நடிகர் யார்? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "நான் அஜித்தின் தீவிர ரசிகை. அவர் நடித்துள்ள படங்களை ஒன்றுவிடாமல் தவறாமல் பார்த்து விடுவேன். தமிழில் நான் நடிக்கத் தொடங்கிய பிறகு எப்படியாவது அவருடன் ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றேன்" என்று கூறியுள்ளார்.

# சூர்யா இது தேவையா?



சூர்யா தன்னுடன் நடிப்பவர்கள் அனைவரையும் மரியாதையுடன் தான் நடத்துவார். இதில் பெரிய நடிகர், சிறிய நடிகர் என்ற வேறுபாடே இல்லை. இந்நிலையில் 24 படத்தில் நித்யா மேனன் நடிப்பைக் கண்டு மனம் திறந்து எல்லோர் முன்னிலையிலும் பாராட்டினாராம். இதனால், உணர்ச்சிவசப்பட்ட நித்யா மேனன் படப்பிடிப்பிலேயே கண் கலங்கி விட்டாராம்.


# ...ன்னாவின் இலட்சியம்

ரசிகை. சிறந்த நடிகை என்ற பெயர் வாங்குவதே
ு தமன்னா கூறினார்."நான் நடிகையானதற்காக
ிதுவரை நடித்த படங்கள் அனைத்துமே ரசிகர்களிடம்
ன. தொடர்ந்து நல்ல கதையம்சம் உள்ள படங்களில்
த நடிகை என்று பெயர் வாங்குவதே எனது லட்சியம்.
ிதில் தமிழ், தெலுங்கில் பேசத் தெரியாது. இதனால்
டேன். மற்றவர்களை பேசச்சொல்லி நடித்தேன். அதன் பிறகு
ாக கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். இப்போது எனக்கு தமிழ்,
ினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக
ய பலம் .நடந்த விடயங்கள் பற்றி எப்போதும் நினைத்து
பேன். இது பலவீனம். எனக்கு கடவுள் நம்பிக்கை நிறைய
டற்பயிற்சிகள் செய்வேன். பணம் தேவையான அளவில்தான்
ிகமாக பணம் வைத்து இருப்பது நிம்மதியைக் கெடுத்து விடும்.
இல்லை என்பது எனது கருத்து. அது மனதில் இருக்கிறது. நல்ல
ழகானவர்கள். நான் கனவு காண்பது இல்லை. நடிகையாக
வாழ்க்கையே ஒரு கனவு போன்றதுதான்.



# வாடகைக்கு

ஷங்கர் படங்கள் என்றால் பிரமாண்டத்திற்கு பஞ்சமே இருக்காது. அதிலும் தற்போது எடுத்து வரும் 2.0 பட்ஜெட் விண்ணை முட்டுகின்றது. இந்நிலையில் இப்படத்திற்காக டெல்லியில் உள்ள கிரிக்கெட் மைதானம் ஒன்றை வாடகைக்கு எடுக்கவுள்ளார்களாம். இதில் பிரமாண்ட சண்டைக்காட்சி ஒன்றை ஷங்கர் எடுக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.



# திரிஷாவின் வளர்ச்சி



ழம்பெரும் நடிகைகளான கே.பி.சுந்தராம்பாள், பானுமதி,
வரலட்சுமி உட்பட ஒருசில நடிகைகள் தாங்கள் நடிக்கும்
படங்களில் சொந்தக்குரலில் டப்பிங் பேசுவது மட்டுமின்றி
பாடல்களையும் அவர்களே பாடுவார்கள். காலப்போக்கில்
தமிழ் சினிமாவில் பிற மாநிலங்களைச் சேர்ந்த நடிகைகள்
அதிகளவு அறிமுகமானதால் நடிகைகள் சொந்தக்குரலில்
டப்பிங் பேசும் பழக்கம் கூட இல்லாமல் போனது.ஆனால்
இந்த நிலை தற்போது மாறி வருகிறது. பிரபல
நடிகைகளான நயன்தாரா, சமந்தா, தமன்னா, த்ரிஷா
ஆகிய நடிகைகளே சொந்தக் குரலில் டப்பிங் செய்து
வருகின்றனர்.இந்நிலையில் த்ரிஷா ஒருபடி மேலே போய்
தான் நடிக்கும் ஒரு படத்தில் ஒரு பாடலையும்
பாடியுள்ளதாக செய்திகள் வெளி வந்துள்ளது. த்ரிஷா
தற்போது நடித்து வரும் த்ரில் படமான "நாயகி படத்தில்
அவர் ஒரு பாடலை பாடவுள்ளதாக செய்திகள் கிட்டத் தட்ட
உறுதி செய்துள்ளன. இந்தப் படத்தை த்ரிஷாவின்
மனேஜர் கிரிதர் தயாரிக்க கோவி என்பவர் இயக்கி
வருகிறார்.

# கவர்ச்சிகரமான விவசாயக் கொள்கை பணப்பயிர்களுக்கு உருவாக்கப்பட வேண்டும்

*(சென்ற வாரத் தொடர்ச்சி....)*



இறப்பர் பயிர் செய்து அதில் பலன்களைப் பெறுவதற்கு குறைந்தது 6 வருடங்கள் காத்திருக்க வேண்டும். இதன் பயன்தரு ஆயுட்காலம் கூடியது 35 வருடங்களாகும். சரியான தரமான இறப்பர் கன்றுகள் நடுவதால் ஒரு ஹெக்டேருக்கு ஒரு வருடத்திற்கு 2500–3000 kg பால் எடுக்கலாம். இதனை பெருந்தோட்டக் கம்பனிகள் முறையாக செய்வதில்லை. இப்படி முறையாக உற்பத்தி செய்வதனால் 1 கிலோவை 200 ரூபாய்க்கு விற்றாலும் நட்டம் ஏற்படாது.

மொனராகலையில் ஒரு புதிய இறப்பர் உற்பத்தித் திட்டம் உருவாகியுள்ளது. அதில் 2008 ஆம் ஆண்டு ரூபாய் 2 பில்லியன் செலவழித்து 5000 ஏக்கர் இறப்பர் நடுகை ஐக்கிய நாடுகள் சபையின் பண உதவியோடு ஆரம்பிக்கப்பட்டு சிறுதோட்ட இறப்பர் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் நவீன விவசாய முறைகள் பாவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக 2016 ஆம் ஆண்டு 773 மெட்ரிக் தொன் இறப்பரும் 2020 ஆம் ஆண்டு 4960 மெட்ரிக் தொன் இறப்பரும் பெறமுடியும். இன்று தோட்டக் கம்பனிகள் ஒரு ஹெக்டேருக்கு 750 கிலோவைத்தான் பெறுகின்றன. தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட இறப்பர் தோட்டங்களில் 56 சதவீதமான இறப்பர் மரங்கள் 35 வருடத்திற்கு மேற்பட்டவை. ஏனையவை 30–35 வருடத்திற்கு உட்பட்டவை. இன்று RSS 3,4,5 தரம் கொண்ட இறப்பர், இறப்பர் உற்பத்திகள் தாய்லாந்தில் இருந்தும் வியட்நாமில் இருந்தும் 1 கிலோ 200 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. சிறுதோட்ட முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டத்தில் அரசாங்கம் ரூபாய் 109 மில்லியனையும் விவசாய அபிவிருத்தி ஐக்கிய நாடுகள் சர்வதேச நிதியம் ரூபாய் 1.39 பில்லியன் கொடுத்தும் உதவி இருக்கின்றது. இதை விட ஏனைய நிதி உதவிகள் ரூபாய் 110 மில்லியன் கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலமாக 9514 விவசாயிகள் நன்மை பெற்றுள்ளதோடு 216 மில்லியன் கன்றுகள் நடப்பட்டுள்ளன.



இன்று தேங்காயை இறக்குமதி செய்யும் அளவுக்கு எமது தென்னை பராமரிப்பு சென்றுவிட்டது. இன்று இந்தியத் தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் ஒரு தென்னங்குலையில் 30 காய்கள் வரை காணப்படுகின்றன. ஒரு வருடத்தில் 8 தடவைகள் வரையில் காய்கள் பறிக்கப்படுகின்றன. ஆனால் இலங்கையில் ஒரு மரத்தில் ஒரு வருடத்தில் சராசரி 52 காய்கள் மாத்திரமே பறிக்கப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டு தென்னை சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி மூலம் 538 மில்லியன் ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கப் பெற்றது. 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தெங்குப் பதப்படுத்தல் துறையில் உள்நாட்டு உற்பத்திப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு முதல் முறையாக தேங்காய் இறக்குமதிக்கு முன் மொழியப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் இன்றைக்கு 15 வருடங்களுக்கு முன் தொடங்கிய "மைட்டா" நோய்த் தாக்கம் காரணமாக தேங்காய் ஒன்றின் நிறை 30% ஆக குறைவடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டுவரை 280000 தென்னை மரங்கள் இந்நோய் காரணமாக வெட்டப்பட்டுள்ளன. தெங்கு வளர்ப்பாளர் சமூகத்தில் சிறிய முதல் நடுத்தரம் வரையில் மற்றும் பெருந்தோட்ட உரிமையாளர்கள் எனப் பல பிரிவுகள் காணப்படுகின்றனர். தேங்காய் விதை ஒன்றின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் பேணுவதற்கு ஒட்டுமொத்த தெங்கு உற்பத்தியாளர்களுக்கும் நிதி நம்பகத்தன்மை அத்தியாவசியமானதாகும். தேங்காய் இறக்குமதிக்குப் பதிலாக தென்னை சார் நோய்க்கு ஒரு மாற்றுவழி கண்டுபிடிக்க வேண்டும். தென்னை உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய இடங்களில் ஒவ்வொரு குடும்பமும் 5 தென்னங்கன்றுகளையாவது நடுவதற்கு அரசாங்கத்தினால் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப் பணப்பயிர் விளைவில் கூட்டாண்மைக் கம்பனிகளுடைய பங்கு படிப்படியாக குறைந்து செல்கின்றது. இதற்குப் பதிலாக சிறிய மற்றும் நடுத்தரப் பயிர்கள் முன்னேறிக்கொண்டு செல்கின்றன. அதில் தேயிலை 73%, இறப்பர் 70%, தென்னை 95% பங்குபெறுகின்றன.

எனவே மற்றொரு கேள்வி உருவாக்கப்படுகின்றது. அது கூட்டாண்மை பெருந்தோட்டக் கம்பனிகள் தேவையா என்பதே. இவர்கள் உற்பத்தி செய்யாவிட்டாலும் இவர்களுடைய அங்கத்துவக் கம்பனிகள் தான் 100% ஏல விற்பனையில் பங்குபெறுகின்றன. ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட இந்த ஏல விற்பனை முறை இன்று தேவையா? அரசாங்கம் இந்தத் தேயிலை விற்பனையை தரகர்கள் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என சட்டரீதியாக கூறுகின்றது. இந்த முறை மாற்றப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு தோட்டமும் தேயிலையைத் தரகர்கள், ஏலம் ஊடாக விற்பனை செய்யாமல் நேரடியாக விற்க வழி செய்ய வேண்டும். இது இந்தியாவிலும் கென்யாவிலும் நடைமுறையில் உள்ளது. தேயிலை, இறப்பருடைய விலை இன்று குறைந்துள்ளது. இதன் காரணமாக தொழிலாளரின் அடிப்படைத் தேவையான வாழ்வாதாரத்திற்கான சம்பளம் கொடுக்கமுடியாது என்ற கருத்தே முன்வைக்கப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. தேயிலை, இறப்பர் விலை காலத்திற்கு காலம் கூடியும் குறைந்தும் செல்கின்ற ஒன்று. இது வியாபார உலகில் நடக்கும் சாதாரண ஒரு நிகழ்வு. ஆனால் தேங்காயின் விலை ரூபாய் 25 இற்கு காணப்பட்டது. இன்று ரூபாய் 60 இற்கு சென்றுள்ளது. காரணம் இதன் உற்பத்தி குறைந்து கொண்டு செல்கின்றது. தேவை கூடிக்கொண்டு செல்கின்றது. தேங்காயானது ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இன்று தேயிலை விலை குறைவதற்கு காரணம் தேயிலை உற்பத்தி கூட்டப்பட்டு அதன் கேள்வி குறைவடைந்துள்ளது. அதேபோல மசகு எண்ணெய் விலை குறைந்தபடியால் மலிவான செயற்கை இறப்பர் (Synthetic rubber) முழு உலகிலும் பரவி இருக்கின்றது. மசகு எண்ணெய் விலை கூடும் பொழுது இறப்பர் விலை

செ.இ. பெருமாள்

அதிகரிக்கும். ஆகையால் இன்று தேயிலை விலை குறைந்த காரணத்தை வைத்து தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று இதற்கு காரணம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஏனைய பயிர்களான கொக்கோ 624 ஹெக்டேரிலும் தோடம்பழம் 194 ஹெக்டேரிலும் வீட்டுத் தோட்டத்திற்கென 68 ஹெக்டேரிலும் ஆயுள்வேத மூலிகைச் செடிகளுக்கு 8.5 ஹெக்டேர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது வரவேற்கத்தக்க ஒரு திட்டமாகும். இதேபோல் இந்தக் கம்பனிகளிடம் குத்தகைக்குக் கொடுத்த காணிகளை அரசாங்கம் தோட்டத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஹெக்டேயர் வீதம் 50 வருட குத்தகைக்கு கொடுத்து அரசாங்க உதவியுடன் ஒவ்வொரு தோட்டத்தையும் தொழிலாளர் கூட்டுறவுச் சபையாக மாற்றினால் தேயிலையும் இறப்பரும் உற்பத்தி அதிகரிக்கும். தொழிலாளரும் சந்தோசமாக வாழும் அளவிற்கு வருமானம் பெறுவார்கள்.

இன்று கிட்டத் தட்ட 4,00,000 சிறுதோட்டத் தொழிலாளர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு 0.5 ஏக்கர் காணி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அதில் 5 நாட்கள் மாத்திரமே வேலை செய்கின்றார்கள். காரணம் அவர்களுக்கு பிரதான வருமானம் தரக்கூடிய அரச, தனியார் மற்றும் சுய தொழில்கள் உள்ளன. ஆனால் இந்தப் பெருந்தோட்ட மக்கள் வேறு பிரதான வருமானங்கள் அற்றவர்கள். ஆகையால் ஒரு ஹெக்டேயர் காணி குத்தகைக்கு கொடுத்தால் 5 வருட காலத்தில் மீள் நடுகை செய்து மாற்றுப் பயிர்கள் செய்யும் பட்சத்தில் தற்பொழுது ஒரு வருடத்தில் கிடைக்கும் 1200 கிலோவினை 3000 கிலோவாக மாற்றலாம். இதன் மூலம் இம் மக்களுக்கு 40 பேர்ச் காணியினை தாராளமாக வழங்கி அவர்களுக்கு வீடு கட்டுவதற்கும் சுய தொழில், வீட்டுத் தோட்டம் என்பவற்றிற்கும் பயன்படுத்தலாம்.இப்படியான திட்டம் மூலம் இலங்கை, பணப்பயிர்கள் மூலம் பாரிய அந் நிய செலாவணியை ஈட்டுவதோடு இப் பெருந்தோட்ட மக்களும் யாருக்கும் அடிமையில்லாமல் சுயமாக வாழ வழி செய்யும். இன்று கிட்டத்தட்ட 650 தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவை இன்னும் நவீன மயப்படுத்தப்படவில்லை. இதற்குப் பதிலாக சிறிய தொழிற்சாலைகள் மூலம் அவர்களே தேயிலையை தயாரிக்கலாம். உதாரணமாக சிறிய தொழிற்சாலைகள் பல இந்தியாவில் உள்ள "டொகசலாய்" தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இன்று பெருந்தோட்டத்துறையினர் எதிர்நோக்கும் சவால்களை மாற்ற வேண்டும் என்றால் தோட்டத்துறையை மீண்டும் கம்பனிகளிடம் கையளிக்க முடியாது. ஆகவே ஒரு கவர்ச் சிமிக்க விவசாய பொருளாதாரக் கொள்ளை உருவாக்கப்பட்டு அதன் மூலம் தொழிலாளர் சமூகமும் நாடும் முன்னேற்றப்படக் கூடிய திட்டத்தை முன்வைக்க வேண்டும். இது நடைமுறைப் படுத்தப்படாமல் விட்டால் இப்பணப் பயிர்ச் செய்கை அழிவை நோக்கியே செல்லும்.

# தனியாகச் செல்கின்றீர்களா?



உடைமைகள் அருகிலேயே இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவை மீது வைத்திருக்கும் கண் பார்வையிலிருந்து அகலக் கூடாது. ஏனெனில் "வணக்கம்" என்று சொல்லி முடிக்கும் முன், பொருள்கள் மாயமாய் மறைந்திருக்கும். ஆகவே எந்நேரமும் விழிப்புணர்வோடு கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

தனியாக வெளியில் செல்லும் போது விலையுயர்ந்த நகைகளை அணிந்து செல்லவேண்டாம். இன்னும் சொல்லப்போனால், தங்க, வைர நகைகளை அறவே தவிர்த்து, கவரிங் நகைகளையோ அல்லது பிளாஸ்டிக் காலான நவீன வடிவத்தில் உள்ள நகைகளை அல்லது மணிகளை அணிந்து செல்லவும்.

பணம் வைத்திருக்கும் கைப்பையை மிக அருகிலேயே அல்லது கைகளிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், கொண்டு செல்லும் பணத்தை ஒரே இடத்தில் வைக்காமல், அவற்றைப் பிரித்து, பின் பொக் கெட் அல்லது பையின் பக்க வாட்டுப் பகுதிகள் போன்ற, வெவ் வேறு இடங்களில் போட்டு வைக்க வேண்டும். ஏதேனும் துரதிர்ஷ்டவசமான நிகழ்வின் போது, அச்சூழலில் இருந்து வெளியே வருவதற்கு, இந்தப் பணம் மிகவும் உதவியாக இருக்கும்.முதன்முறையாக தனியாக பயணிப்பவராய் இருப்பின், தைரியமாக நடந்து கொள்ளவேண்டும். அதுவும் முதன் முறையாக தனியாக பயணிக்கிறீர்கள் என்பது வெளியே தெரியும்படி எந்த தருணத்திலும் நடந்து கொள்ளக் கூடாது.

என்ன செய்கிறோம், எங்கே செல்கிறோம் என்பதில் தெளிவாக இருப்பதாகவே எப்போதும் காட்டிக் கொள்ள வேண்டும். தலை நிமிர்ந்து நடந்து, திடமான குரலில் பேசவேண்டும்.அந்நியர்களிடம் இருந்து எந்த விதமான பொருளையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. யாரேனும் பிஸ்கட் அல்லது பழங்கள் கொடுத் தால், அதை பணிவாக மறுத்து விட்டு, இருக்கைக்குத் திரும்ப வேண்டும்.

# பெண்களிடம் பெண்களுக்கே




ஒரு பெண்ணுக்கு பிடிக்கும் விஷயம், மற்றொரு பெண்ணுக்கு பிடிக்காது. மற்றொரு பெண்ணுக்கு பிடித்த விஷயம், இன்னொரு பெண்ணுக்கு பிடிக்காது. ஆனால், என்ன தான் இருந்தாலும், நமது நாட்டு கலாசாரத்தோடு ஒப்பிட்டு பார்க்கையில் ஒருசில விஷயங்களை செய்யும் பெண்களை பெரும்பாலான பெண்களுக்கு பிடிக்காமல் போகிறது.

அதைப் பற்றி இனிக் காண்போம் வெட்டி பந்தாக் காட்டிக் கொண்டு ஆண்களுக்கு நிகராக சீன் போடும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பது இல்லையாம். செக்ஸியாக என்ற பெயரில் மிகவும் அருவருப்பான முறையில் ஆடை அணியும் பெண்களை பெண்களுக்குப் பிடிப்பது இல்லை. பெண், ஆண் சமம் என்ற பெயரில் குடிப்பது, சிகரெட் பிடிப்பதை பந்தாவாக கருதும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பதில்லை.

அடிக்கடி வெவ்வேறு ஆண்களுடன் டேட்டிங் செல்வதை வழக்கமாக வைத்திருக்கும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பதில்லை. சிகரெட் பிடிப்பதைப் போலவே, ஆபாச வார்த்தைகளை பேஷன் என்ற பெயரில் வார்த்தைக்கு, வார்த்தை உபயோகிக்கும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பதில்லை

# இணைய தள அரட்டை வேண்டாமே!



இளைய தலைமுறையினர் தங்களது வாழ்க்கைத் துணையைத் தேடும் ஒரு முக்கிய இடமாகவும் இணையத்தள அரட்டை அமைந்துள்ளது. இதில் தவறில்லை. ஆனால் எப்போதுமே அது சரியாகவும் இருப்பதில்லை. அதாவது இணையத்தில் அரட்டையில் ஈடுபடுவோரில் 15% திருமணமானவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நீங்கள் அரட்டை அடிக்கும் நபரைப் பற்றிய உண்மையான நிலை தெரிந்துகொள்ளாமல் உங்கள் முழுப் பெயரையோ, முகவரி, தொலைபேசி இலக்கம், பணியிடம் போன்ற எதையும் வழங்க வேண்டாம். பொதுவாக மின்னஞ்சலுக்கும் சரி, அரட்டைக்கும் சரி நீங்கள் உங்கள் பெயரைப் பயன்படுத்தாமல் ஏதாவது செல்லப் பெயரை வைத்துக் கொள்வது அதிக பயனளிக்கும். ஒருவரைப் பார்த்தே ஓரளவிற்கு அவரைப் பற்றி அறிந்து கொள்ள இயலும். எனவே நீங்கள் தொடர்பு கொள்ளும் நபரின் புகைப்படத்தைக் கேட்கலாம்.

புகைப்படத்தை அனுப்ப ஏதேனும் சாக்குப்போக்கு சொன்னாலோ, அனுப்பாமல் இருந்தாலோ அவருடனான தொடர்பை குறைத்தோ அல்லது நிறுத்திக் கொள்வதோ நல்லது. அப்படியே அந்த புகைப்படத்தை அனுப்பினாலும் அது தற்போதைய புகைப்படம் அல்லது அவருடையதுதான் என்பதில் எந்த ஆதாரமும் இல்லையே. கணினியின் திரையில் உங்களுடன் உரையாடும் நபரின் அரட்டைப் பேச்சும் அவரது குணநலனும் ஒன்றுபோல இருக்கும் என்று நினைத்து ஏமாறாதீர்கள்.

பார்க்க ஸ்மார்ட்டாக இருப்பது போலவும், பெரிய நிறுவனத்தில் பணியாற்றுவதாகவும், திருமணமாகாதவர் என்றும் கூறுபவர்கள் பயங்கர குண்டாகவும், வேலையில்லாமல் சுற்றித் திரிபவராகவும், கல்யாணமாகி பல குழந்தைகள் பெற்றெடுத்தவராகவும் இருக்கலாம். நீங்கள் தெளிவாகவும், நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் இணையத்தில் அரட்டை அடித்து நல்ல நல்ல நண்பர்களையும் பெறலாம். அவர்களை ஆயுள் வரை நண்பர்களாகவும் தொடரலாம்.

# நில்! கவனி!



பெண்களே எழுதப் பழகுங்கள். கவலைகளை, எரிச்சல்களை, தோல்விகளை குறைக்க எழுத்து வடிகாலாகும்.

குடும்பம், கவலைகளை உள்ளுக்குள் புதைக்காமல் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் பகிருங்கள்.

தினமும் உங்கள் மனதை மகிழச்செய்யும் செயல்கள் எதையேனும் ஒன்றைச் செய்யுங்கள். அதில் பொருளாதாரப் பயன் ஏதும் இல்லாவிட்டாலும் கூட பரவாயில்லை.

பிறருக்காக எதையேனும் செய்யப் பழகுங்கள். செய்யும் அனைத்து செயல்களையும் ஆத்மார்த்தமான அன்போடு செய்யுங்கள்.

என்னை யாரும் புரிந்து கொள்ளவில்லையே எனும் முனகல்களைத் தவிர்த்து பிறரைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.

உங்கள் உடை, நடை பாவனைகளின் தன்னம்பிக்கை மிளிரட்டும். உடைகளை நன்றாக அணிவதே தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

நிறைய வேலைகளை ஒரே நாளில் முடிக்க நினைக்காதீர்கள். ஒவ்வொரு வேலைக்கும் இடையே சரியான இடைவெளி விடுங்கள்.

வார இறுதிகள், விடுமுறை நாட்களை மிகச் சிறப்பாகச் செலவிடுங்கள். வெளியே செல்வது, கடற்கரைக்குச் செல்வது என மனதை புத்துணர்ச்சியாக்குங்கள்.

இன்றைய பணிகளை செவ்வனே செய்தால் நாளைய பணிகள் செவ்வனே நடைபெறும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

பிடிக்காத வேலை இருந்தால் அதை முதலிலேயே முடித்து விடுங்கள். அப்போது தான் தொடர்ந்து செய்யும் பிடித்தமான வேலைகள் மனதை இலகுவாக்கும்.

மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், அடுத்தவர்களைக் காயப்படுத்தாமல் வாழப்பழகுங்கள். அது உங்களை பக்குவப்படுத்தும்.

கடவுள் பூமியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். உடனே வானத்தில் இருந்து பூமியை நோக்கிப் புறப்பட்டார். இடையில் வரும் பொழுது எங்கே சென்று இறங்குவதென்று சிந்தித்தார். அந்தவேளை இலங்கையின் யாழ்ப்பாணத்திற்குச் சென்று இறங்கலாம் என மனதில் பட்டது.

இப்பொழுது யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்கு எல்லா ஊர் மக்களும் வருகிறார்கள். ஏன் எல்லா நாட்டு மக்களும் வருகிறார்கள். கடவுளும் வானத்திலிருந்து யாழ்ப்




பாணத்தைப் பார்ப்பதற்கு வந்து இறங்கினார்.

வந்து இறங்கிய கடவுள் இங்குள்ள குறைநிறைகளைக் கேட்டறிய விரும்பினார். மக்களை விசாரிப்பதற்கு முன் மரங்களை விசாரிப்பதற்கு ஆயத்தமானார்.

அங்கே பெரிய ஆலமரம் நிற்பதைக் கண்டார். அருகில் சென்றார். அதனைப் பார்த்து 'உனது குறை நிறைகளைச் சொல்' என்று கேட்டார்.

கடவுள்தான் தன்னிடம் கேட்கிறார் என்று அறிந்து கொண்ட ஆலமரம் 'கடவுளே இவ்வளவு பெரிதாக வளர்வதற்குச் சக்தியைத் தந்த நீங்கள் எனது பழத்தை மட்டும் சிறிதாகப் படைத்திருக்கிறீர்கள். இது எனக்கு பெரும் குறையாக இருக்கிறது' என்று சொல்லியது.

கடவுள் ஆலமரத்தைப் பார்த்து தலையை ஆட்டிவிட்டு சிறிது தூரம் சென்றார்.

அங்கு திடீரென நின்றார். அங்கு வளர்ந்திருக்கும் பலா மரத்தைப் பார்த்தார். 'உனது குறை நிறைகளைச் சொல்'' என்றார். கடவுள்தான் வந்து என்னிடம் கேட்கிறார் என்று சந்தோசப்பட்டது பலா. "கடவுளே இனிப்பான சுளைகளையுடைய பெரிய பழங்களை என் மூலம் காய்க்க வைத்தீர்கள். மக்களோ முள் குத்துது என்று முணுமுணுக்கிறார்கள்'' என்று சொல்லியது பலா.

இதனைக் கேட்ட கடவுள் சிரித்துக் கொண்டார். பின் தலையை ஆட்டிவிட்டு அப்பால் சென்றார்.

இன்னும் சில மரங்களை விசாரிக்கலாம் என்று சிறிது தூரத்தில் உள்ள பனந் தோப்பை அடைந்தார். அங்கும் பனைகளின் குறை நிறைகளை விசாரித்தார். பனைகளோ "கடவுளே எங்களை உயரமாக வளரப் படைத்தீர்கள் நன்றி சொல்கிறோம். மக்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கிறோம். யுத்த காலங்களில் மட்டும் எம்மினத்தை அழிக்கிறார்களே'' என்று குறைபட்டுக் கொண்டன.

தலையை ஆட்டிச் சிரித்த கடவுள் மரங்களுக்கே இவ்வளவு குறைகளென்றால் மனிதர்களுக்கு எவ்வளவு குறைகள் இருக்கும் என்று வானத்தை நோக்கித் திரும்பினார்.

**கவிஞர் துரையர்**

## வாரமொரு குறள்



துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

பொருள்

உலகில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூற முடியுமா? அதுபோலத்தான் உண்மையாகவே பற்றுகளைத் துறந்த உத்தமர்களின் பெருமையையும் அளவிடவே முடியாது.

## குட்டீஸ் பக்கம்



## விடுகதை

1. வாயில்லை புத்திமதிகள் சொல்வான். காலில்லை கடந்தும் செல்வான். கையில்லை உளங் காட்டிக் கொள்வான். உயிரில்லை ஒரு நாளும் சாக மாட்டான். – அது என்ன?
2. மேலே பறக்கும் பருந்தல்ல கட்டுண்டு இருக்கும் மாடல்ல அழகான வாலுண்டு குரங்கு மல்ல – அது என்ன?
3. ஊர் உண்டு மக்களில்லை மலையுண்டு மரங்களில்லை ஆறுண்டு நீரில்லை அணையுண்டு கல்லில்லை வழி உண்டு வாகனமில்லை வண்ணமுண்டு உயிரே இல்லை – அது என்ன?
4. குடிக்கத் தண்ணீர் உண்டு குளிக்கத் தண்ணீர் இல்லை – அது என்ன?
5. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடைக்குது பூ – அது என்ன?

விடைகள்:
1. புத்தகம் 2. பட்டம்
3. தேசப்படம் 4. தேங்காய்
5. நட்சத்திரம்

## பட்டாம் பூச்சி



சின்னச் சிறகை விரித்தே
சீராய் பறக்கும் பூச்சி
பட்டுப் போல அழகாய்
பறக்கும் பட்டாம் பூச்சி
வண்ணப் பூக்கள் தேடி
தாழ்ந்து பறக்கும் பூச்சி
பூக்கள் மீது அமர்ந்தே
தேனை உறிஞ்சும் பூச்சி
சிறுவர் விரும்பும் பூச்சி
தீமை செய்யாப் பூச்சி
தொட்டுப் பார்க்கப் போனாலே
எட்டப் போகும் பூச்சி
தூரப் பறந்து போனாலும்
மனம் போகும் பின்னாலே
தேடி நாடிச் செல்வேனே
நல்ல பட்டாம் பூச்சியை !

## ஹெலன் கெல்லர்

ஹெலன் கெல்லர் என்பவர் பிறவியிலேயே காது கேளாதவராகவும், பேசமுடியாதவராகவும், பார்வையற்றவராகவும் பல துன்பங்களுடன் பிறந்தவர். ஆனால், இவர் உலகிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கெல்லாம் ஒளிவிளக்காகத் திகழ்கிறார்.



அவருடைய எண்ணங்கள் ஆழமாகவும், அருமையாகவும் இருந்தன.

"பார்வையற்ற நான், பார்வையும் பிற திறன்களுடைய அனைவருக்கும் ஒன்றைக் கூற விரும்புகிறேன்...

நீங்கள் காண்பதையெல்லாம் கண்ணாரக் காணுங்கள். நாளையே உங்கள் கண் பார்க்கும் சக்தியை இழந்து விட்டால்...? என்று எண்ணிப் பார்த்துப் பார்ப்பதை எல்லாம் நன்றாக ரசித்துப் பாருங்கள். மற்ற உறுப்புகளையும் அப்படியே பாருங்கள்...

பறவையின் பாடலைக் குரலின் இனிமையை, இசைக் கருவிகளை மீட்டுவதால் எழும் இனிய நாதத்தைக் காதாரக் கேளுங்கள். நாளையே கேட்க முடியாமல் போனால் என்ன செய்வது என்கிற எண்ணத்துடன் உங்கள் காதுகளைப் பயன்படுத்துங்கள்...

நாளையே தொடும் உணர்வைக் கைகள் இழந்து விடக் கூடும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு ஒவ்வொரு பொருளையும் தொடுங்கள். பூக்களின் நறுமணத்தை நுகரும் போதும், ஒவ்வொரு வேளை உணவை உண்ணும் போதும், நாளையே நுகரும் சக்தியும், சுவையுணர்வும் இல்லாமல் போய் விடக் கூடும் என்ற எண்ணத்தோடு செயல்படுங்கள்''

**அவருடைய கருத்து உண்மை தானே...?**

## பஞ்ச தந்திரத்தில் சில கருத்துகள்

- பணத்தைச் சேர்ப்பதிலும் துன்பம் சேர்த்த பணத்தைக் காப்பதிலும் துன்பம் அதை இழந்து விட்டாலும் துன்பம் செலவிட்டு விட்டாலும் துன்பம். பணத்தால் எப்போதும் துன்பமே உண்டாகிறது.
- பழக்கிய யானைகளைக் கொண்டு காட்டு யானைகளைப் பிடிப்பதுபோல பணத்தைப் போட்டுத்தான் பணத்தை ஈட்ட வேண்டும்.
- செல்வம் சேர்ந்தவனிடம் அகம்பாவம் சேரும்.
- உணர்ச்சி வசப்படுபவன் ஆபத்தில் சிக்கிக் கொள்வான்.
- தன்னிடம் குவிந்த செல்வத்தை, தானும் அனுபவிக்காமல், நற்காரியங்களுக்கும் செலவிடாமல் இருப்பவன் சுகம் பெற மாட்டான். அவன் பணம் படைத்த முட்டாள்.
- சிங்கத்துக்கு அரசனாக முடிசூட்டு விழாவோ, சடங்குகளோ விலங்குகள் செய்து வைக்கவில்லை. தன்னுடைய பராக்கிரமத்தால் அல்லவோ சிங்கம் அரச பதவி வகிக்கிறது.
- பலசாலிக்கு பாரம் என்று ஒன்று இல்லை.
- முயற்சி உடையவர்களுக்கு தூரம் என ஒன்று இல்லை.
- கல்வியாளர்களுக்கு அந்நிய நாடு என ஒன்று இல்லை.
- அன்போடு பேசுபவர்களுக்கு அன்னியன் என ஒருவரும் இல்லை.
- சமய சந்தர்ப்பம் தெரியாமல் பிருகஸ்பதியே பேசினாலும் அவன் வெகுமதி பெறாமல் போவது மட்டும் அல்லாமல் வெறுப்பையும் தேடிக் கொள்கிறான்.
- குதிரை, ஆயுதம், வீணை, சொல், புத்தகம், ஆண், பெண் இவை அனைத்தும் பயன்படுவதும், பயன்படாமல் போவதும் உபயோகிப்பவரின் திறனைப் பொறுத்து உள்ளது.

பிரம்மாவே பயமுறுத்தினாலும் தைரியசாலி தைரியத்தைக் கைவிடுவதில்லை.

- கோடை கால வெயில் குட்டையைத்தான் வற்றச் செய்யும். பெரும் நதிகளோ, எப்போதும் பெருகி ஓடிக் கொண்டேயிருக்கும்.
- நெருக்கடி இல்லாத சாதாரண காலத்தில் எல்லோரும் அறிவாளிகளாக இருக்க முடியும்.
- அரசனின் அருகில் இருந்து ஊழியம் செய்பவன், நல்ல குடும்பத்தில் பிறக்காதவனாகவோ, மூடனாகவோ, கருணை இல்லாதவனாகவோ இருந்தாலும் அவனை எல்லோரும் மதிக்கிறார்கள்.



# எங்கள் ஊரிலை இப்படியும் நடக்குதோ?

பா. பாலச்சந்திரன்
மயிலணி, சுன்னாகம்

"**தம்பி** சுந்தரம்! பத்திரிகை எடுத்துப் போட்டியோ, இனித்தானோ?" என்று குலநாயகம் மாஸ்ரர் காரியதரிசி சுந்தரத்தைக் கேட்டார்.

"ஓம் மாஸ்ரர், எல்லாம் இன்றைக்கு வந்துவிட்டன" என்று சந்தோசத்துடன் சுந்தரம் சொன்னார். உடனே மளமள வென்று மாஸ்ரர் வேகமாக நடந்து சனசமூக நிலையத்திற்குச் சென்றார்.

"நல்ல காலம் வைத்திலிங்கம் வரவில்லை. நான் முதலில் எல்லாத்தையும் சும்மா ஒரு மேலோட்டம் போடலாம்" என்று முணுமுணுத்தார் குலநாயகம். வைத்திலிங்கம் படித்தவர், ஆனால் உத்தியோகம் பார்க்க அவரது மனதில் விருப்பமில்லை. அவர் ஒரு சுதந்திரப் பிரியர். தோட்டம் செய்தவர். இப்போ வயது அறுபத்தெட்டு. பிள்ளைகள் தான் தோட்டம் செய்கிறார்கள். அவர் பத்திரிகை பார்ப்பதும், ஊர்க்கதை பேசுவதும்தான் தொழில். அதற்கிடையில் அவருக்கு மூக்கு வேர்த்து சனசமூக நிலையத்திற்கு வந்து விட்டார்.

"என்ன மாஸ்ரர் எல்லா பேப்பரையும் எடுத்து வைத்திருக்கிறீர் எனக்கு ஒன்றைத் தாருமன்?" என்றார் வைத்திலிங்கம்.

"தாராளமாய் பாரும். நீரும் நானும் தானே எமக்குள் ஏன் போட்டி?" என்றார் குலநாயகம் மாஸ்ரர்.

"மாலை நேரம் என்றால் பக்கம் பக்கமாய் வைத்திருப்பார்கள் பேப்பர் படித்த மாதிரியும் இருக்காது" என்றார் வைத்திலிங்கம்.

இருவரும் அரை மணித்தியாலம் மிகவும் அமைதியாய் படிப்பார்கள். பின்பு விமர்சனம் நடக்கும். இந்த சந்தர்ப்பத்தை வாசிக்கக் கூடிய அளவிற்கு கண் தெரியாத காசிநாதர் பயன்படுத்துவது வழக்கம். அவர் தேயிலைத்தோட்டத்தில் ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர். வயது எண்பது. அவர் வந்து இவர்களின் விமர்சனத்தைக் கேட்டு செய்திகளை அறிவார். அதைவிட குறுக்கு கேள்விகளும் கேட்பார். இப்போ காசிநாதரும் வந்துவிட்டார். அவர் புகையிலையையும் வாய்க்குள் வைத்துக் கொண்டு எப்போ வைத்திலிங்கம் ஆரம்பிப்பார் என்று இறைச்சியை வாயில் வைத்திருக்கும் சிங்கத்தின் வாயைப் பார்க்கும் நரி மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார். கடவுளே! ஒருமாதிரி வைத்திலிங்கம் தலையை நிமிர்ந்து குலநாயகத்தைப் பார்த்தார். காசிநாதருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"என்னெல்லாம் பேப்பர்கள் சொல்லுது?" என்றார் காசிநாதர்.

"இல்லையண்ணை இண்டைக்கு ஆசிரியர் தலையங்கத்தில் நல்ல ஒரு விடயத்தைப் பற்றி எழுதி இருக்கிறார். மிகவும் முக்கியமான விடயம்" என்றார் வைத்திலிங்கம்.


"எந்தப் பேப்பர்? என்ன விடயம்?" என்றார் காசிநாதர் தனது வழமையான பாணியில்.

"வழமையான பேப்பர்தான். சமூக சீர்கேடுகள் யாழ்ப்பாணத்தில் மிகவும் மோசமாகி விட்டது. யாரும் எதுவும் செய்யாமல் இருக்கிறார்கள். பின்பு கவலைப்பட வேண்டியிருக்கும். பெரியவர்கள் உடனடியாக நிலைமையை திருத்தவாவது செய்ய வேண்டும் என்று எழுதியிருக்கிறார்" என்றார் வைத்திலிங்கம் பெருமூச்சுடன்.

" 'உயர்ந்தோர் மாட்டே உலகு' என்று அந்த நாட்களில் மனிதர் பெரிய சான்றோர்களைப் பார்த்து நடந்தனர். இப்ப சினிமாக்காரரைப் பார்த்து நடந்தால் உலகம் என்ன மாதிரி வரும். நாலு தாரம், மூன்று தாரம் கட்டினவையைப் பார்த்து நடந்தால் ஒழுக்கம் எப்படி வரும்? வீட்டில் சும்மா படங்களுக்குப் பதிலாக சினிமா நடிகரின் படத்தை வைத்து, அதே நோக்கத்தோடு பிள்ளை குட்டிகளுக்கும் அவர்களின் நாமங்களையும் வைத்து, சினிமாக்காரரின் பெயர்களை உச்சரித்துக் கொண்டு, சின்னத்திரையையும் பார்த்துக் கொண்டு இருந்தால் உலகம் எப்படி உருப்படும்?" என்றார் காசிநாதர் கவலையுடன்.

"இப்ப பாருங்கோ காசிநாதரண்ணை குடிவெறி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சிறுவயது கர்ப்பம், சிறுவர் துஷ்பிரயோகம், ஏமாற்று வித்தை என்பன அதிகரித்து விட்டன. எங்கன்ரை வேலியோரங்கள் எல்லாத்திலும் மதுப் போத்தல்கள் கிடக்கின்றன. அதுக்கெல்லாம் களவாய் இருட்டிலை குடிக்கிற இளம் ஆட்களின் வேலை. சிலசனம் பெனாட்டில் போன்ற இருமல் மருந்துகளையும் வாங்கி குடிக்குதுகள். ஒரு நாள் எங்கன்ரை நாதனின் பாமசியிலே ஒரு கிழவன் உந்த மருந்துப் போத்தலை களவெடுத்ததை எனது பேரன் கண்டுட்டு சொல்லிப்பார்த்தால், அந்தக் கிழவனின் கையில் ஒன்றும் மடியில் ஒன்றும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது" என்று வைத்திலிங்கம் அதிசயத்துடன் கூறினார்.

"உப்படி இருட்டிலை குடிக்கத்தான் பொடியள் தரவளி களவெடுக்கிறது, கொலை செய்கிறது. பாடசாலை மாணவர்கள் போதைப் பவுடர் பாவித்ததை பத்திரிகையில் பார்த்தனான்.



சில வயோதிபர்கள் குடிவெறியிலை தான் சிறுமிகளை பாலியல் வலோற்காரம் செய்கிறார்கள் போலும். வயோதிபர் அட்டையை வைத்துக் கொண்டு, சமுதாயத்தில் மூத்த பிரஜை என்ற பெயரையும் தாங்கிக் கொண்டு, கைகால் சோர்ந்து, சளி, இருமல் பிடித்த பின்பும், பஜகோவிந்த கிழவன் மாதிரி தலையும் நரைத்த பிறகும் அவர்களில் சிலருக்கு பெண்ணாசை. எழுபதிலும் இருபத்தேழு செயற்பாடுகள். தேகத்திற்குத் தான் வயது போலும், மனதிற்கு மாறாத இளமை. அவர்களைப் பொறுத்த வரை எவ்வளவு வெட்கக் கேடு. இவர்களை எந்த சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்புவது? கலியின்ரை விளையாட்டுத் தான். இதை வேறு என்ன என்று கூற?" என்று எரிச்சலுடன் குலநாயகம் மாஸ்ரர் கூறினார்.

"மற்றது சினிமாவிலை இளசெற்றுக்கள் குடிவகை உபயோகிப்பது, புகைப் பிடிப்பதைப் பார்த்து ஒரு பாஷனாகிவிட்டதோடு, சில இளம் பேர்வழிகளுக்கு அது ஒரு அந்தஸ்துமாகிவிட்டது. காதல், குடிவெறி, சண்டை சச்சரவுகளுக்கு சினிமாவின் பங்கு அதிகம். கதாநாயகன் குடிக்கிறமாதிரி, புகைப்பிடிப்பது மாதிரி காட்டுவது மிகமிகப் பிழை. கதாநாயகனை ஒழுக்க சீலராகக் காட்ட வேண்டும். நாங்கள் சிறுவர்களாய் இருக்கும் போது கடையில் வடை வாங்கிச் சாப்பிட, தேநீர் குடிக்கக் கூட வெட்கம். ஒரு மாதிரி கதைப்பார்கள். இப்ப கொழும்பில் வீட்டில் சமைத்தால் வீடு புகைப்பிடிக்கும் கடையில் எடுத்து சாப்பிடலாம் என்று வீட்டு முதலாளிகள் கூறுகிறார்கள். பெண்களோடு கூடப்பிறந்தும், றோட்டிற்குப் போனால், பெண்களைக் கண்டால், தகாத வார்த்தைகளை உபயோகித்தல், கீழ்த்தரமாக நடத்தல் என்பவற்றைச் செய்கிறார்கள். காடையர் அட்டகாசம் றோட் டோரங்களில், சந்திகளில் நடைபெறுகிறது" என்றார் வைத்திலிங்கம்.

"இளம் வயதில் புகைத்தல் இதுவும் ஒரு கெடுதல். எல்லாம் ஒரு பாஷன் மாதிரி. உழைப்பில்லை அதுக்குள் ஒரு காதல் வேண்டி இருக்கு. இப்பவேற மோட்டபைக் வேண்டித் தரச் சொல்லி பிடிவாதம் எல்லாம் கஷ்டமாய்ப் போச்சு" என்றார் குலநாயகம் மாஸ்ரர்.

றோட்டிலை விபத்துக்கள் காரணம் குடிவெறியிலை மோட்டார்பைக் ஓட்டம். குடிவெறியிலை கோஷ்டி சண்டை இதற்கு காரணம் ஒரு பெண் பிள்ளையாய் இருக்கும். காதலும், வீரமும் தமிழனுக்குச் சொந்தம் என்று சிலர் கதைக்கிறார்கள்" என்றார் காசிநாதர்.

"பக்கத்து ஊரிலை போன கிழமை வடக்கு பொடியளும், தெற்கு பொடியளும் வெட்டுப்பட்டது. உந்த காதல் தானே காரணம் என்று வீட்டிலை கதைச்சினம்" என்றார் குலநாயகம் மாஸ்ரர்.

"மற்றது மாஸ்ரர் இப்ப குரங்குக்கு கள்ளு பருக்கின மாதிரி இப்பத்தையான்களுக்கு செல்போன், இன்ரநெற், பேஸ்புக் என்று நிறைய உதவிக்கு பொருட்கள் இருக்கின்றன. உதுகளை பிழையாய் பயன்படுத்தி படுமோசமாய் நடக்குதுகள் பிள்ளைகள். காதல், களவாய் உறவு செய்தல், கர்ப்பமடைதல், எத்தனை பிள்ளைகள் பெற்று கொலை செய்த விபரங்களை பத்திரி கையில் படித்திருக்கின்றோம். ஐயோ! கடவுளே! பாடசாலைப் பிள்ளைகள் கூட கருக்கலைத்தலில் ஈடுபட்டதாக கேள்வி. தாய் தகப்பன்கள் பாவங்கள். என்ன பாடுபடுகுதுகள், ஏன்? அதுகள் படிக்கட்டும் என்று இப்படி பாடுபட அதுகள் பருவக் கோளாறுகளில திரியுதுகள்" என்றார் வைத்திலிங்கம்.

"தம்பி வைத்திலிங்கம்! இதுகளெல்லாம் இப்பதான் புதிதாய் நடக்கிற காரிய மில்ல. அந்தக் காலங்களிலும் இருந்தது தான். மிகவும் குறைவாய் எப்பயாலும் இருந்திட்டு அங்கொன்று இங்கொன்று நடந்தது. இப்ப அதே பிராக்காய் போச்சு. எங்கையோ பிழை இருக்கு. சங்க காலத்திற்கு பின்பும் அதாவது போர்க்காலம் முடிந்த பின்பு இப்பிடி ஒழுக்கவீனமான காலம் இருந்ததாய் நான் படிச்சனான். அப்பதான் அறக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எங்கன்ரை போர், இடப்பெயர்வுகள், முகாம் வாழ்க்கை, மறச் செய்கைகள் மேலோங்கி நிற்றல், அதோட நவீன சாதனங்கள் இதற்கு துணை நிற்கின்றன. பிள்ளைகளுக்கு பெற்றோர் வீட்டில் நல்ல பழக்கவழக்கங்களில பயிற்சி அளிக்க வேணும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் சொல்லலாம், அவர்களால் கடும் நடவடிக்கைகள் எடுக்க முடியாத காலம். பெற்றோரும், அரசும் தான் பொறுப்பேற்க வேண்டும்" என்றார் காசிநாதர்.

"இப்ப பெண்கள் நகை அணிய முடியாது. மோட்டார் சைக்கிளில் வந்து அறுக்கிறார்கள். வீடுகளில் இருட்டினால் பயம். சும்மா மோட்டார் சைக்கிளும், ரீசேட்டு ஜம்பரும், செல்போனும், சிகரட்டு மதுபானமும் வாங்க வேணுமெண்டால் என்ன செய்யிறது? இதுதானே வழி. எப்படி பாடுபட்டு உழைத்தாலும் முப்பது, நாற்பதாயிரம் உழைப்பது கஷ்டம். உழைக்க நினைத்தால் உழைக்கலாம், அதை நல்ல மாதிரி உழைக்க வேணும் சீனிவாசகத்தார் சென்னார் "தன்ர மகன் பெரிய உழைப்பு உழைக்கிறான். ஆனால் தனக்கு என்ன என்று சொல்லிறதில்லை' என்று. அவர் மகன் ஏதோ சட்ட மறுப்பான காரியம் செய்கிறான் போல என்று நினைத்தனான், அது சரி. இப்ப மறியலில் இருக்கிறார்" என்று சொன்னார் குலநாயகம் மாஸ்ரர்.

"இல்லைத் தம்பி! எனக்கு வயது எண்பது. நான் அறிய ஒரு பொம்பிளை கிணற்றில் விழுந்து தற்கொலை செய்தவா. அவா தான் கிணற்றில் விழுந்தால் தனது சேலை விலகாமல் இருக்க ஊசியை தேகத்திலை குத்திக் கொண்டு கிணற்றில் விழுந்தவா. அப்படிப்பட்ட யாழ்ப்பாணத்தில் இப்ப மானம் கெட்ட மாதிரி மனுஷர் வாழ்கினை. மனிதர் மானத்திற்காக உடை உடுத்தது அந்தக் காலம். இப்ப அழகிற்குத் தான் உடை. முந்தி சில இடங்களைத்தான் அப்பிடி இப்பிடி என்று கூறுவார்கள். இப்ப 'எங்கட ஊரிலை இப்பிடியும் நடக்குதோ?' கேட்க உண்மையிலை வருத்தம் தான். பத்திரிகை ஆசிரியர் கருத்துப் போல பெரிய மனுஷர் ஒன்று சேர்ந்து ஏதாவது நல்ல திட்டங்களைத் தயாரித்து பிள்ளைகளைக் காப்பாற்ற வேணும், பெற்றோர் பிள்ளைகளை மிகவும் கவனம் எடுத்து வளர்க்க வேண்டும், இதற்கு சமுதாயம் ஒன்றுபட வேண்டும்" என்று காசிநாதர் கூற காசிநாதரின் பேரப்பிள்ளை வந்து "தாத்தா! அம்மா உங்களை வரச் சொல்லிவிடச் சொன்னவர்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

# பாதங்களை பாதுகாருங்கள்

ஒருவருடைய வாழ்நாளில் அவரைப் பல ஆயிரம் கிலோ மீற்றர்வரை காவிச் செல்வது அவரது பாதங்களாகும். இவ்வாறு பாதங்கள் எமது உடலைக் காவிச் செல்லும் போது காலில் பல்வேறு சேதங்கள் (உரசல் காயங்கள், கிழிவுகள், வெடிப்புகள்) ஏற்படுகின்றன. ஒரு வாகனத்தினுடைய அதிர்வு உறுஞ்சிகள் போல் செயற்படுவதும் எமது பாதங்களே. இவ்வாறு மகத்தான சேவை புரிகின்ற எமது பாதங்களுக்கு ஒழுங்கான கவனிப்பும் பராமரிப்பும் இன்றியமையாதவை.



ஒரு வாகனத்தைப் பல மைல்களுக்குச் செலுத்திய பின்னர் அதனைக் கழுவித் துடைத்து சுத்தம் செய்து மீளத் தயார் செய்வது போல் பாதங்களையும் ஒழுங்கான முறையில் கழுவித் துடைத்து அதில் காணப்படும் தேய்வுகள், கிழிவுகள், புண்கள் என்பன ஒழுங்கான முறையில் கவனிக்கப்பட வேண்டும். இதனால் பாதங்களில் வரும் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறான கவனிப்பு ஒவ்வொரு தனி நபருக்கும் தேவை. அதிலும் சலரோக நோயாளிக்கும் மிகவும் இன்றியமையாதது. ஒருவர் சலரோக நோய் உள்ளவர் என நோய் நிதானம் செய்யப்பட்ட நாளிலிருந்து சரியான பாதக் கவனிப்பு அவசியம். இன்று வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்படும் சலரோக நோயாளர்களில் அநேகமானவர்கள் காலில் சிறுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டு அவர்களில் சலரோகம் கட்டுப்பாடற்ற நிலைக்குச் செல்வதால் சில சமயங்களில் குறிப்பிட்ட விரல் பகுதியை அகற்ற வேண்டிய நிலையும் அதனைத் தொடர்ந்து முழங்காலுக்கு கீழே கால்கள் தறிக்கப்பட வேண்டிய நிலையும் சில சமயங்களில் முழங்காலுக்கு மேல் கால் பாகத்தை தறித்தெடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

எனவே ஆரம்பம் முதல் கொண்டே சரியான பாதக் கவனிப்பு இருக்குமாயின் இந்த நிலையைத் தவிர்க்கலாம். அநேகமாக இந்தப் பிரச்சினை பின்வரும் மூன்று பகுதிகளில் ஏற்படும் பாதிப்புக்களுடன் கூடியதாகக் காணப்படுகின்றது.

சலரோகம் நீண்டநாள் காணப்படும்போது பெரிய குருதிக் குழாய்களில் மாற்றம் ஏற்படுகின்றது. சிறிய குருதிக்குழாய்கள் (மயிர்த்துளைக் குழாய்களில்) ஏற்படும் பாதிப்புகள்.

**பாதப் பகுதிக்குரிய நரம்புகளில் ஏற்படும் பாதிப்பு**

அநேகமாகப் பாதங்களில் ஏற்படும் பாதிப்பு சலரோகம் கட்டுப்பாட்டில் இல்லாத போது ஏற்படுகின்றது. இதனை தவிர்ப்பதற்கு நீங்கள் உங்கள் முகத்துக்கு எவ்வாறு கவனம் செலுத்துவீர்களோ அவ்வாறே உங்கள் பாதங்களுக்கும் கவனம் செலுத்தி உங்கள் பாதங்களைப் பாதுகாத்து ஆயுள் காலத்தைச் சந்தோஷமாக அமையுங்கள்.

**கோ. நந்தகுமார்**
விரிவுரையாளர்,
தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்

# நீரிழிவு நோய்க்கான இன்சுலின் பாவனை

தற்காலத்தில் பலரையும் துன்புறுத்தி வருகின்ற நோய்களில் நீரிழிவுநோயும் ஒன்றாகிவிட்டது. நீரிழிவு ஒரு தொற்றாத நோய் ஆகும். உணவில் அதிகளவான வெல்லம் சேர்த்தல், மாப்பொருள் உணவுகளை உண்ணல், சதையில் ஏற்படும் நோய்கள், பரம்பரை என்பன இந்த நோய்க்குக் காரணமாகின்றன.

இன்சுலின் ஓமோன் குறைபாட்டினால் உருவாகுகின்ற இந்த நோயின் பராமரிப்பு முறையில் செயற்கையாக இன்சுலின் ஓமோனை ஊசிமூலம் ஏற்றுதல் ஒரு பிரதான பங்கு வகிக்கின்றது.

**இன்சுலின்**

இன்சுலின் பாவிக்கின்ற நோயாளர்களிடத்தில் இன்சுலினை பாதுகாக்கும் பேணும் முறை. (Storag), பாவனைமுறைகள், பக்கவிளைவுகள் பற்றிய தெளிவான அறிவு இருக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

**இன்சுலினைப் பேணும் முறை**

இன்சுலின்குப்பிகளை குளிரூட்டியின் நடுப்பகுதியில் Middle Compartment) 2–8 C க்கு, இடையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். குளிரூட்டியில் வைக்கும்போது மிகை குளிரூட்டும், பகுதியிலோ,(Defreeze) குளிரூட்டியின் கதவிலோ வைத்துப் பேணக்கூடாது. குளிரூட்டி வசதி இல்லாத நோயாளிகள் இன்சுலின் குப்பிகளைக் களி மண்பானையில் நீர்விட்டு அதனுள் வைத்துப் பேணலாம்.

**இன்சுலின் பாவனை முறை**

இன்சுலினைப் பயன்படுத்தும் போது பின்வரும் அடிப்படை விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. ஊசி ஏற்றுவதற்கான சரியான கருவியைத் தெரிவு செய்தல்.
2. ஊசி ஏற்றுவதற்காக நோயாளியைத் தயார் செய்தல்
3. சரியான அளவு மருந்தை எடுத்தல்
4. ஊசி ஏற்ற சரியான நுட்பத் தைக்கையாளுதல்

மருந்து ஏற்றச்சரியான கருவியைத் தெரிவு செய்தல்.

இன்சுலினைச் சரியான அளவில் ஏற்றுவதற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்த வேண்டும். இதற்கென 29G உடைய 1 ml ஐ too Unit ஆகப் பிரிக்கப்பட்ட ஊசிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதைவிட மருந்துடன் கூடிய Penகளும் பாவனையில் உள்ளன.

ஊசியை ஒரு தடவை மட்டும் பாவித்தல் சிறந்தது. (அல்லது ஆகக்கூடியது 3 தடவைகள் மட்டும் பாவிக்கலாம்) ஊசி முனையில் இரத்தக்கறை இருந்தாலோ/முனை மழுங்கி இருந்தாலோ ஊசியை எறியவும்.


ஊசியை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

மருந்து ஏற்றுவதற்காக நோயாளியைத் தயார்ப்படுத்தலுக்கு முன்னர், ஊசி ஏற்றுவதற்கான சரியான இடத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். கையின் மேற்புறம், வயிற்றுப்பகுதி, தொடை பிற்பகுதி ஆகிய இடங்களில் ஊசியை ஏற்ற முடியும்.

ஆனால் ஊசி ஏற்றும் இடத்தை சுழற்சி முறையில் மாற்றி அமைத்தல் வேண்டும். ஊசி போடும் இடத்தைச் சுத்தப்படுத்தல் வேண்டும்.

சரியான அளவு மருந்தைத் தெரிவு செய்தல் வேண்டும்.

நோயாளிக்கு வைத்தியரின் ஆலோசனைப்படியான சரியான அளவு மருந்து ஏற்றுதல்



வேண்டும். அதிக உணவு உட்கொண்ட காரணத்தினாலோ, அதிகமாக பாவித்தல் மற்றும் வேறு காரணங்களால் குறைவாக போடுதல் என்பவற்றை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுதல் சிறந்தது. ஊசியில் சரியான அளவு மருந்து எடுக்கப்பட்டு அதனுள் காற்றுக் குமிழிகள் இல்லை என உறுதி செய்தல் வேண்டும்.

**சரியான நுட்பத்தை பாவித்தல்**

மேற்தோலினுள் ஊசி ஏற்றப்படல் வேண்டும். ஊசியை $45^\circ$யில் வைத்து ஏற்றுதல் வேண்டும். போடும் இடத்து தசையை இரு விரல்களால் பிடித்து அதில் குறுகிய நேரத்தினுள் ஊசியை ஏற்ற வேண்டும். இன்சுலின் பேனாவாயின் $90^\circ$ இல் வைத்து செங்குத்தாக ஏற்றுதல் வேண்டும்.

**வலியைக் குறைக்க**

மழுங்கலான முனையுடைய ஊசியை பயன்படுத்தக்கூடாது. குளிரூட்டியில் இருந்து இன்சுலின் குப்பியை எடுத்ததும் உள்ளங்கையினுள் வைத்து சில நிமிடங்கள் உருட்டவும். இதனால் குளிர் குறைந்து வலியும் குறையும். குறுகிய நேரத்துள் ஊசியை ஏற்றவும். ஊசியினுள் வளிக்குமிழ் இல்லை என உறுதிப் படுத்தவும். சவர்க்காரம், நீர் கொண்டு ஊசிபோடும் பகுதியைக் கழுவவும். (ஸ்பிறிட் தோலைக் கடினமாக்கலாம்)

**பக்க விளைவுகள்** (Adverse Effect)

இன்சுலின் பாவனையின் மிக முக்கிய பக்கவிளைவு குருதியில் குளுக்கோஸின் அளவு குறைவடைதல் ஆகும். இதனை இயன்றளவு குறைக்க ஊசி ஏற்றும் போது நோயாளிக்கான உணவு தயாரா என உறுதிப்படுத்தவும்.


ஊசி ஏற்றி 30 நிமிடத்துக்குள் உணவு உட்கொள்ள வேண்டும். குருதியில் குளுக்கோஸின் அளவு குறைவாக உள்ள ஒருவரில் வியர்வை, மயக்கம், குழப்பநிலை, படபடப்பு என்பவை ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் இனிப்பு அல்லது சீனியை வாயில் இடவும்.

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

மேலேயே இருந்து கொள்வார்கள். கீழே இறங்கி வரமாட்டார்கள். லாபத்தை மனதில் வைத்து அரசியலை விற்பார்கள். புரட்சி, புரட்சி என்று மாத்திரம் கத்திக் கொள் வார்கள். இயலாதவர்கள். இவர்களையிட்டு நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றான் அந்த இளைஞன்.

அங்கு நின்றுகொண்டிருந்தவர்களில் ஒருவரைச் சரவணன் முன்பே நன்கு தெரிந்து வைத்திருந்தான். அகதிகள் முகாமிற்கு வந்தபின் இருந்த இடத்தில் தன்னுடைய பணத்தை நிலத்தில் புதைத்து வைத்துவிட்டு வந்ததாகவும் அவற்றை மீட்க வேண்டுமென்றும் கூறினார். பல சிரமங்களுடன் அகதிகள் முகாமில் உள்ள அதிகாரிகளைக் கொண்டு இவரைப் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் அவருடைய இடத்திற்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். சரவணனும் கூடப்போயிருந்தான். அவர் மிகவும் ஆர்வத்துடன் பின் வளவில் ஒரு இடத்தில் மண்ணைத் தோண்டினார். ஒரு அடி ஆழத்தில் கண்ணாடி உறையில் கடுதாசியில் பணத்தைச் சுற்றி வைத்திருந்தார். இராணுவ உயர் அதிகாரிகள் சரவணன் எல்லோரும் சுற்றி வளைத்துக்கொண்டு நின்றனர். அந்தக் கண்ணாடி உறையைப் பிரித்து அதில் வைத்திருந்த பணம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டார். அதில் இருந்தது ஆக மொத்தம் பதினைந்தே ரூபாய் தான். ஒரு பத்து ரூபாய்த்தாளும் ஒரு ஐந்து ரூபாய்த் தாளும். திரும்பி எல்லோ ரும் முகாமிற்கு வந்த னர். அதற்குப் பின் அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். அவர் அந்தக் காசை மீண்டும் மடியில் வைத்ததைப் பார்த்து சரவணன் சிரித்துக் கொண்டான்.



இளைஞர்கள் யாவ ரும் ஒரு பக்கமாகக் கூடினர். கப்பலின் கீழ் தளத்திலேயே எல்லோரும் இருக்க வேண்டும் என்ற கப்டனின் உத்தரவு பற்றிக் கேட்டனர். இதற்கு அந்த உத்தரவை நாங்கள் அதிகம் காதில் போட்டுக் கொள்ளத் தேவையில்லை. அது தேவையற்ற கட் டுப்பாடு. மேல் தளங்களில் உள்ளவர்களைக் கீழ் தளத்திற்கு அனுப்புவது முடியாத காரியம். ஆயி னும் உள்ளே இருப்ப வர்களை வராமல் இருக் கும்படி கூறுவோம் என்றனர். கப்டனைத் தளத்திற்கு அழைத்து வந்து அவருக்கு நன்றி கூறுவது நல்லது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குப் பின் கீழ்ப்பகுதியில் இருந்த கீழ்தளங்களுக்கும் சென்று கூற வேண்டியதைக் கூறிவிட்டு மீண்டும் மேல்தளத்திற்கு வந்தனர். காலை உணவு பரிமாறி முடிய அதிக நேரம் எடுக்க வில்லை. மீண்டும் மேல்தளத்திற்கு வந்த இளைஞர்கள் கப்பலின் கீழ்தளத்தில் உள்ள வர்களை மேல்தளத்திற்கு வராமல் பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்தனர்.கப்டனைக் கூப்பிட் டிருப்பதாகவும் அதற்கு முன் வந்து நன்றி கூறவேண்டும் என்றும் பலரைத் தெரிந்தெடுத்துக் கூறிக்கொண்டு போனார்கள்.

நேரம் பத்து மணி. காலையுணவை எல்லோரும் முடித்து விட்டிருந்தனர். யாழ்ப்பாணம் வரப்போகிறது என்பதால் தங்கள் காலையுணவை அதிகம் யாரும் பொருட்படுத்தவில்லை. கப்பல் நிற்பதற்கு முன் கழிவிடங்களைக் கழுவுவது பற்றி சரவணன் வந்து குமாரிடம் கூறினான். இப்பொழுது அதில் நாங்கள் இறங்குவது சாத்தியமில்லை. கரையிலிருந்து யாரையாவது வரவழைத்து கழுவுவதற்கு ஏற்பாடு பண்ணலாம் என்று கூறி அனுப்பி வைத்தான். கீழ்தளத்தில் உள்ளவர்கள் மேல்தளத்திற்கு வராமல் பார்த்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த தொண்டர்கள் எல்லோரும் ஓர் இடத்தில் கூடியிருந்தனர். அவர்களை அவர்கள் நியமிக்கப்பட்டிருந்த தளங்களுக்குப் போகும்படி கூறி விட்டுக் கப்பலின் முற்பகுதிக்குச் சென்று கப்டன் வருவது பற்றிக் கூறினான்.

கப்பலின் மேல்தளத்தில் எவரும் நிற்கப்படாது என்ற உத்தரவு பற்றிய செய்தி முன்பே பரவியிருந்தது. இதனைத் தெரிந்தவர்கள் பலர் காலையிலிருந்தே மேல்தளத்தில் நின்றிருந்தனர். தொண்டர்கள் தளத்திற்கு இறங்கும் படிகளில் உட்கார்ந்து கொண்டனர். ஒவ்வொரு தளத்திற்கும் மூவர் நியமிக்கப் பட்டிருந்தனர். மூவரும் ஒரே படியில் எவரும் மேலே போகமுடியாதவாறு உட்கார்ந்து கொண்டனர்.

கீழ்தளத்தில் நின்றிருந்த சிலர் வந்து படிகளில் கீழ்ப்பகுதியில் சுற்றி வளைத்து நின்று கொண்டனர். இதில் ஒருவர் கேட்டார். 'தம்பிமாரே இது யார் சொன்னது?' "கப்டன்" என தொண்டர்களின் நடுவில் இருந்தவன் கூறினான். எவரும் வாய் பேசவில்லை. படிகளைச் சுற்றி நின்றுகொண்டனர். வரவர அவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போனது. நேரம் போய்க் கொண்டிருந்தது. கப்பல் யாழ்ப்பாணக் குடாநாட்டை அடைந்துவிட்டது என்பது கரையில் தென்பட்ட பனைமரங்களில் இருந்து தெரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. மேலே நின்றவர்கள் கீழ்தளத்தில் நிற்பவர்களை எட்டிப்பார்த்து யாழ்ப்பாணம் வந்துவிட்டது எனக் கூறவே இவர்களுக்கு மனக் குழப்பமாக இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தனர். மேலே போய் மற்றவர்களைப் போல பார்க்க வேண்டுமென்பதில் ஆசை. ஆனால் தொண்டர்களை எதிர்க்கும் சக்தி அவர களுக்கில்லை.

எல்லோரும் நல்ல சேலைகள் அணிந்து தலைவாரி கால்சட்டை கறுப்புக் கண்ணாடி பெல்பொட்டம் போட்டு குடும்ப சகிதமாய் நின்றுகொண்டிருந்தனர். நூறு பேர் இருக்கும். இவர்களைப் பார்க்கும் போது உயரத்தில் இருப்பவர்களென்பதும் வசதி படைத்தவர்களென்பதும் கொழும்பில் வீடுவாசல் உள்ளவர்கள் போலவும் தெரிந்தது. எதற்கும் குறைவில்லை. நின்றுகொண்டிருந்தனர். தடைச்சட்டம் நேற்றுவரைக்கும் இவர்கள் நாட்டில் சட்டத்தின் பாதுகாவலர்கள். சுங்கப் பகுதி, பொலிஸ், மறியல்சாலை, நீதி இலாகா இவற்றின் நிர்வாகமே இவர்கள் கையில் தான். இவர்களுடைய கண்ணியமான சேவையை பாராட்டாதவர்கள் இல்லை. இன்றைக்கு இவர்கள் அகதிகளாக நின்றுகொண்டிருக்கிறார்கள். மேலே தளத்திற்கு போகவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தனர். யாருக்கும் மேலே போகத் துணிவு வரவில்லை. எதற்காக இந்தத் தடைச் சட்டம்? மேல் தளத்தில் உள்ள வெளிச்சத்திற்கு வரவும் கரையைப் பார்க்கவும் தானே விரும்பினார்கள். முடிய வில்லை. தடைச்சட்டம்.

முன்னரே பலர் மேல் தளத்திற்கு வந்துவிட்டார்கள். பவுடர் கறுப்புக் கண்ணாடி போடாதவர்கள், சப்பாத்துச் செருப்பு இல்லாதவர்கள், காவல் காத்துக் கொண்டிருக்க வேண்டிய பெட்டி பொட்டலங்கள் இல்லாதவர்கள் நேர காலத்திற்கு மேல் தளத்திற்கு வந்து விட்டார்கள். எவ்வித சிரமமும் இருக் கவில்லை.

இத்தனைக்கும் இளைஞர்கள் காலையில் ஒவ்வொருத்தராகச் சென்று இந்தச் சோதனைகள் வேண்டாமென்று கூறியிருந்தார்கள். கேட்டார்களா? கேட்கவில்லை. ஏன்? இளைஞர்கள் என்ன கேட்டிருந்தார்கள்? நேரம் வந்துவிட்டது தார்ப்பரியங்களைத் தகர்த்தெறிந்துவிட்டுக் கொடியை ஏற்றவா கூறினார்கள். இல்லை. பிரத்தியேகமாக எதையும் அணிந்து கொள்ளத் தேவையில்லை. அப்படியே போய் இறங்குவோம் என்று தானே கூறினார்கள். பலபேர் எதுவுமில்லாமல் எல்லாவற்றையும் இழந்துபோய் வருகிறார்கள். அவர்கள் மனதைப் புண்படுத்தாமல் இருக்கவே இந்த வீண் ஆடம்பரங்கள் தேவை யில்லை என்று கூறினார்கள். கேட்டார்களா? ஏன் கேட்கவில்லை? ஏன் இந்தக் காட்டாப்பு?

பழக்கப்பட்டுவிட்டார்கள்.மேல் தளத் திற்கு வரவேண்டிய நேரத்தை தவற விட்டிருந்தார்கள். பழக்கம் விடவில்லை. இப்பொழுது ஏன் விரும்புகின்றனர்? தாங்கள் கீழ்த்தளத்தில் நின்று கொண் டிருக்க தாங்கள் காண முடியாத வற்றை மேல்தளத்தில் நின்று கொண்டிருப்பவர்கள் கண்டுகளிக்கிறார்கள். இவர்கள் நின்றுகொண்டிருக்கும் தளம் இருட்டறை போல் காட்சியளிக்கிறது. திடீரென இப்படியானதொரு மாற்றம். மேல்தளத்திற்கு வரவிடாமல் இவர்களது பழக்கம் இவர்களைத் தடுத்து விட்டது.

கொழும்பில் இருப்பவர்கள் அல்லவா! ஊரில் இருப்பவர்கள் நாளைக்கு என்ன சொல்வார்கள், நின்றுகொண்டிருந்தார்கள். சட்டத்திற்கு அடிபணிந்து பழக்கப்பட்டு விட்டார்கள். ஏன் என்று கேட்க முடியவில்லை. எதுவும் தங்களுக்கு நடந்து விடுமோ என்று பயப்படுகிறார்கள். இவர்கள் பழக்கப்பட்டு விட்ட இந்த எடுப்புகளால் தானே தங்கள் நிலைகளைத் தெளிவுபடுத்தி, நிலைநிறுத்தி, அந்த ஏற்றத் தாழ்வுகளையும், சுகபோகங்களையும், பிற்போக்குத் தனத்தையும் வாழவைத்துக் கொள்கிறார்கள். மேல் தளத்தில் நின்ற முற்றிலும் புதுமையான காட்சிகளைக் கண்டு களிப்பவர்களோ, கரையில் நிற்பவர்களோ இவர்களின் இந்த எடுப்பைக் கவனத்தில் போடும் நிலையில் இல்லை என்பதை இவர்களால் ஏன் உணர முடியாமல் போய் விட்டது. பழக்கம் இவர்களுடைய இந்தப் பழக்கமும் அதோடு ஒன்றிப்போன இந்த இயலாமையும் தெரிந்துதானே போட்டிருந்தார்கள். தடை என்ன இந்தச் சட்டம் என்று கேட்டார்களா? இல்லை. மற்றவர்கள் மேல் தளத்தில் நிற்கிறார்களே என்று கேட்டார்களா? இல்லை. "யார் போட்டது சட்டம்!" 'கப்டன்' அவ்வளவுதான். நின்றுகொண்டி ருந்தார்கள். இவர்களுடைய நிலையையும் போக்கையும் தெரிந்துதான் சட்டம் போடுபவர்கள் கண்ணை மூடிக்கொண்டு சட்டம் போடுகிறார்கள். நின்றுகொண் டிருந்தனர். மேல் தளத்திலிருந்து ஒருவன் எட்டிப்பார்த்து "நாகர் கோவில், வல்லிபுரக் கடற்கரை தெரியுது" என்ற அறிவிப்பையும் இவர்களுக்குச் செய்து விட்டிருந்தான். இவர்கள் நிலை மேலும் மோசமாகி பையன்களைப் பார்த்த வண் ணம் நின்றுகொண்டிருந்தனர்.

தளத்தின் ஒரு மூலையில் ஒருவன் தன் தலைக்கு ஒரு சிறிய பார்சலை வைத்துக்கொண்டு படுத்தபடி இருந்தான். இங்கு நடப்பதைப் பார்த்து ரசித் துக்கொண்டு கிடந்தான். அவன் இவர்களில் ஒருவனல்ல. யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவன்தான். கொழும்பில் பலகாலமாக இருந்ததால் யாழ்ப்பாணத்தை மறந்தவனுமல்ல. இவனுடைய குடும்பம் உறவினர் எல்லோரிலும் இவன்தான் குடாநாட்டை விட்டு வெளியே போனவன். அவர்கள் அந்தக் குடிசைகள், கொட் டில்கள், கூலிவேலை, தள்ளு வண்டில், இப்படியான வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவர்கள். இவன் மட்டும் ஒரு மாதிரி கொழும்புத் துறைமுகத்தில் போய் பிழைக்கப்பழகிக் கொண்டான். இவனுக்கு யாழ்ப்பாணத்திற்கு வரவும் விருப்பமில்லை. யாழ்ப்பாணத்தைப் பார்க்கவும் விருப் பமில்லை. அப்படியே படுத்துக் கொண்டி ருந்தான். எழுந்து உட்கார்ந்து கொண் டான். இந்தக் கூத்தைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஒரே சிரிப்பு. இவர்களைப் பார்க்க இவர்கள் படும் பாட்டைப் பார்க்க அவனுக்கு ஒரே சிரிப்பு.

பையன்களையும் பார்த்தான். ஒரு சவால். எழுந்து வந்தான். ஒரு பக்கம் சிரிப்பு. சாரத்தை மடித்து இரண்டு பக்கமாகப் பிடித்தபடி எழுந்து வந்தான். சட்டமாம் சட்டம். ஒரு நீலச்சாரமும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தான். இவர்களது பின்பக்கமாக வந்து எல் லோரையும் துளைத்துக் கொண்டு முன் னால் வந்து நின்றான். ஒரு பக்க சாரத்தைக் கீழே விட்டான்.

(தொடரும் .....)

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# எட்கா உடன்பாடு ...

தனது தொலைநோக்குச் சிந்தனையின் மூலம் 1987 இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இவர் வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தை ஒரு புற்றுநோய் போன்றே நோக்கினார். இந்த யுத்தம் இந்தியாவாலேயே உருவாக்கப்பட்டது என்பதை இவர் அறிவார். வடமராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இந்தியா எதிர்த்ததுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமானம் மூலம் உணவுப் பொதிகளை இந்தியா வீசிய போது, உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இந்தியா ஒரு போதும் அனுமதிக்காது என்பதை ஜே.ஆர். ஜெயவர்த்தனா புரிந்து கொண்டார்.

இதனால் இந்தியாவை தனது சூழ்ச்சி வலைக்குள் வீழ்த்துவதென ஜே. ஆர். தீர்மானித்தார். இந்தியாவால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ்ப் புலிகளை இந்தியாவே அழிக்க வேண்டும் என்பதற்காகவே இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் ஜே. ஆர் கைச்சாத்திட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. போன்றன ஜே.ஆரின் நிலைப்பாடு தொடர்பாக விழித்துக் கொண்டன. இந்திய அமைதி காக்கும் படை யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்தால், இந்த நாட்டை ஜே.ஆர். தொடர்ந்தும் ஆளக்கூடிய நிலை உருவாகும் என இவர்கள் அச்சம் கொண்டனர். இது இடம்பெற்றால், தாம் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பு உருவாகாது என்பதையும் இவ்விரு கட்சிகளும் புரிந்துகொண்டன. இதனால், மாகாண சபைகள் இந்த நாட்டைக் கூறுபோடும் என்கின்ற கருத்தை உருவாக்கினர்.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அச்சுறுத்தியதுடன் இவர்கள் தேசத்துரோகிகள் எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. முத்திரை குத்தின. இதன்மூலம் நாடு தழுவிய ரீதியில் மக்கள் மத்தியில் மனரீதியான அச்சத்தை உருவாக்கினர். அத்துடன் இவர்கள் மாகாண சபைத் தேர்தல்களைப் புறக்கணித்தனர். இத்தேர்தல் 1988 இல் இடம்பெற்றது.

1993 இல், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது நிலையிலிருந்து மாறி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டது. இதேபோன்று மாகாண சபை முறைமையை உருவாக்கிய 1987 இந்திய இலங்கை உடன்படிக்கையை எதிர்த்த ஜே.வி.பி. தனது நிலையிலிருந்து இறங்கி 1999 இல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டது.

2005 மகிந்த சிந்தனை விளக்கவுரை:

1987 இல் இந்தியாவின் அனுசரணையையும், 2005 இல் நோர்வேயின் அனுசரணையையும் எதிர்த்து நின்ற மகிந்த மற்றும் விமல் ஆகியோர் 2005 இல் இந்தியாவின் தலையீட்டுடன் கூடிய தேர்தல் விளக்கவுரையை உருவாக்கியது. இதுவே 2005 மகிந்த சிந்தனை ஆகும். இதில் இந்தியாவின் நடுநிலைமையுடன் நாட்டில் சமாதானமும் அபிவிருத்தியும் உருவாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், 2010 ஜனாதிபதித் தேர்தலில், மகிந்த சிந்தனையின் பக்கம் 05இல் 'புவிமயமாக்கலானது இலங்கைக்கு பல்வேறு வாய்ப்புக்களையும் சவால் களையும் வழங்கியுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஏனைய பிராந்திய நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் எமது ஏற்றுமதித் துறை, முதலீட்டு மற்றும் தொழினுட்பத் துறைகள் நலன் பெறும்' எனக் குறிப்பிடப்பட்டது.

எந்தவொரு எதிர்காலத் திட்டங்களும் இன்றி, 2010 இல் உருவாக்கப்பட்ட மகிந்த சிந்தனையில் இந்தியாவுடன் வர்த்தக மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை மேற்கொள்வதென பரிந்துரைக்கப்பட்டது. 2008 இல் முதன் முதலாக இந்தியாவுடன் பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கையை மேற்கொண்டது மகிந்த அரசாங்கமே ஆகும். மகிந்த அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தியாவுடன் உடன்படிக்கை தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆவார். இந்தியப் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்த கருத்தரங்கு ஒன்றில் பீரிசால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஜூலை 13, 2008 அன்று 'த ஐலண்ட்' ஊடகம் பதிவேற்றியிருந்தது.

'இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந்தியப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். இலங்கைக்கான இந்திய உயர் ஆணையாளர் அலோக் பிரசாத், இந்திய வர்த்தகச் செயலர் ஜி.கே.பிள்ளை, இந்திய வர்த்தகத் திணைக்களத்தின் கூட்டுச் செயலர் றஜீர் கேர், கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையகத்தின் பொருளாதார வர்த்தக ஆலோசகர் சந்தோஸ் ஜா, இந்திய வர்த்தகத் திணைக்கள இயக்குனர் றாஜீர் குமார் ஆகியோர் இந்திய அரச பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இலங்கைப் பிரதிநிதிகளாக, பீரிஸ் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சுச் செயலர் எஸ். றணுகே, வர்த்தக பதில் இயக்குனர் கோமி சேனதிர ஆகியோர் கலந்து கொண்டனர். தாஜ் சமுத்ரா விடுதியில் இடம்பெற்ற பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கைக்கான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடலில் இந்திய வர்த்தகச் செயலர் ஜி.கே. பிள்ளை கலந்து கொண்டார். இலங்கையானது பூகோள பொருளாதாரத்துடன் தனது பொருளாதாரத்தையும் ஒன்றிணைப்பதற்கு பிராந்திய மற்றும் இருதரப்பு சுதந்திர வர்த்தக நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை தனது அயல் நாடுகளுடன் குறிப்பாக சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளுடன் வலுவான வர்த்தக மற்றும் பொருளாதார உறவை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். இதன் மூலம் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான சிறந்த சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் குறைந்த செலவில் பொருட்கள் மற்றும் சேவைகளையும் அடைய முடியும். அத்துடன் பிராந்தியத்தில் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்த முடியும். 1998 இல் உருவாக்கப்பட்ட இந்திய–இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது எமது சொந்த முயற்சியில் பிராந்தியத்தில் மிகப்பாரிய பொருளாதார நாடாக வளம்பெற உதவும்.

இந்தியாவின் முதலீடானது இலங்கையின் சுகாதாரம், விடுதிகள், வான் போக்குவரத்து, வங்கியியல் மற்றும் வழங்கல் போன்ற பல்வேறு துறைகளை விரிவாக்க உதவும். 2002 இலிருந்து இந்திய சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு அதிகம் வருகை தருகின்றனர் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் விசாகபட்டிணம் திட்டத்தில் 650 மில்லியன் டொலர் முதலீட்டில் இந்தியாவின் பிறாண்டிக்ஸ் நிறுவனத்தால் வர்த்தகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது மிகவும் முதன்மையான தாகும்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மிகவும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதால் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் ஆகஸ்ட் 2004 இல் பொருட்களிலிருந்து சேவைகள் வரை தமது பரிமாற்றல் தொடர்பாடல்களை விரிவுபடுத்தியுள்ளன எனவும் இதுவரை உத்தியோகபூர்வமாக 13 தடவைகள் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பீரிஸ் தெரிவித்தார்.

பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக் கையின் கீழ் முதலீடுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் இது இலங்கைக்கு நலன் பயக்கும் எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.தேசிய சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய வற்றுக்கு இடையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நான்கு சதவீத இடைவெளியை ஈடுசெய்வதற்கும் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை 8–9 சதவீதமாக அதிகரிப்பதற்கும் நீண்டகால அடிப்படையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க வேண்டிய தேவை இலங்கைக்கு உள்ளதாகவும் பீரிஸ் சுட்டிக காட்டினார். தாராள மயப்படுத்தப்பட்ட முதலீடானது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அதிக முதலீடுகள் உள்ளீர்க்கப்படுவதற்கும் தொழிநுட்பம், மனிதவலு மற்றும் வர்த்தக விரிவாக்கத்தை மேற்கொள்ளவும் வாய்ப்பாக அமையும் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்' என ஐலண்ட் செய்தி வெளி யிட்டிருந்தது.

மகிந்தவின் வர்த்தக அமைச்சராக ஜி.எல் பதவி வகித்த போது முற்றுமுழுதாக பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கைக்கு ஆதரவாகவே பரப்புரை செய்திருந்தார். இதே ஜி.எல். பீரிஸ் இலங்கைக்கு அதிக நலனை வழங்கக்கூடிய பொருளாதார தொழினுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையை தற்போது விமர்சிக்கிறார். இது ஜி. எல். பீரிசின் இரட்டை நிலைப்பாடா?

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

# கறுப்பு யூலையும் ...

மேல் சபையான இராஜ்ஜிய சபாவில் பேசுகின்ற போது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரான வீ. கோபாலசுவாமி பின்வருமாறு குறிப்பிட்டார் :

"தமிழ் விடுதலை இயக்கங்களை பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போல அங்கீகரிக்க முன்வரவேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

இந்திய, இலங்கை இராஜதந்திர உறவை உடனடியாக இரத்துச் செய்யுமாறும், புது டெல்லியில் இருக்கும் இலங்கை உயர்ஸ்தானிகரை உடன் இலங்கைக்கு அனுப்ப வேண்டும் எனவும் கோபாலசுவாமி கேட்டுக் கொண்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம். கல்யாணசுந்தரம் பேசுகின்ற போது,

"தமிழர் மீது செய்யப்பட்ட தாக்குதல் இந்தியா மீது செய்யப்பட்ட தாக்குதலுக்குச் சமன் என்றார்"

வெளிவிவகார அமைச்சர் பீ.வீ. நரசிம்மராவ் பேசுகையில்:

"இது கட்சிகளுக்கு இடையில் நடைபெறும் பிரச்சினை அல்ல. இலங்கை அரசாங்கத்தில் சீர்கெட்டு வரும் சட்டப் பிரச்சினையை இந்திய அரசு மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. எமது அருகிலுள்ள அயல் நாடான இலங்கையில் இவ்வாறு சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுப் போவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்" எனக் கூறினார்.

இந்திய நாடாளுமன்ற இரண்டு சபைகளிலும் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை தொகுத்து அமைச்சரவைச் செயலாளர் பீ.சீ. அலெக்சாண்டர் இந்திராகாந்திக்கு அறிக்கை அனுப்பி வைத்தார்.

அந்தப் பேச்சை அடுத்து, அந்தச் சமயம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இச்சர்வால் புதுடெல்லியில் தான் இருந்தார். அவரை உடனடியாக இலங்கை திரும்புமாறு வெளிவிவகார அமைச்சர் பணித்தார்.

அதையடுத்து, இந்திராகாந்தி வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவிடம் ஆலோசனை நடாத்தினார்.

அந்த ஆலோசனையை அடுத்து, ஜூலை 28 ஆம் திகதி சென்னைக்கு மேற்கொள்ள விருந்த விஜயத்தை இந்திரா காந்தி இரத்துச் செய்து, ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் தொலைபேசி மூலம் பேசத்திட்டமிட்டார்.

அதை அடுத்து ஜூலை 28 ஆம் திகதி வியாழக்கிழமை தொலைபேசி மூலம் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவரத்தனவுடன் இந்திரா காந்தி தொடர்பு கொண்டு பேசினார்.

# இந்து தர்மத்தில் பத்து


## இந்து தர்மத்தில் நான்கு

"நம்பினார் கெடுவதில்லை அந்த நான்கு மறைத்தீர்ப்பு". அந்த நான்கு மறைகளும் வேறு எதுவுமல்ல. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகியனவே.

"நாலுபேர் சொன்னபடி நடக்கவும்" என்று ஊரிலே சொல்வார்கள் அல்லவா. அந்த நான்கு பேரும் ஊரில் உள்ள நான்கு பெரிய மனிதர்கள் அல்ல. அவர்கள் சைவ சமயத்தின் நான்கு கண்களாவார்கள். அவர்கள் பாடிய தேவார திருவாசகங்களை நாங்கள் படித்து உணர்ந்து அதன்படி நடந்து கொண்டால் எந்தப் பிரச்சனைகளும் இலகுவில் தீர்ந்துவிடும். எனவேதான் தேவார திருவாசகத்தை நான்கு பேருடைய வழிகாட்டல்கள் என்று சொல்வார்கள்.

மும்மூர்த்திகளில் ஒருவரான பிரமருக்கு நான்கு முகங்கள் இருக்கின்றன. அதனால் நாற்றிசைகளிலும் படைத்தல் தொழில் நடைபெறுகிறது. மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையில் "நான்முகனும் காணாத" என்ற அடியிலே பிரமனை குறிப்பிடுகிறார். ஏற்கனவே வேதத்தைப் பற்றிக் குறிப்பிட்டோம். அந்த நான்கு வேதத்தின் பின்பு வந்ததே வேதாந்தம் ஆகும். வேதாந்தத்தின் முடிவிலே வந்ததே சித்தாந்தம் என்று உமாபதிசிவாச்சாரியார் சொல்கிறார். சித்தத்தின் முடிந்த முடிவு சித்தாந்தம்.

உங்களுக்கு தெரிந்ததும் நூலோர்கள் பலர் சொல்லியதுமான நான்கு பொருட்கள் பற்றி பார்ப்போம். சமய நூல்கள் எல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருட்களை குறிக்கோளாக வைத்தே எழுதப்பட்டுள்ளன. நூல்களின் பயனும் வீடு பேறடைதலே. இந்த மரபிலே கல்வியின் நோக்கமும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவழியில் தொடர்ந்து முத்தியாகிய வீடு பேற்றை அடைவதாகவே உள்ளது. இவையாவும் மனிதனின் வாழ்க்கை முறைகளை சொல்வனவாகவே அமைகின்றன. வள்ளுவனாரின் திருக்குறளும்



இவைகள் பற்றியே சொல்கின்றது. மனிதன் கடவுளை அடைவதற்கு சமயஞானிகள் நான்கு வழிகளைக் காட்டியுள்ளனர். அவையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என வரும். இந்த நான்கு வழிகளிலும் நின்று இறைவனை அடையலாம் இந்த வழிகளிலே நான்கு நாயன்மார்களும் வழிபாடு செய்து முத்தியடைந்திருக்கிறார்கள்.

இவைகள் சற்புத்திர மார்க்கமாகவும், தாசமார்க்கமாகவும், சகமார்க்கமாகவும், சன்மார்க்கமாகவும் உள்ளன. முறையே திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் இவற்றைப் பின்பற்றினர்.

இவை மூலமாக நால்வகை முத்திகளையும் பெற்றனர். சமய குரவர்கள் நால்வர் போல சந்தான குரவர்களும் நால்வர் ஆவார்கள். மெய்கண்ட தேவர், அருநந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர் ஆகி யோரே அவர்கள். இந்த நான்கு பேருமே சைவ சித்தாந்த இலக்கண நூல்களை முதலில் தந்தவர்கள். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசித்தாந்தக் கொள்கைகள் தென் இந்தியா, இலங்கை, காஷ்மீர் போன்ற இடங்களில் கடைப்பிடிக்கப் படுகின்றன.

தமிழ் கூறும் நல்லுலகத்தைப் பொறுத்தளவில் நால்வகை நிலங்கள் அடங்குகின்றன. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என வரும். இந்நிலங்களுக்கு முறையே முருகன், கிருஷ்ணன், இந்திரன், கொற்றவை போன்ற தெய்வங்கள் இருக்கின்றன. இந்த நான்கு நிலங்களுக்கும் மரங்களும் பூக்களும் சிறப்பாக சொல்லப்பட்டிருக்கின்றன. வளர்பிறையிலும் தேய் பிறையிலும் வரும் நான்காம் நாள் சதுர்த்தித் திதியாகும். இத்திதி விநாயகருக்கு உரிய விசேட திதியாகும். இனி நட்சத்திர வைப்பிலே பார்த்தால் நான்காவதாக வருவது ரோகினி ஆகும்.

### கவிஞர் துரையர்

எந்தக் கிரகமும் எல்லோருக்கும் நன்மை கொடுப்பனவல்ல. ஆனால் ராகு பலருக்கு நன்மை கொடுக்கமாட்டாது. எண் சோதிடர்கள் எண் நான்கை ஆதிக்கமுடையவர்களின் வாழ்க்கை உச்ச நிலைக்கு போவது குறைவு எண் பதின்மூன்றில் வரும் நான்கும் முப்பத்தொன்றில் வரும் நான்கும் அதிஷ்டம் குறைவானவை என்று சொல்லப் படுகிறது.

எப்படி யார் நான்கைப்பற்றி சொன்ன போதிலும் நான்குபேர் சொன்னவற்றைப் பேணி நால்வகைப் பூக்களால் இறைவனைத் துதித்து வந்தால் வாழ்வு சிறப்படையும்.



# புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம்: பொன்சேகாவின் கூற்றை மறுக்கும் பசில்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகை தங்கத்தில் ஒருபகுதி கையாடல் நடந்துள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்த குற்றச்சாட்டுக்களில் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாள் பொருளாதாரத் துறை அமைச்சருமான பசில் ராஜபக்ஷ காட்டமாக மறுத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்வதற்காக, தமிழர்களை தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட வைப்பதற்காக மஹிந்த தரப்பால் புலிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டையும் பசில் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இது சரத் பொன்சேகாவின் சொந்தக் கருத்து அல்ல என்று தெரிவித்த பசில் ராஜபக்ஷ இனி வரும் காலத்தில் தமக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாட்டின் முயற்சி தான் பொன்சேகாவின் கருத்து எனவும் பசில் ராஜபக்ஷ கூறினார்.



2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, மகிந்த ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்வதற்காக புலிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து பிபிசி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பசில் ராஜபக்ஷவிடம் கேட்டது.

'இதுவும் ஒரு பொய்யான குற்றச்சாட்டு. சரத் பொன்சேகாவுடன் நான் ஒருபோதும் அரசியல் நடவடிக்கைகள் குறித்து பேசியது இல்லை. அவர் கூறுவது போல எந்த ஒரு பணப்பரிமாற்றமும் நடக்கவில்லை. பெரும்பாலும் சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவத்திற்குள் எழுந்த பிரச்சனைகளை தீர்ப்பது தொடர்பிலேயே, நான் அவருடன் அதிக தடவைகள் பேசியுள்ளேன்' என்றார் முன்னாள் அமைச்சர்.

நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் பொறுப்பேற்ற பின்னர், நாடாளுமன்றத்தில் முதல் உரையை ஆற்றிய அமைச்சர் சரத் பொன்சேகா, தான் இராணுவத் தளபதியாக இருந்து போரை வழிநடாத்தியபோது புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

போர் முடிவுக்கு வந்து இரண்டு வாரங்களில் மட்டும், 220 கிலோவுக்கு அதிகமான நகைகள் மீட்கப்பட்டதாகவும், அந்த நகைகளில் உரிமையாளர்களின் விபரங்கள் எழுதப்பட்டிருந்ததாகவும் பொன்சேகா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருப்பாடுகளின் காட்சி 17 இல் ஆரம்பம்

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடனும் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடனும் மேடையேற்றப்படவுள்ள வேள்வித் திருமகன் ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் இப்பொழுதுஇடம்பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் முதன்முதலாக கடந்த 2012 ஆம் ஆண்டு மேடையேற்றம் கண்ட திருப்பாடுகளின் காட்சி மேலும் புதிய மாற்றங்களுடன் 2014 ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது. இம்முறையுடன் மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படும் வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சிக்கான நெறியாள்கையை மன்றக் கலைஞரான தையஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்.

நீ. மரியசேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் காட்சி பிரதிகளில் இருந்து மொழிநடையிலும் பொருள் அளிக்கையிலும் சற்றுமாறுபட்டதாக எழுதப்பட்டுள்ள இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

# ஜனாதிபதி மைத்திரி பொலநறுவை விஜயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையிலுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட வெளி நாட்டுத் தூதுவர்களுடன், பொலனறுவை மாவட்டத்திலுள்ள எல்லைக் கிராமங்களுக்கு, நாளை திங்கட்கிழமை விஜயம் மேற்கொள்கிறார்.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் விசேட அழைப்பின் பேரிலேயே, ஜனாதிபதி, வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் ஆகியோருடன் பொலனறுவைக்கு விஜயம் செய்கின்றார்.

பொலனறுவை மாவட்டத்திலுள்ள பல எல்லைக்கிராமங்களை, வெளிநாட்டு உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் "ஜனாதிபதி சட்டத்தரணி" பைஸர் முஸ்தபா நடவடிக்கை எடுத்திருப்பதை முன்னிட்டே, ஜனாதிபதி இக்கிராமங்களைப் பார்வையிடச் செல்கின்றார்.

பாகிஸ்தான், ஐக்கிய அரபுராச்சியம், எகிப்து, பங்களாதேஷ் பலஸ்தீனம், குவைட், சீசெல்ஸ், நெதர்லாந்து, கியூபா, ஜப்பான், தென்னாபிரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும்.



**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி சித்தங்கேணி பெரியவளவு மகாகணபதிப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் தொடர்பான ஆலய திருத்தவேலைக்கு நிதியைகையளிக்கும் நிகழ்வில் இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்கள இயக்குனர் அ. உமாமகேஸ்வரன் உட்படகோவில் நிர்வாகத்தினர் பங்குபெறுவதைக்காணலாம்.**

*(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

# காங்கேசன் சீமெந்துத்...

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அன்று கைத்தொழில் அமைச்சராக இருந்த ஜீ. ஜீ.பொன்னம்பலத்தால் நிர்மாணிக்கப்பட்டது.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட இந்த சீமெந்துத் தொழிற்சாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வடபகுதியைச் சேர்ந்தவர்கள், நீண்டகாலமாக இந்தத் தொழிற்சாலை உத்தியோகத்திலிருந்து வந்தார்கள்.

அதையடுத்து, நாட்டில் போர் மேகம் சூழ்ந்து கொண்டது. 1990 ஆம் ஆண்டளவில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து உற்பத்தி கைவிடப்பட்டது.

மேலும் இந்த சீமெந்துத் தொழிற்சாலை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் கொண்டு வரப்பட்டது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது.

அதன் பின்னர் இந்த சீமெந்துத் தொழிற்சாலை, முன்னாள் யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் பொறுப்பில் வந்தது.

அவ்வாறு ஹத்துருசிங்கவின் பொறுப்பில் வந்த சீமெந்துத் தொழிற்சாலையின் கோடிக்கணக்கான பெறுமதியான இயந்திரங்கள் சகலதும் கழற்றி, இன்றேல் வெட்டி, பழைய இரும்புகளாக விற்பனை செய்யப்பட்டன.

மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் மேற்பார்வையில், கப்பல், கப்பலாக சீமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்கள் டுபாய்க்கும், வேறு இடங்களிற்கும் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்பட்டன.

2014 ஆம் ஆண்டு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இந்தப் பழைய இரும்புகள் களவாக விற்பனை செய்யப்பட்டு ஓரளவிற்கு முடிவுக்கு வந்தது.

அந்தச் சமயம் பார்த்து, பாதுகாப்பு அமைச்சு பழைய இரும்பு தேவைப்படுபவர்கள் கேள்விப்பத்திரம் அனுப்பி வைக்கலாம் என்ற அறிக்கையை வெளியிட்டது.

அந்த அறிவித்தல் வெளிவந்த சமயம், காங்கேசன்துறை தொழிற்சாலையில் விற்பனைக்கு பழைய இரும்புகள் இருக்கவில்லை. சகலதும் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் ஆட்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு தீர்ந்தாகிவிட்டது.

இதேநேரம், இந்தப் பிரச்சினை வெளியில் வராமல் இருப்பதற்காகத், திடீரென அறுநூற்று ஐம்பது ஏக்கர் விஸ்தீரணமுள்ள காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வளாகத்தை, இலங்கைக் கடற்படையினருக்கு, பாதுகாப்பு அமைச்சு கையளித்தது.

மந்திரிசபை உப குழுவினர் காங்கேசன்துறை தொழிற்சாலையை மீண்டும் திறந்து வைப்பதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற இந்தத் தருணம் வரை சீமெந்துத் தொழிற்சாலை வளாகம் இலங்கை கடற்படை வசம்தான் உள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சுக்கு இதுவரை சீமெந்துத் தொழிற்சாலை வளாகத்தைத் திருப்பி கொடுக்கவில்லை.

கைத்தொழில் வர்த்தக அமைச்சிலிருந்து "தினச்செய்தி"க்குக் கிடைத்த தகவலின் படி, சென்ற வருடம் இந்தியா மற்றும் வேறு சில நாடுகளிலிருந்து இந்தக் காங்கேசன்துறைத் தொழிற்சாலையை மீள் நிர்மாணம் செய்வதற்கு ஆர்வம் கொண்ட சில வர்த்தக நிலையங்கள் முன்வந்தன.

வர்த்தக நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சீமெந்துத் தொழிற்சாலையை சென்று பார்க்க விரும்பினார்கள்.

ஆனால் அங்கே அவர்கள் செல்வதற்குப், பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அனுமதி கிடைக்கவில்லை. அவர்கள் சீமெந்துத் தொழிற்சாலையைப் பார்க்காமலேயே திரும்பிச் சென்றார்கள்.

மேலும் சென்ற வருடம் வடமாகாண சபை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மீள் நிர்மாணம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி வைத்தது.

இந்தத் தொழிற்சாலை மீண்டும் திறந்தால், சுற்றாடலிற்குப் பாதிப்பு ஏற்படும் எனத் தீர்மானத்தில் வடமாகாண சபை சுட்டிக் காட்டியது.

இந்தச் சூழ்நிலையில், மந்திரி சபை உப குழு இங்கே மீண்டும் சீமெந்துத் தொழிற்சாலை கட்ட விரும்புபவர்கள் தங்கள் ஆர்வத்தைத் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கும் பத்திரிக்கை அறிக்கை ஒன்று, இன்னும் ஓரிரு வாரத்திற்குள் வெளியிடப்படவுள்ளதாக "தினச்செய்தி"க்குக் கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதனடிப்படையில், சீமெந்துத் தொழிற்சாலையை நிர்மாணிக்க விரும்பும் வர்த்தக அமைப்புக் கள் விரும்பினால், தங்கள் ஆர் வத்தை எழுத்துபூர்வமாக இந்த உப குழுவிற்கு அனுப்பி வைக்கமுடியும் எனத் தெரியவந்துள்ளது.

# யுத்தம் முடிந்ததாக அறிவித்தபோது உயிருடன் இருந்தார் பிரபாகரன்

## சரத் பொன்சேகா திடுக் தகவல்



(கொழும்பு)

இலங்கை அரசு இறுதி யுத்தம் முடிந்ததாக 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி அறிவித்த போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன்தான் இருந்தார் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான சரத்பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, அண்மையில் நியமன நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு அவருக்கு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சரத்பொன்சேகா தனது கன்னி உரையை ஆற்றினார்.

அப்பொழுது 2009 ஆம் ஆண்டு முற்பகுதியில் நடைபெற்ற யுத்தம் பற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தம் தொடர்பான பல்வேறு தகவல்களையும் அவர் வெளியிட்டார். அவர் பேசிய முக்கிய விடயங்கள் வருமாறு:

எந்த நாளும் அதிகாரத்தில் இருக்க முடியும் என்று அன்றைய ஆட்சியாளர்களான ராஜபக்ஸவும், அவரது குடும்பத்தினரும் நம்பியிருந்தார்கள்.

அன்று ஜனாதிபதியாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ இன்று நாடாளுமன்ற உறுப்பினராகவும், நான் ஆளும் தரப்பில் அமைச்சராகவும் அமர்ந்திருக்கிறேன்.

சட்டத்தை கையில் எடுத்துச் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷ இன்று நீதிமன்றத்தில் சாய்ந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.


குடும்ப அங்கத்தவர்களைப் பழிவாங்கக் கூடாது என மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்.ஆனால் அவர் என்னையும், எனது குடும்பத்தையும் துரத்தித் துரத்தி பழிவாங்கியதை மிகவும் வசதியாக மறந்துவிட்டார்.

ஒன்று, இரண்டு மாதங்கள் தனது மகன் விளக்கமறியலில் இருப்பதைக் கண்டு அவர் கண் கலங்குகிறார்.

ஆனால் அவருக்குப் பயந்து எனது மருமகன் ஐந்து நீண்ட வருடங்கள் தலைமறைவாக இருந்தாரே இதற்கு அவர் என்ன சொல்லுகின்றார்.

தான் ஒரு டொலராவது மோசடி செய்திருந்தால் வயிற்றை வெட்டிக்கொள்வதாக சவால் விட்டிருக்கிறார்.

ஆனால் தனது பெற்றோரின் நினைவுத் தூபிகள் அமைக்க ரூபா 90 மில்லியன் மோசடி செய்தது மட்டுமன்றி, ராடா நிறுவனத்தின் ஊடாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு ரூபா 600 மில்லியன் ரூபா வழங்கியிருந்தார்—எனவே தேவையான கத்தியை நான் வழங்கத் தயாராக இருக்கிறேன்.



நான் பொதுத்தேர்தலில் தோற்று தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றம் வந்ததையும் அவர் விமர்சித்திருக்கிறார்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து நாடாளுமன்றத்துக்கு உறுப்பினராக வருவதைவிடத் தேர்தலில் தோற்றுத் தேசியப்பட்டியலின் ஊடாக வருவதொன்றும் வெட்கப்படும் விடயமல்ல.

மேலும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி யுத்தம் முடிந்துவிட்டதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கும்போது தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் தான் இருந்தார்.

மே 16 ஆம் திகதி 2009 ஆம் ஆண்டு ஜோர்தான் நாட்டிலிருந்து நாடு திரும்பியபோது, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இறங்கிய மஹிந்த ராஜபக்ஷ குனிந்து தரையை முத்தமிட்டார்.

மே 18 ஆம் திகதி எம்மை அலரிமாளிகைக்கு அழைத்து பதவி உயர்வு வழங்கினார். எனினும் யுத்தம் முடிந்துவிட்டதா? இல்லையா? என்பது கூட அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

யுத்தம் முடிந்துவிட்டதாக 19 ஆம் திகதி மே 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தம்பட்டம் அடித்தார். அவ்வாறு அறிவிக்கும்போது கூட பிரபாகரன் உயிருடன் தான் இருந்தார்.

அன்று மாலை நான் வேறொரு வேலைக்காக நாடாளுமன்றம் வந்துவிட்டுக் காரில் திரும்புகையிலேயே பிரபாகரனின் சடலம் மீட்கப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது எனப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதேவேளை யுத்தத்தின் கடைசி வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட கேவலமான செயற்பாடுகளின் காரணமாகவே வெள்ளைக்கொடி விவகாரம் போன்ற குற்றச்சாட்டுக்கள் இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டது.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தி யாராவது தவறு செய்திருந்தால் அவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி வழங்கி மஹிந்த ராஜபக்ஷவை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து தூக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்றும் சரத் பொன்சேகா தனது பேச்சின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் மஹிந்த ராஜபக்ஷ இன்று தனது குடும்பம் பழிவாங்கப்படுவதாக கண்ணீர் வடிப்பது நகைப்புக்குரியது என்றும் கூறினார்.

17 நிதிச் சட்டமூலங்களை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தின் போது, தனது கன்னியுரையை நிகழ்த்திய அமைச்சர் சரத் பொன்சேகா, கடந்த காலத் தேர்தல்கள், யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள், ராஜபக்ஷ அரசாங்கத்தின் மோசடிகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய அவர், 2005 மற்றும் 2010 தேர்தல்களில் தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷ பேராசை காரணமாகவே 2015 தேர்தலிலும் போட்டியிட்டுத் தோல்வியடைந்த நிலையில் இன்று நாடாளுமன்றத்தின் ஒரு உறுப்பினராக எதிர்த்தரப்பில் அமர்ந்திருக்கிறார்.

2005 தேர்தலின் போது புலிகளுக்கு பெருந்தொகை பணம் வழங்கப்பட்டது. பசில் ராஜபக்ஷ ஊடாக இந்தப் பணம் புலிகளுக்கு வழங்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளுக்கு உதவிய நபருக்கு தூக்குத் தண்டனையே வழங்கப்பட வேண்டும்.



இதேபோல 2010 தேர்தலிலும் வாக்கு எண்ணும் நிலையத்தில் பல்வேறு மோசடிகள் செய்தே மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினார்.

2015 தேர்தலிலும் வாக்கு எண்ணும் நிலையங்களில் மோசடி செய்ய முயற்சி நடந்து. 2010 தேர்தலில் என்னைக் கைது செய்தது போலவே மைத்திரிபால சிறிசேனவையும் கைது செய்யத் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

கேள்விமனு வழங்குவதில் மோசடி செய்ததாக பொய்க் குற்றம்சாட்டி என்னைக் கைது செய்து உள்ளே அடைத்தார்கள். எம்மைப் போன்றே சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் 35 பேர் பழிவாங்கப்பட்டு பணி நீக்கப்பட்டார்கள்.

யுத்தம் முடிவடைவதற்கு இரு மாதங்கள் இருக்கையில் வவுனியா பிரதேசத்தில் பணிபுரிந்த அதிகாரி ஒருவரை யுத்தத்துக்குத் தலைமை தாங்க வைப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷ முயற்சி செய்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த ஆயுதங்களை பரீட்சித்து பெறுவதற்காக எனக்கு சீனா செல்ல நேரிட்டது.

ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி முதல் மே 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் எஞ்சியிருந்த புலிகள் களப்புப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினர் தினமும் 200, 300 மீற்றர்கள் முன்னேறிச் சென்றார்கள். இந்தக் காலப் பகுதியில் எவருக்கும் யுத்தத்தை முன்னெடுக்கக் கூடியதாகவிருந்தது.

அதன் மூலமே உண்மை நிலை வெளியில் வரும். எந்த நாட்டிலும் யுத்தத்தை வெற்றி கொண்ட பின் அந்தக் கௌரவத்தைப் பெறுவதற்காக நாட்டு ஜனாதிபதி நாடு பூராகவும் பதாதைகள் ஒட்டுவது கிடையாது. ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தினர் யுத்த வெற்றியை தம்வசப்படுத்த முயன்றார்கள்.

1991 ஆம் ஆண்டு அன்றிருந்த இராணுவத் தளபதி ரஞ்சன் விஜயரட்னவின் (முன்னாள் பாதுகாப்புஅமைச்சர்) காலைப் பிடித்து அமெரிக்காவுக்கு ஓடிய கோட்டாபய ராஜபக்ஷவினால் எப்படி 2 இலட்சம் படையினரை வழிநடத்த முடியும். இவர் புத்தகம் வெளியிட்டுத் தானே யுத்தத்தை வெற்றிகொண்டதாகக் காண்பிக்க முயல்கிறார்.

### 220 கிலோ தங்கம் மீட்பு

யுத்தம் முடிவடைந்து ஒரு வாரங்களின் பின் சுமார் 220 கிலோ கிராம் தங்கத்தை மீட்டெடுத்தோம். இதன் உரிமையாளர்களின் பெயர் விபரங்களும் திரட்டப்பட்டன. ஆனால் 110 கிலோ கிராம் தங்கமே கண்டெடுக்கப்பட்டதாக பசில் ராஜபக்ஷ அப்போது கூறியிருந்தார்.நான் இராணுவத் தளபதியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சுமார் 400, 500 கிலோ கிராம் தங்கம் கிடைத்தது. எஞ்சிய தங்கத்துக்கு என்ன நடந்தது என முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஜனவரி 8 ஆம் திகதி நாட்டை சுரண்டிய சர்வாதிகாரியை வீட்டுக்கு அனுப்பினோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தினச்செய்தி
வாரமலர்







# "யானை தான் அதிகம் விற்குது"

இன்று இலங்கையில் அதிகமாக விற்பது யானை தான். உயிரோடு இருக்கும் யானைக்கும் மதிப்புள்ளது. அது போல் பொம்மையாக உள்ள யானைக்கும் அதிகளவு மதிப்புள்ளது.

என்ன பொருளில் யானைப் பொம்மையைச் செய்தாலும் - குறிப்பாகத் துணி, மரம், வெள்ளி, பித்தளை, தங்கம் மேலும் மாணிக்கக்கல் பதித்த யானைப் பொம்மைகளாக இருந்தாலும், அவை நிறைய விற்பனையாகின்றன. இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகள் யானைப் பொம்மைகளைக் கேட்டு வாங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு லக்சல நிர்வாக இயக்குனர் அலி அல்ஹாம் நவாஸ் "தினச்செய்தி" க்குக் கூறினார்.

இவர் "தினச்செய்தி" க்கு மேலும் தெரிவிக்கையில், "இதுவரையில் பதின்நான்கு லக்சல விற்பனை நிலையங்கள் நாட்டில் உள்ளன.

மேலும் இரண்டு விற்பனை நிலையங்கள் பொத்துவில் அறுகம்பேயிலும், யாழ்ப்பாணம் நல்லூரிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறினார்.

"யாழ்ப்பாணத்தில் இவ்வாறு லக்சல விற்பனை நிலையம் ஒன்று அமைந்தால், வடபகுதியிலுள்ள கைவினைஞர்களின் கைப்பணிப்பொருட்கள் சகலவற்றையும் கொள்வனவு செய்து, யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாது, இலங்கை பூராகவுமுள்ள எமது விற்பனை நிலையங்களில் விற்க நடவடிக்கை எடுப்போம்" எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் "வடமாகாணத்தில் செய்யப்படும் கைவினைப் பொருட்கள் உலகில் பல முக்கிய நாடுகளில் உள்ள எமது இலங்கைத் தூதரகங்களில் காட்சிக்கு வைக்கப்படும். பல நாடுகளில் விற்பனையும் செய்யப்படும் என்றார்.

கைவினைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கி, சிறந்த முறையில் அவர்கள் தங்கள் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றார்.

இன்று இருபது ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களைத் தற்சமயம் விற்பதாகவும், லக்சல நிறுவனத்தில் இருநூற்று இருபதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும், உத்தியோகத்தர்களும் பணிபுரிவதாகவும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதாகவும் லக்சலவின் நிர்வாக இயக்குனர் கூறினார். இதுவரை காலமும், வடபகுதியிலுள்ள கைவினைஞர்களின் திறமைகள் வெளிக்கொணரச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் வருங்காலத்தில் இவர்கள் செய்யும் சகல கைவினைப் பொருட்களிற்கும் ஊக்கமளித்து, உற்சாகமளிக்க லக்சல திட்டமிட்டுள்ளது என லக்சலவின் நிர்வாக இயக்குனர் "தினச் செய்தி" க்குத் தெரிவித்தார்.

அது மாத்தரிமன்றி, வடபகுதியில் நெய்யப்படும் கைத்தறிச் சேலைகள் மற்றும் இதர சேலை வேலைகளும் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்படும் என்றும் கூறினார்.

நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ள லக்சல காட்சியறையும், விற்பனை நிலையமும் வடபகுதியில் உள்ள கைப்பணிப் பொருட்கள் செய்யும் கைவினைஞர்கள் மத்தியில் ஒரு புதிய உத்வேகத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மார். 13, 2016 அன்று வெளியிடப்பட்டது.